Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24 ரூபா 18.00
දිනමුරසු වාරමලර් ஜூன் 23 - 29, 2005

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 619



## அரசியல் வேட்டுக்களுக்கு மத்தியில் இமயமாக எழுந்து நிற்கும் ஜனாதிபதி

பொது வாழ்வில் நடிக்க மாட்டேன்
விஜேய்

நிறைவேறாத வாக்குறுதிகளும் நீர்க்கதியாகும் மலையகமும்
சிறப்பு அலசல்


ரஜினியின் அடுத்த படம். காத்திருக்கும் தயாரிப்பாளர்கள்

பயிரை மேயும் வேலிகள் பிந்துனுவெவ ஒரு உதாரணம்

சமூகம் மீதான சங்கரின் கோபம்
- அந்நியன்

# தூய மனிதனாக வாழ்வோம்

## ஆன்மீகம்



எங்கும் நிறைந்து, எல்லாம் அறிந்து, யாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கும் பரம்பொருள் அவரவர் எண்ணப்படி அவரவர் வாழ்க்கைக்கு வித்திடுகின்றார். போட்டது முளைக்கும். நாம் எது செய்கின்றோமோ அதனை அடையவே வரும். நாம் செய்யும் நல்வினை, தீவினைப்படியே நமக்குப் பலன் கிடைக்கும்.

களவு செய்பவன் களவு கொடுக்கவும், பிறருக்குத் துன்பம் செய்பவன் தானே துன்பம் அனுபவிக்கவும் நேரும். பணத்துக்காகவும், பதவிக்காகவும் எத்தனையோ பல இழிசெயல்கள் இக்கலியுகத்தில் எப்படியெல்லாமோ திட்டமிட்டு நடைபெற்றுவருகின்றன. இவற்றையெல்லாம் சட்டத்தாலோ சாதுரியத்தாலோ தடுப்பதாகத் தெரியவில்லை. ஆனால், ஆண்டவனின் பார்வையில் இருந்து தப்பவே முடியாது.

ஏனெனில், இம்மண்ணில் நிரந்தரம் நமக்கு எதுவுமே இல்லை. மெய்யானது இறப்பு; பொய்யானது வாழ்வு. வாழும் வரை மத அனுஷ்டானத்தைக் கடைப்பிடிக்கும் தூய மனிதனாக வாழ்வோம்!

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர்- 06.

# வாழ்வும் துதியும்

அன்பானவர்களே! வழிபாடும் துதியும் எமது விசுவாசத்தின் அடித்தளமாய் உள்ளது. ஏனெனில், கடவுளின் பிரசன்னம் வழிபாட்டில் உண்டு. கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள அன்பின் உறவை வழிபாட்டில் கண்டுணரலாம். ஆவியோடும் உண்மையுடனும் தொழுதுகொள்வோரை கடவுள் தேடுகின்றார். அவர்கள் கடவுளை பரிசுத்த ஸ்தலத்திலே காண முடியும். அவரது சன்னிதானத்தில் இவ்வுலகத்திற்கும் எமக்கும் அவர் தரும் சிந்தனையைக் கண்டுணர முடியும். அவரது ஆவியின் வல்லமையைப் பெறமுடியும். ஆமோசின் தீர்க்கதரிசனப்படி "விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து கர்த்தரின் நாமம் எங்கும் விளங்கச் செய்வேன்!" (ஆமோஸ் 9:11) இனிமேல் பலிகள் தேவையில்லை. ஆனால் கடவுளை முழுமனதுடன் துதித்து அவருக்கு வாழ்வினை ஒப்படைத்தல் வேண்டும். கடவுளை மகிமைப்படுத்துவோருடன் அவரைத் தொழுதுகொள்வோரையும் அவர் அரவணைக்கின்றார். "ஆண்டவரே! என் உதடுகளைத் திறந்தருளும் : அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்" (சங். 51:15). துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவனின் சத்தத்திற்கு செவிகொடுத்து அவரின் சாயலில் அவருடன் சேர்ந்து நடந்திடுவோமாக.

ஆர். பாலசந்திரன், கந்தப்பளை.

# அல்லாஹ்வின் அன்பைப் பெறுவோம்

அதிகமானோர் தொழுகையை நிறைவேற்றுகின்றார்கள். அத் தொழுகையைப் பேணுதலாகவும் உள்ளச்சத்துடனும் தொழுதுகொள்ள வேண்டும். யாருக்காகவும் தொழாது அல்லாஹ்வுக்காக மாத்திரமே தொழுதுகொள்ள வேண்டும். யாருக்காக தொழுகையை நீங்கள் நிறைவேற்றினீர்களோ அவர்களிடமே நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள் என நாளை (மறுமையில்) அல்லாஹ் கூறுவான்.


நிய்யத்துக்கே நற் கூலி வழங்கப்படும் என அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. எனவே அல்லாஹ்வுக்காக தொழுகிறேன் என நிய்யத்து வைத்தல் வேண்டும். தொழுகையின் போது அல்லாஹ் எங்களைப் பார்க்கிறான். அவனோடு நாங்கள் உரையாடுகிறோம் என்ற அச்சம் எண்ணத்தில் தோன்ற வேண்டும்.

மேலும் அவர்கள் தங்களின் தொழுகையைப் பேணிப் பாதுகாத்து வருவார்கள், அத்தகையோரே சுவனத்தில் கண்ணியப்படுத்தப்படுவார்கள். (70:34.35)

அத்தோடு தொழுகையின்போது எந்தக் குறைகளையும் ஏற்படுத்தக் கூடாது. குறைவுள்ள தொழுகை அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. திரும்ப அவன் முகத்திலேயே வீசி எறியப்படும். எனவே தொழுகையை நிறைவேற்றும் போது வேறு யாருக்காகவும் தொழாது அல்லாஹ்வுக்கு மாத்திரமே தொழ வேண்டும். முடிந்தளவு எந்தக் குறையுமின்றி மிகச் சிறப்பாகத் தொழுகையை நிறைவேற்ற எம் அனைவருக்கும் அல்லாஹ் அருள்புரிவானாக!

-றஸீன் றஸ்மின், றஹ்மத்புரம்.

## கவிதைப் போட்டி இல.616



பரிசுக்குரிய கவிதை

### இங்கில்லையே...!

ஓ, வெளிநாட்டுக்காரரே!
நீங்கள் சொல்வது
புரிகிறது.
பகைமையை மறந்து
ஒருதாய் மக்கள்போல்
எல்லோரும் ஒரு குடையின்
கீழ் ஒற்றுமையாக
வாழுங்கள் என்றுதானே....?
ஆனால் அதுதான்
இங்கில்லையே....!

– எஸ்.பி.பி. கணேஷ்,
கொழும்பு–02.

### முறை தவறிய முயற்சி

இதைத் தவறவிட்டால்
தவறிவிடும்
அப்பாவின் இறுதிக்
கிரியையும்.
கறுப்புக் குடை
காட்டியாவது
புரிய வைக்கலாமா?
கோச்சு ஓட்டுனருக்கு
என் துக்க செய்தியை.

– எம்.பி. உ.ஜீதுன்,
முள்ளிப்பொத்தானை.

### நிறுத்துங்கள்....!

பச்சைக்கொடி
காட்டி
பாதி உயிர் போச்சு....
எஞ்சியுள்ளோரைக்
காப்பாற்ற.....
காட்டுகிறேன்.....!
கறுப்புக் கொடி....

– கே.மகேஷ்,
ஆரையம்பதி–01.

### எது நிஜம்!

ரயிலை நிற்பாட்டும்
உத்தியா,
உயிரை நிற்பாட்டும்
உத்தியா,
எது நிஜம்!

– வி.இராகுலன்,
ஆரையம்பதி–1

### குடை எதற்கு?

மரணத்தை வேண்டி
நிற்கிறாய்.....
வெயிலுக்கேன் குடை
பிடிக்கிறாய்?

– எம்.எல்.எம்.அஸ்வர்,
பதுளை.

### முயற்சியா - பயிற்சியா!

புகையிரதத்தை
நிறுத்திவிட
இவன் செய்யும்
புதுவித முயற்சியோ?
இல்லை - இது
தற்கொலைக்கு
தயாராகும்
ஒத்திகையின்
பயிற்சியோ?

– காமில் ஜாவித்–பாத்திமா ஹானா,
ஏறாவூர்.

## கவிதைப் போட்டி இல.619



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 29.06.2005

கவிதைப் போட்டி இல.619
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### இலவு காத்த கிளி

இலவு காத்த கிளிபோல
காத்திருந்தேன் - சமாதான
ரயிலுக்காக
ரயில் வந்தபாடில்லை,
வாழ்க்கையைக் கடக்க
வீறு நடை போடுகின்றேன் -
மரணத்தைக்
கையில் ஏந்தி.

– சீ. தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

### பெட்டியில் என்ன பொதி?

நிழல் தரும் குடையையே
வேண்டாமென்று
தண்டவாளங்களில்
காத்திருப்பவன்
உள்ளே பெட்டியில்
வைத்திருப்பது தீர்வுப்
பொதியா?
தீராத பொதியா?

– எஸ்.பி.பாலமுருகன்.

### கறுப்புக் கொடி

பச்ச சிரிப்பால
பரிதவிக்க விட்டவளின்
நெனவு சருகெடுத்து
நெஞ்சிக்குள்ள கூடு
கட்டி
காத்திருந்து காத்திருந்து
கரைஞ்சி போன.....
காலந்தள்ளி.....
கறுப்புக் கொடி காட்டி
காலார நடை பழகி
நெடுந்தூரம் நடந்தாச்சி
நிம்மதியும்
தொலைஞ்சாச்சி
பாவி மவ மனசு மட்டும்
பச்ச கொடி காட்டாம....
எடுத்தெறிஞ்சி
போவதென்ன,
ஏ உசிற எடுப்பதென்ன?

– சிவனு மனோஹரன்,
ஹட்டன்.

### முடிவு.....

குடை பிடிக்கவும் மனமில்லை
வீதியில் நடமாடவும் சுதந்திரமில்லை
தற்கொலைதான் தகுந்த முடிவென்று
புகையிரத வருகைக்காக
காத்திருக்கிறாரோ!

– ரி. சுதன், செங்கலடி.

### பிணமாக்காதே....!

ஏ மனிதா!
குடையைக் காட்டி
ரயிலை நிறுத்தி
குண்டை வெடிக்கவைத்து
பிரயாணிகளைப் பிணமாக்காதே.

– எம்.சி.கலீல்,
கல்முனை – 05.




# உங்கள் பக்கம்

## கல்முனை மாநகர மக்களுக்கு இல்ல இழப்பீடு வழங்குவதில் பாரபட்சம் வேண்டாம்

கடந்த 26.12.2004இல் ஏற்பட்ட கடற்கோள் அனர்த்தத்தால் தமது வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு அவற்றை மீண்டும் நிர்மாணிக்க இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாவை உதவியாக வழங்க அரசு முன்வந்துள்ளது.

இத்தொகை கடற்கரையிலிருந்து 200 மீற்றருக்கு அப்பால் முழுமையாக வீடுகள் அழிந்திருப்பின் அவர்களுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், பகுதியாக வீடுகள் பாதிக்கப்பட்டிருப்பின் அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்படும் என்று நிதியமைச்சர் சரத் அமுனுகம அறிவித்திருந்தார்.

ஆனால், கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கிராம சேவகர்களும் அரச உத்தியோகத்தர்களும் அரசு குறிப்பிட்டுள்ள 200 மீற்றருக்கு அப்பால் என்ற எல்லைக் கோட்டை எவ்வாறு விளங்கிக்கொண்டு இப்பகுதியில் இல்ல இழப்பீடு பெறத் தகுதியானோரைத் தெரிவுசெய்தார்கள் என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

காரணம் கடற்கரையிலிருந்து 200 மீற்றருக்கு அப்பால் எவ்வளவு தூரம் இருப்பவர்களுக்கு இல்ல இழப்பீடு வழங்கப்படும் என்று அரசு வரையறுத்துக் கூறாத போதிலும், இங்குள்ள அரச ஊழியர்கள் ஒரு குறிப்பிட்டவர்களை மட்டும் இனங்கண்டு அவர்களுக்கு இல்ல இழப்பீட்டுப் பணத் தொகையை வங்கிகள் வழங்க சிபாரிசு செய்துள்ளனர்.

இதனால் இப்பகுதியில் கடற்கோள் அனர்த்தத்தினால் 200 மீற்றருக்கு அப்பால் இருந்து வீடுகள் பாதிக்கப்பட்ட பலர் அரசு வழங்கும் இல்ல இழப்பீட்டுப் பணத் தொகையைப் பெறத் தகுதி இருந்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

ஆகவே, கல்முனை மாநகர மக்களுக்கு இல்ல இழப்பீடு வழங்குவதில் பாரபட்சம் வேண்டாம். இல்ல இழப்பீடு பெறத் தகுதியானவர்களின் குடியிருப்புக்களுக்கு உரிய அதிகாரிகள் உடன் சென்று அவர்களின் குடியிருப்புக்களைப் பார்வையிட்டு, அவர்களுக்கு அரசு வழங்கும் பணக் கொடுப்பனவுகளை அரச அதிகாரிகள் பெற்றுக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எம்.சி. கலீல்,
ஹனிபா வீதி, கல்முனை -05


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk


# வாசகர் சாலை

### மக்கள் மனதில் முரசு

முரசே!.....
குற்றங்களை
செய்துவிட்டு
நல்லவர்களைப்
போன்று - முக்காடு
போட்டவர்களை
பத்து... பல நூறுகளை
பாருக்கு விபரித்து
போட்டுத் தாக்கிவிடும்
உன்னுயர்ந்த
சேவையை - காற்றுள்ள வரை
மக்கள் மறக்கவே மறக்கமாட்டார்கள்.
அதற்காக - என்
மனமார்ந்த
வாழ்த்து... வாழ்த்துக்கள்
வாழ்க... வாழ்க.... வாழ்கவே!

அ.கா.மு. றிஸ்வின், மூதூர் –01.

### தித்திக்கும் முரசே!

தித்திக்கும் தினமுரசே
பல இன்னல்களுக்கு
மத்தியிலும் துணிவுடன்
பல சேவைகளை
செய்யும் உன்பணி
தொடர என் வாழ்த்துக்கள்.

பிரியவாசகன் மிலன்ராஜ்,
கொழும்பு

### மகிழ்சிக்கும் முரசே!

அன்பான முரசே!
அதிரடி தொடங்கி காதிலை பூவரை நகைச்சுவை விடயங்களைத் தரும் உன் சேவை எமக்கு என்றும் தேவை காலத்தின் தேவையறிந்து பல செய்திகளை அவ்வப்போது தந்து எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறாய் வாழ்க உன்சேவை.

வாசகன், முருகநேசன், நுவரெலியா.

தூரங்கள்
எதுவானாலும்
துணிவுடன் செல்லும்
முரசே!
காலங்கள்
கடந்தாலும்
காதில் பல
செய்திகளை
போட்டு வைக்கும்
காதிலை பூ
கந்தசாமிக்கு
ஒரு ஓ
போடுகிறேன்.
வளர்க உன் பணி.

என். ராமநாதன்,
பதுளை.

### பிரிய முரசுக்கு!

தினமுரசு பிரிய வாசகி எழுதிக் கொள்வது கடல் கடந்து வாழும் எமக்கு தாயகத்தின் செய்திகளை துணிவுடன் தருகிறாய். அதனைத் படித்து நாம் நிலைமைகளை அறிந்து கொள்கிறோம். அதுவே எமக்கு ஆறுதலை தருகிறது. தொடர்ந்தும் உன்பணி தொடர என் வாழ்த்துக்கள்.

எம். ஜானகி, அவுஸ்திரேலியா

# வழிக்கு வருகிறது புலி; தடுக்க நினைக்கிறது ஜே.வி.பி.
## சிலிர்த்து நிற்கிறார் ஜனாதிபதி; பலியாகப் போவது யார்?

வடக்கு, கிழக்குக்கான உத்தேச சுனாமி நிவாரண சபை புலிகள் இயக்கத்தை வழிக்குக் கொண்டுவர உதவுமா வென்ற பலத்த கேள்வி சிங்களத் தீவிர தேசிய வாதிகளிடத்தில் மட்டுமல்ல, நியாயபூர்வமாகச் சிந்திக்கும் தமிழ், முஸ்லிம் தரப்புகளிடமும் எழுந்துள்ளதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். கடந்த 19ஆம் திகதி கிளிநொச்சியில் வைத்து தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு தமிழ்ச்செல்வன் அளித்த பேட்டியில் அரசாங்கத்தின் நோக்கம் குறித்து மின்னல் பாணியில் அவர் தெரிவித்த கருத்து இச் சந்தேகத்தை எழுப்புகிறது என்றும் கூறப்படுகிறது.

சர்வதேச அழுத்தத்தின் காரணத்தினாலேயே வடக்கு, கிழக்குக்கான உத்தேச நிவாரண சபை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஜனாதிபதி கைச்சாத்திடுகிறார். எனவே ஆட்சியில் பங்காளிக் கட்சியாக விருந்த ஜே.வி.பி.யா? அல்லது சர்வதேச உதவியா? என்ற இழுபறியில் ஜே.வி.பி.யை ஓரங்கட்டுவதற்காகவே ஜனாதிபதி இந்த சுனாமி நிவாரண சபை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகிறார் என்று தமிழ்ச்செல்வன் அப் பேட்டியில் கூறியுள்ளார். அதுமட்டுமல்ல, அப்பேட்டி நிகழ்ச்சியில் பார்வையாளர்களாகக் கலந்து கொண்ட பொதுமக்களென்று கூறப்படும் சிலர் புலிகள் யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கூறியபோது, "தலைமை உரிய நேரத்தில் உரிய நடவடிக்கையை எடுக்கும்" என்று அவர் பதிலளித்ததின் மர்மம் என்ன என்றும் அவதானிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

சமாதான விரும்பிகள் கூறுவது போல் சர்வதேச அழுத்தத்திற்கு இடம் கொடுத்து புலிகள் சமாதான வழிக்குத் திரும்பலாம் எனக் கூறப்படுகிறது. சில வேளைகளில் தமது போராளிகளின் மனநிலையை குழப்பியடிக்காமல் பாதுகாப்பதற்காக தமிழ்ச்செல்வன் அவ்வாறு கூறி இருக்கலாமென்றும் வேற சிலர் கூறுகின்றனர். ஆளும் தரப்பை விட்டு எதிர்தரப்புக்கு ஜே.வி.பி. மாறியிருந்தாலும் ஆட்சியைக் கவிழ்க்கவோ ஐ.தே.க.வை ஆட்சிக்குக் கொண்டுவரவோ உதவமாட்டாது என்று தெரிவித்திருக்கிறது. இது உண்மையானால் ஆட்சிக் கவிழமாட்டாது என்று கூறலாம். ஆனாலும் சிங்களத் தேசியவாதம் தீவிரம் பெற்றிருக்கும் இத்தருணத்தில் உள் நோக்கங்களோடு அரசியல் கட்சிகள் செயற்படுவதால், என்ன நடக்கும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டு மென்றும் அவதானிகள் கூறுகின்றனர். அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டு வருவதன் மூலமோ அல்லது நீதிமசோதா ஒன்றில் அரசைத் தோற்கடிப்பதன் மூலமோ ஆட்சியைக் கவிழ்க்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோதக் குழுவுக்கு சட்டபூர்வ அந்தஸ்து

வருடக் கணக்காக ஆயுதமுனையில் அப்பாவி மக்களை அச்சுறுத்தி வைத்திருக்கும் குழு ஒன்றுடன், சுனாமி நிவாரண சபை ஒப்பந்தத்தை அரசாங்கம் கைச்சாத்திடுவதானது அந்த ஆயுதக்குழுவுக்கு சட்டபூர்வ அந்தஸ்தை வழங்குவதாகவே அமையுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். இது புலிகளின் செயற்பாடுகளுக்கு சட்டபூர்வ அந்தஸ்து வழங்குவதாகவே அமையும். தமிழ்ப் பிரதேசங்களில் ஜனநாயக செயற்பாடுகளுக்கு அனுமதி அளிப்பது, படுகொலைகளை நிறுத்துவது, பிள்ளைகளைக் கடத்துவதை நிற்பாட்டுவது ஆகிய மூன்று நிபந்தனைகளுக்கு இணங்கினால் எவரையாவது யாழ்ப்பாண மன்னனாக நியமிப்பதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை என்றும் அவர் கூறியுள்ளார். சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கின் கள நிலைமைகளைச் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளவில்லைப் போல் தெரிகிறது. புலிகளுக்கு விட்டுக் கொடுப்பதன் மூலம்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாமென்று ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள் போல் தெரிகிறது. ஆனால் புலிகளின் தந்திரோபாயம் பற்றி உலகம் இன்னமும் அறிந்து கொள்ளவில்லைப் போல் தெரிகிறது.

## இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாவது தாமதமாகலாம்

உத்தேச இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தைக் கண்டித்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வைகோ, பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ள போதிலும், இந்த ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதற்கான வேலைகள் தொடர்வதாகப் புதுடில்லி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. காங்கிரஸ் கட்சியின் தலைமையில் இயங்கும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி இந்திய மத்திய அரசில் ஆட்சி செலுத்தி வருகிறது. இந்தக் கூட்டணியில் வைகோவின் கட்சியும் பங்காளிக் கட்சியாக இருந்து வருகிறது. வைகோவின் கோரிக்கை குறித்து காங்கிரஸ் கட்சிப் பேச்சாளர் ஆனந்த சர்மாவிடம் கேட்டபோது, "மத்தியில் ஆட்சி அமைத்துள்ள முற்போக்குக் கூட்டணியில் பங்காளிக் கட்சித் தலைவர் என்ற வகையில் அவர் ஏதாவது கோரிக்கைகளை முன் வைக்க விரும்பினாலோ அல்லது பிரச்சினைகளை எழுப்ப விரும்பினாலோ அதனை அவர், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் இணைப்புக் கமிட்டிக் கூட்டத்தில் முன்வைக்க முடியும். அதுவே பிரச்சினைகளை முன்வைப்பதற்கான சரியான இடமாகும்" என்று சொன்னார். இந்தியாவின் தேசிய நலன்களோடு இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடும் விடயம் சம்பந்தப்பட்டிருப்பதால் இது உகந்த விவகாரமல்ல என்று வைகோவுக்கு மரியாதைபூர்வமாகத் தெரிவிக்கப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வார் சிங் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் உத்தேச இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமென்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. 14 வருடங்களுக்கு முன்னர் பிரதமர் ராஜீவ் காந்தி, புலி இயக்கத்தின் தற்கொலைக் குண்டுதாரியால் தமிழகத்திலுள்ள ஸ்ரீபெரம்புதூரில் கொல்லப்பட்டமை, தமிழக மக்களை மட்டுமல்ல, முழு இந்திய மக்களையுமே ஆத்திரப்பட வைத்துள்ளது. இதற்கிடையில் தமிழக மாநிலச் சபைத் தேர்தல்கள் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் நடைபெற உள்ளன. காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி தொகுதி இடைத்தேர்களில் ஜெயலலிதாவின் அ.தி.மு.க. வெற்றி பெற்றுள்ளதால், இவ்வருடத்திற்குள்ளேயே மாநிலத் தேர்தலை நடத்துமாறு அவர் கோரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதுவரை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவது தாமதமாகலாமென ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## சமாதான முன்னணி பாராட்டு

உத்தேச வடக்கு, கிழக்கு நிவாரண சபையை அமைக்க ஜனாதிபதி எடுத்துவரும் முயற்சியைப் பாராட்டி மக்கள் சமாதான முன்னணி என்ற அமைப்பு ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ளது. இந்த அமைப்பில் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த இருநூறுக்கு மேற்பட்ட அமைப்புகள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் பயிற்சி

இந்தியாவின் பல மாநிலங்களிலுமுள்ள இராணுவ, கடற் படை, விமானப் படை முகாம்களில் தற்போது 400க்கு மேற்பட்ட இலங்கை ஆயுதப் படைகளைச் சேர்ந்தவர்கள் பயிற்சிபெற்று வருகின்றனர். ஆயிரக் கணக்கான அதிகாரிகளும் சிப்பாய்களும் ஏற்கெனவே பயிற்சிபெற்று வெளியேறியுள்ளனரென்று இலங்கையின் இராணுவ விடயங்கள் பற்றிப் பேசவல்ல அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## சுபத்திரன் ஞாபகார்த்த நினைவாகக் கூட்டங்கள்

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பிராந்திய அமைப்பாளரான சுபத்திரன் ரொபர்ட்டின் ஞாபகார்த்த நினைவு நிகழ்வுகள் கடந்த 14ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன. ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.பி.டி.பி. ஆகியவற்றின் யாழ்.கிளைக் காரியாலயங்களில் அமரருக்கு நினைவஞ்சலி செலுத்தும் கூட்டங்கள் நடைபெற்றன. 2003ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14ஆம் திகதி இவர் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தமை குறிப்பிடத் தக்கது.

## புலிகளுக்கு பயணத்தடை சுவிஸ் நாடு அமுல்படுத்தும்

அண்மையில் கிளிநொச்சிக்குச் சென்று தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய இலங்கையிலுள்ள சுவிஸ் நாட்டுத் தூதுவர் படுகொலைகளை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தபோதும், படுகொலைகள் தொடர்வது குறித்து தனது அதிருப்தியை மீண்டும் வெளியிட்டுள்ளார். சிறுவர்களைக் கடத்திச் செல்லுவதை நிறுத்துமாறும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடக்குமாறும் கூடக் கோரிக்கை விடுத்திருந்தார். இவை எதனையும் புலிகள் மதித்து நடப்பதாகத் தெரியவில்லையே என்று கொழும்பிலுள்ள சுவிஸ் நாட்டுப் பேச்சாளர் மார்ட்டினா ஸ்ருசிங்கரிடம் கேட்டபோது "இது பற்றிய தகவல்கள் எமக்கு வந்துகொண்டிருக் கின்றன. புலி இயக்கத் தலைவர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் தடை செய்யப்பட வேண்டுமென்று சிறுவர் விவகாரங்கள் தொடர்பான ஐ.நா.வின் விசேட பிரதிநிதி ஒலாரா ஒட்டுண்ணு, ஐ.நா. பாதுகாப்புச் சபைக்குச் சமர்ப்பித்த அறிவுறுத்தலை அமுல்படுத்துவது பற்றி ஆராய்ந்து வருகிறோம்" என்று தெரிவித்தார். கடந்த பெப்ரவரி மாதம் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு ஒலாரா ஒட்டுண்ணு சமர்ப்பித்த அறிக்கையில் புலிகள் மீது கடும் நடவடிக்கையெடுக்கக் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிறுவர்கள் கடத்தல்

காரைநகரைச் சேர்ந்த தோப்புக்காடு, மாத்தூரி ஆகிய இரண்டு கிராமங்களிலிருந்து பதினைந்து சிறுவர்கள் ஆயுதப் பயிற்சிக்காகப் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர். சிறுவர்களைப் பிடித்துச் செல்லும்போது "எங்கள் பாதுகாப்புக்கு நாங்கள்தான் பொறுப்பு" என்று கூறிவிட்டுச் சென்றிருக்கின்றார்கள்.

## வெட்டிக் கொலை

அக்கரைப்பற்றைச் சேர்ந்த அழகையா ரவிச்சந்திரன் (38 வயது) என்பவர் 19ஆம் திகதி வெட்டிக் கொல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அக்கரைப்பற்று வாச்சிக்குடா வைச் சேர்ந்த அவர், ஈ.பி.டி.பி. உறுப்பின ரென்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பிலிருந்து அக்கரைப்பற்று வந்த இவர், நலன்புரி நிலையத்தில் வாழும் தனது குடும்பத்தவர்களைப் பார்க்கச் செல்வதாகக் கூறிச் சென்றவரே காணமல் போயிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

## நயினை உற்சவத்தில் சிங்கள, தமிழ் மக்கள்

நயினை நாகபூசணி அம்மன் தேவஸ்தான தேர்த்திருவிழா கடந்த 21ஆம் திகதி மிகச்சிறப்பாக இடம்பெற்றது. அத்துடன் பொசன் பூரண தினத்தை முன்னிட்டு பெருந்திரளான மக்கள் குறிப்பாக தென்னிலங்கை பக்தர்கள் நயினா தீவு நாக விகாரைக்கு யாத்திர வந்திருந்தனர். இவ்விரண்டு சமய நிகழ்வுகளின் காரணமாக தமிழ், சிங்கள இனத்தைச் சேர்ந்த பௌத்த மற்றும் இந்து மக்கள் பல்லாயிரக்கணக்கில் அவ்விடத்தில் திரண்டிருந்தனர். குறிக்கட்டுவான் இறங்குதுறையிலிருந்து நயினா தீவு இறங்குதுறை வரை இடைவிடாமல் பயணிகள் படகுகள் மாறி மாறி சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

இப்படகுச் சேவைக்கென மேலதிகமாக தனியார் படகுகளும் பெறப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பொசன் போயா தினத்தை முன்னிட்டு யாழ். நகர மத்தியல் அமைந்துள்ள நாக விகாரையில் பக்தர்களுக்கான மதிய உணவுத்தானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்திருந்த ஏராளமான பக்தர்களும் பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸார் ஆகியோருடன் பெருந்தொகையான தமிழ் மக்களும் சமய அனுஷ்டானங்களின் பின் ஒன்றாகக் கூடி அமர்ந்து உணவருந்திச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

## படுகொலைகளை மூடிமறைக்கும் முயற்சி
## பொய்ப் பிரசாரங்களைக் கண்டித்து ஈ.பி.டி.பி. அறிக்கை

மன்னார் நகரில் புலிகளின் இரு அலுவலகங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதனுடன் ஈ.பி.டி.பி.யை சம்பந்தப்படுத்தி பொய்ப்பிரசாரங்களை அவிழ்த்துவிடுவதில் புலிகள் தீவிரமாக இருப்பது, மக்களையும் சமாதான சக்திகளையும் தவறாக வழிநடத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது. புலிகளின் இத்தகைய பொய்ப்பிரசாரம், ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மீதும் மாற்று ஜனநாயக சக்திகள் மீதும் புலிகள் தொடர்ச்சியாக நடாத்திவரும் படுகொலைகளையும் குண்டுத் தாக்குதல்களையும் மூடிமறைக்கும் உள்நோக்கத்தைக் கொண்டுள்ளது எனவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

"படுகொலைகளின் மீது நம்பிக்கை கொண்டு அதனூடாக ஈ.பி.டி.பி.யின் அரசியலை நிலைநிறுத்தவேண்டிய தேவை ஈ.பி.டி.பி.க்கு இல்லை. இதை நாட்டு மக்களும் சர்வதேச சமூகமும் நன்கு அறிந்து வைத்துள்ளனர். புலிகளின் பொய்ப் பிரசாரங்கள் ஒருபோதுமே வெற்றியளிக்கப் போவதில்லை. உண்மை நிலையை தமிழ்ப் பேசும் மக்களும் நன்கு அறிவார்கள். புலிகள் தொடர்ந்தும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மற்றும் மாற்று ஜனநாயக சக்தி மீதான படுகொலைகளையும் கைவிடத் தயாராக இல்லை! தாய் வீட்டில் இருந்தபோது, ஈ.பி.டி.பி.யின் உறுப்பினரான 38 வயதுடைய அழகையா ரவிச்சந்திரன் புலிகளினால் கடத்திச்செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் மீது புலிகள் நடாத்தியுள்ள படுகொலையானது புலிகளின் உண்மை முகத்தை நிரூபித்துள்ளது. புலிகளின் படுகொலை கலாசாரமானது நிறுத்தப்படுவதற்கு சர்வதேச சமூகம் புலிகள் மீது அரசியல் அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்றும் வெளியிடப்பட்டுள்ள அவரின் அறிக்கையில் -

"1987ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அடுத்து தமிழ்ப் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை ஜனநாயக வழி மூலமும், மக்களின் ஆணை மூலமும் வென்றெடுக்கும் பாதையை ஈ.பி.டி.பி. தனது அரசியல் வழிமுறைகளாகக் கொண்டுள்ளது. படுகொலைகளின் மூலமும் ஆயுத வழிமுறைகளின் மூலமும் தமிழ் மக்களுள் புலிகள் கட்டவிழ்த்துவிடும் கொலைக் கலாசாரத்தைக்கூட, ஈ.பி.டி.பி. வன்முறை வழியினூடாக எதிர்கொள்ள நினைத்ததில்லை. ஏனெனில், தமிழர்களை தமிழர்களே படுகொலை செய்யும் அவலத்தை தமிழ் சமூகத்திற்குள் இருந்து உடைத்தழித்துவிட வேண்டுமென்பதே ஈ.பி.டி.பி.யின் அரசியல், கருத்தியல் நிலைப்பாடாகும். அண்மையில் வவுனியாவில் கட்சி அலுவலகத்தின் மீது புலிகள் நடாத்திய படுகொலை தாக்குதலில், ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த படை வீரர் ஒருவரும் மரணமடைந்தனர். இப்படுகொலையை ஈ.பி.டி.பி. மீது புலிகள் கட்டவிழ்த்து விட்டதற்கு வன்னி மக்கள் தமது எதிர்ப்பினை புலிகளுக்குத் தெரிவித்துவரும் நிலையில், பொய்ப்பிரசாரங்களின் ஊடாக புலிகள் மக்களைத் திசை திருப்ப முயல்கின்றனர். இதனூடாக மேலும் மேலும் படுகொலைகளை மேற்கொள்ள புலிகள் முனைகின்றனர். ஜனநாயக அரசியல் விழுமியங்கள் மீது நம்பிக்கை கொண்ட ஈ.பி.டி.பி., வன்முறை வழியை ஒருபோதுமே நாடாது. ஈ.பி.டி.பி.யின் மக்கள் மீதான உண்மையான நேசிப்பையும், மக்களுக்கும் ஈ.பி.டி.பி.க்குமான உறவினையும் இத்தகைய பொய்ப்பிரசாரங்களும் படுகொலைகளும் ஒருபோதுமே வெற்றிகொள்ளபோவதில்லை" எனவும் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

## கிளிநொச்சியில் ஹெல்கிசன் வற்புறுத்திய முக்கிய விடயங்கள்:

இலங்கைக்கு வருகைதந்துள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் கொழும்பில் ஜனாதிபதி, பிரதமர், ரவூப் ஹக்கீம் உட்பட பல்வேறு அரசியல் தலைவர்களைச் சந்தித்த பின்னர் கிளிநொச்சியில் புலி இயக்கத் தலைவர்களைச் சந்தித்துப் பேசியபோது பல முக்கிய விடயங்கள் பற்றி ஆராய்ந்துள்ளார். அரசாங்கத்தின் சில திருத்த யோசனைகள் பற்றியும் அவர் புலி இயக்கத் தலைவர்களோடு பேசியதாகத் தெரியவருகிறது. அரசும் புலிகளும் சுனாமி நிவாரண சபைக்கான புரிந்துணர்வு ஒப்பந்த யோசனைகளுக்கு இணக்கம் தெரிவித்த போதும் வேறு சில திருத்தங்கள் செய்வது சம்பந்தமாகவும் விதார் ஹெல்கிசன் கலந்துரையாடினாரென்று கிளிநொச்சித் தகவல்கள் தெரிவித்தன.

இதே வேளை, அரசாங்கமும் புலிகளுக்குமிடையில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக்கூடிய கருத்துக்களை வெளியிடுவது தவிர்க்கப்படுவது நல்லதென்றும் ஹெல்கிசன் வலியுறுத்தியதாகவும் தெரியவருகிறது. இதே வேளை 'நுஆ' தலைவியும் அமைச்சருமான பேரியல் அஷ்ரப் ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம் பிரதிநிதித்துவம் பற்றிப் பேசியதோடு விதார் ஹெல்கிசனிடம் முன்வைப்பார் என்றும் தெரியவருகிறது. சுனாமி நிதிக் கையாள்கையை உலகவங்கி மேற்பார்வை செய்யவிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## பொதுக்கட்டமைப்புப் புறக்கணிப்புகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது!

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

சுனாமி பேரலைகளினால் இலங்கையின் கரையோரப் பகுதிகள் பெரும் சேதங்களுக்கு முகம் கொடுத்ததுடன் 42,000ற்கும் மேற்பட்ட மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான சொத்தழிப்புகளும் ஏற்பட்டன. இவற்றுக்கும் மேலாக இலங்கையின் வரைபடத்தையே மாற்றம் காணச் செய்தது. அச் சேதங்களில் இருந்து மக்களை இயல்பு வாழ்க்கைக்குத் திருப்புவதும், அழிந்த கட்டமைப்புக்களை மீளக் கட்டியமைப்பதுமான வேலைத்திட்டமானது அரசினதும் புலிகளினதும் அங்கத்துவ இழுபறியில் 06 மாதங்களைத் தாண்டிவிட்டுள்ளது. இலங்கையைப் பற்றிப் பிடித்துக் கொண்டுள்ள இனவெறி, எதிர்ப்புவாதம் என்பன சிறுபான்மையினர் குறித்த எந்தவொரு தீர்மானத்தையும் நிறைவேற்ற தடையாகவே இருந்து வந்துள்ளன. ஆனால் பொதுக் கட்டமைப்பைப் பொறுத்தவரை ஜனாதிபதி சந்திரிகாவின் உறுதியும், துணிவும் இலங்கை வரலாற்றில் புதிய சகாப்தத்தை உருவாக்கியுள்ளன. அதற்குக் கிடைத்த வெற்றியாக மீண்டும் ஒரு போர் என்ற சூழலில் இருந்து இலங்கை தேசம் ஆறுதல் மூச்சு விடக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவின் துணிகரமான உறுதியான தற்போதைய நிலைப்பாடு போல் கடந்த காலங்களில் இருந்த ஆட்சியாளர்களுக்கும், ஜனாதிபதிகளுக்கும் இருந்திருக்குமேயானால் நடந்து முடிந்த பாரிய யுத்த அழிவுகளை தடுத்திருக்க முடியும். அதன் யதார்த்தத்தை ஜனாதிபதி சந்திரிகாவின் தற்போதைய நிலைப்பாடு தெளிவுபடுத்துகின்றது. இதனை வரவேற்கின்ற அதேவேளை, சுனாமியினால் கிழக்கு மாகாணத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்தினை அங்கீகரிக்கும் விதமான பிரதிநிதித்துவ அந்தஸ்தானது சந்தேகங்களை ஏற்படுத்துகிறது. 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்பது போல தமிழ் மக்களின் சார்பில் புலிகளை உள்வாங்கிய பொதுக் கட்டமைப்பில், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளை அந்தஸ்தான அதிகாரத்தில் கவனம் செலுத்தாமையானது அரச தரப்பின் அசமந்தப்போக்காகவே முஸ்லிம் மக்களால் கருதப்படும். தமிழ் தரப்புக்குள்ளேயே மாற்று ஜனநாயகச் சக்திகளை ஏற்றுக்கொள்ளாத புலிகளிடம் முஸ்லிம் மக்கள் நியாயங்களை எதிர்பார்க்க முடியாது. அது சாத்தியமும் அல்ல. ஆனால், இலங்கை வாழ் அனைத்து மக்களின் உரிமைக்கும், இறைமைக்கும் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கும் அரசியல் தலைமைப்பீடம் முஸ்லிம்களின் நியாயமான வேண்டுகோளை அவசியம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இல்லாவிடின் சமாதானப் போர்வையில் தொடருகின்ற படுகொலைகள் போல் பொதுக் கட்டமைப்பு என்ற போர்வையில் சமூகங்களின் அபிலாஷைகள் புறக்கணிக்கப்படலாம். ஆகவே பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் பிரதேசங்களுக்கும் எவ்வித பாகுபாடும் இன்றி, புறக்கணிப்புகளுக்கு இடம் தராத வகையில் மீள் கட்டுமானப் பணியிலும், நிவாரண உதவிகளிலும் உத்தேச பொதுக் கட்டமைப்பு செயலாற்ற வேண்டும் என்பதே காலத்தின் அவசியமாகும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னரேயே முன்வைக்கப்பட்ட ஜே.ஆரின் சிங்களம் மட்டும் யோசனை, ஜி.ஜி.யின் ஐம்பதுக்கு ஐம்பது போன்றவையெல்லாம் இந்த நாட்டில் இனப் பிரச்சினையைக் கருக்கட்ட வைத்தனவென்று கூறலாம். இவை போன்ற பல விடயங்கள் கருவில் உருவாகி, இந்திய வம்சாவளியினரின் வாக்குரிமை பறிப்பு, சிங்களம் மட்டும் சட்டம், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், தரப்படுத்தல் போன்றவையும் தமிழர்கள் மீதான இனவெறித் தாக்குதல்களும் அந்தக் கருவில் உருவான இனப் பிரச்சினையைக் கர்ப்பிணியாக்கி உப்பிப் பெருக்க வைத்தது. மிதவாதத் தமிழ்த் தலைவர்கள் இயற்கையாகவே சுமுகமாகப் பிரசவம் நிகழுமென எதிர்பார்த்தார்கள். முடியவில்லை. தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தாங்கி 'சிசேரியன்' முறையில் அறுவைச் சிகிச்சை மூலம் பிரசவம் பார்க்கத் தலைப்பட்டபோதே, சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலான தொப்புள் கொடி உறவு அறுபடத் தொடங்கி விட்டது.

தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களோடு அரசியல் அரங்குக்கு வந்தபோதுதான் இனப் பிரச்சினைத் தீர்வு பாரிய 'பிரசவ வேதனை' என்பதைச் சிங்களத் தலைவர்கள் காலம் தாழ்த்தியாவது உணர்ந்து கொண்டனர். பிரச்சினைக்கு நியாயமான முறையில் தீர்வு தரச் சிங்களத் தலைமை முனைந்தபோது 'புலிப் பாய்ச்சல்' நடத்த மறுதரப்பு முனைந்ததுதான் வேதனையானது. மாற்றானை

சோதனையெழுதி, சித்தி பெறும் விவகாரமுமல்ல. 'அரை வேக்காட்டு ஞான சூனியங்கள்' அடிமட்ட மக்களைக் குழப்பக் கூடாது.

நாட்டின் இன்றைய பிரதான முரண்பாடு என்னவென் பதைச் சகல அரசியல் கட்சிகளும் முதலில் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்று இந்த நாட்டின் பிரதான முரண்பாடு தேசிய இனப் பிரச்சினை. அறுபது வருடங் களுக்கு முன்னர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் இந்த நாட்டை ஆட்சிபுரிந்தபோது, இந்த நாட்டில் பிரதான முரண்பாடாகத் திகழ்ந்தது ஏகாதிபத்திய சக்திகளுக்கும், நாட்டு மக்களுக்கும் இடையிலான போராட்டமே. இவற்றை ஜே.வி.பி. தோழர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய தேவை கிடையாது. வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்களோ அல்லது

# ஊரிலிருந்து....



இண்டைக்கு காவி கட்டினவை அரசியலில இறங்கி நாடு படுகிற பாடு தெரியும்தானே? கௌதமரின்ர போதனைகளைப் போதிக்க வேண்டியவை, வேட்டியை மடிச்சுக்கட்டி இறங்கினமாதிரி காவிய மடிச்சுக்கட்டி ஊர்வலம், போராட்டம், உண்ணாவிரதம் எண்டு இறங்கி விட்டினம்.

ஆனா, இவையின்ர இன்னுமொரு முகத்தைப் பார்த்து ஆச்சரியமடைஞ்சு போனன். தென் ஆசியாவில பெரிய ஒரு இரத்த வங்கி கொழும்பில உருவாக்கிறது சம்பந்தமாய் ஒரு கூட்டம் கடந்த வாரம் B.M.I.C.H. இல நடந்தது. அதில 25 தடவைகளுக்கு மேல இரத்த தானம் செய்த 500 பேருக்கு மேல கலந்துகொண்டினம். அதிலயும் கூடின ஆக்கள் இதே காவி உடை தரித்தவைதான். கிரிக்கட்டில செஞ்சரி அடிச்ச மாதிரி மாதம்பே விஜித்தசிறி தேரோ எண்டவர் 102 தரம் இரத்த தானம் செய்திருக்கின்றார். அண்டைக்கு 103ஆவது தடவையும் போறன் எண்டு ஜம் எண்டு சொன்னாராம்.

இலங்கை முழுவதிலையும் இருந்து கிடைச்ச புள்ளி விபரங்களைப் பார்த்தா, காவி உடை தரிச்சவைதான் இரத்த தானம் செய்யிறதில பரவலாக முன்னிற்கினம். இந்த விபரங்களைக் கேட்டு கூட்டத்தில கலந்துகொண்ட உலக வங்கி, உலக சுகாதார நிறுவன அதிகாரிகள் வாயடைச்சுப் போய் நிண்டிச்சினமாம்.

வைத்திருக்கும் புலிகள் இயக்கம் பொதுக்கட்டமைப்பில் தமக்குச் சமபங்குதார அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்றும் வெளிநாட்டு உதவிகள் தமக்கு நேரடியாக வழங்கப்பட வேண்டுமென்றும் விடுத்த கோரிக்கைகள் நியாயமற்றவை.

தேசிய மட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும், மாவட்ட மட்டங்களிலும் மூன்று கமிட்டிகளை அமைத்து நிவாரணப்

# அரசியல் வேட்டுக்களுக்கு மத்தியில் இமயமாக எழுந்து நிற்கும் ஜனாதிபதி

மண்டியிட வைக்க முனைந்த புலிகள், ஏகபோகச் சண்டியர்களாகி சகோதர இயக்கங்களையெல்லாம் மண்டையில் போட்டு மடக்க முனைகிறார்கள். ஈ.பி.டி.பி.யைத் தவிர ஏனையவை சேடம் இழுத்துக் கொண்டிருக்கின்றன என்பது உண்மைதான். ஆனாலும் சகல சகோதர இயக்கங்களின் ஆதரவை இழந்துவிட்டு, கிழட்டுச் சிங்கமாகி நிற்கும் புலிகள், இன்னமும் கர்ஜித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் பாவம் பற்களை இழந்து நிற்கும்



சந்திரிகா

இந்தக் கிழட்டுச் சிங்கங்களால் இனியும் நரவேட்டையாட முடியாதென்பதைக் காலம் கட்டாயமாக உணர்த்தியே தீரும்.

இப்படிச் சொல்வதற்கும் காரணம் இருக்கிறது. கருவில் உருவாகிப் பெரிதாகி உப்பிப் பெருத்த இனப் பிரச்சினை இன்று சுனாமிப் பேரலையில் வந்து நிற்கிறது. வடக்கு, கிழக்கில் கடற் பேரலை நடத்திய சூறாவளித் தாக்கத்தால் ஆளும் கூட்டணி அரசு ஆடிப் போய் நிற்கிறது. ஒன்பது கட்சிகளை உள்ளடக்கிய ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து, அதன் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. வெளியேறி, வெளியில் நின்றுகொண்டு சிங்களத் தேசியவாத சக்திகளுக்கு விசிலடித்துக் கொண்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தரப்பில் 141 எம்.பி.க்களும், ஆளும் கட்சித் தரப்பில் 83 எம்.பி.க்களும் அமர்வதற்கு வடக்கு, கிழக்கைத் தாக்கிய கடற் பேரலையே காரணமாகிவிட்டதென்பது வேதனையான விடயம்.

சுனாமிப் பொதுக்கட்டமைப்பில் பயங்கரவாதிகளோடு பங்கு பற்றக்கூடாது என்கிறார்கள் நேற்றைய பயங்கரவாதிகளான ஜே.வி.பி.யினர். ஐம்பதாயிரம் சிங்கள இளைஞர்களை வடக்கு - கிழக்கு யுத்த முனைக்கு அனுப்புவோமென்று தேர்தல் மேடைகளில் வீர வசனம் பேசியவர் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க. இவரால் ஐந்து சிங்கள இளைஞர்களைக் கூட யுத்த முனைக்கு அனுப்ப முடியவில்லை. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பது மார்க்சிஸத்தின் அடிப்படைக் கோட்பாடுகளிலொன்று. மார்க்சிஸம் ஒரு சமூக விஞ்ஞானம். அது ஒரு நாட்டின், தேசத்தின் ஸ்தூல நிலைமைகளுக்கேற்ப பிரயோகிக்கப்பட வேண்டியது. அது வெறும் புத்தகவாதக் கோட்பாடல்ல. அல்லது வகுப்பறைப் பாடங்களைப் போல் வருடக் கணக்காகப் படித்துவிட்டு மூன்று மணித்தியாலச்

வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர் களோ புலிகளின் துப்பாக்கிகளுக்குப் பயந்து வாய்மூடி மௌனிகளாக வாழ்கிறார்கள். அவர்கள் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக சாப்பிடுவதற்கும் அழுவதற்குமே வாய்களைத் திறந்து கொண்டிருக்கிறார்கள். சுதந்திரமாக வாயைத் திறந்து கருத்துச் சொன்னால் கழுத்துப் போய் விடுமென்று வடக்கு, கிழக்கில் நிலவிய நிலைமை அந்த எல்லைகளைத் தாண்டி இன்று கொழும்புவரை வந்துவிட்டது. இந்த நிலையில் புலிகளின் அராஜகங்கள், அடாவடித்தனங்களுக ்கெதிரான போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டு மென்பதில் எவ்வித இரண்டு கருத்துக்களுக்கு இடமிருக்க முடியாது. தமிழ்த் தீவிர தேசியவாத சக்திகளுக்குத் தவறாகத் தலைமை கொடுக்க புலிகள் இயக்கம் முயற் சிப்பது போல, சிங்களத் தீவிர தேசியவாதிகளை அணிதிரட்டி ஆட்சிப் பீடத்தை நோக்கி நகர ஜே.வி.பி. முனைகிறது.

ஆளும் கூட்டமைப்பிலிருந்து ஜே.வி.பி. யின் வெளியேற்றம் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பது உண்மையே. ஆட்சி கவிழுமா? அரசியல் மாற்றம் ஏற்படுமா? சுனாமிப் பொதுக் கட்டமைப்பு அமைக்கப்படுமா? அமைக்கப்பட்டால் நாடு பற்றி எரியுமா? மிகத் துணிச்சலுடனும் உறுதியுடனும் திடசங்கற்பத்துடனும் செயற்படும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா ஆழிப் பேரலை நிவாரண சபையை முன்னிறுத்தி, அதனை ஏறுபடியாகப் பாவித்து சமாதான - சகஜீவன வாழ்க்கை முறையை ஏற்படுத்துவதில் வெற்றி காண்பாரா? இவையெல்லாம் இன்று எழுந்திருக்கும் பிரதான கேள்விகள். எல்லாவற்றுக்கும் மேலாகப் பொதுக் கட்டமைப்பு என்றால் என்ன? அது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதா? என்பனவற்றையெல்லாம் பார்க்க வேண்டும்.

**தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களோடு அரசியல் அரங்குக்கு வந்தபோதுதான் இனப் பிரச்சினைத் தீர்வு பாரிய 'பிரசவ வேதனை' என்பதைச் சிங்களத் தலைவர்கள் காலம் தாழ்த்தியாவது உணர்ந்து கொண்டனர்**

சுனாமிப் பேரலை தாக்கி ஆறு மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் போதிய நிவாரணங்கள் கிடைக்காமல் இன்னமும் அவலங்களை மட்டுமே சுமந்து கொண்டு வாழும் வடக்கு, கிழக்கு மக்களின் நிவாரண, மீள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்படவிருப்பதே சுனாமி நிவாரண சபை. இலங்கையில் 14 கரையோர மாவட்டங்களை கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26ஆம் திகதி சுனாமிக் கடற்பேரலை தாக்கியது. இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆறு மாவட்டங்களும் பாதிக்கப்பட்டன. இலங்கையில் ஏற்பட்ட முழுப் பாதிப்பில் அறுபது சதவீதமான அவலங்களைச் சந்தித்தது வடக்கு கிழக்கு மாகாணங்கள்தான். இதிலும் பெருமளவு பாதிக்கப்பட் டவர்கள் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம் மக்களே. எனவே அரசும் புலிகளும் மட்டுமல்ல முஸ்லிம் மக்களையும் ஏனைய தமிழர் தரப்புகளையும் உள்ளடக்கியே நிவாரண சபை அமைக்கப்பட வேண்டும். ஆனால் வடக்கு, கிழக்கில் பத்து அல்லது பதினைந்து சதவீத நிலப் பரப்பை மட்டுமே தமது கட்டுப்பாட்டில்


பணிகளை மேற்கொள்ள யோசனை முன் வைக்கப்பட்டிருக்கிறது. திறைசேரியே சகல நிதிக்கையாள் கைக்கும் பொறுப்பாக இருக்கும். யுனிசெப் போன்ற ஐ.நா. அமைப்புகளும் பார்வையாளர்களாகச் செயற்படுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட புலிகளும் அரசும் இணங்கிக் கொண்டிருக்கின்றன. ஓரளவு பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் கூடிய ஒழுங்குகள் செய்யப்பட்டாலும் புலிகள் இவற்றைத் தவறாகப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புகள் அறவே இல்லையென்று கூற முடியாது. அதற்காக 'மொட்டையில் மயிர் பிடுங்கும்' வேலைகளைப் பார்க்க முடியாது.

வடக்கு, கிழக்குப் பிராந்தியங்களை மையமாகக் கொண்டு செயற்பட்டாலும் தேசிய பிரச்சினையான இன விவகாரங்களுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, பொதுக் கட்டமைப்பில் புலிகளும் பங்குபெற வேண்டுமென்று கூறுகிறது. ஆனாலும் ஏனைய சமூக, சமய அரசியல் தரப்புப் பிரதிநிதிகளும் பங்குபற்றும் வகையில் ஜனநாயகமும் பன்முகத்தன்மையும் பேணப்பட வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறது. இதனைத்தான் இந்தியாவும் வலியுறுத்தியிருக்கிறது. உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டின் இணைத் தலைமை வகித்த நாடுகளும் இதனை வலியுறுத்தியிருக்கின்றன. ஆக மொத்தத்தில் ஒரு சிலரைத் தவிர அனைத்துத் தரப்புகளுமே பொதுக் கட்டமைப்புக்கு பச்சைக் கொடி காட்டி விட்டன.

ஆனால் ஆளும் கூட்டமைப்புக்குள் அங்கம் வகித்த, கடும் போக்குச் சிங்கள தீவிர தேசியவாதக் கட்சியான ஜே.வி.பி.யும் அதன் முகவரமைப்பான தேசிய பிக்கு முன்னணியும், ஜாதிக ஹெல உருமய என்ற பிக்குகளின் கட்சியும் காட்டும் சண்டப்பிரசண்ட எதிர்ப்பு ஒன்றும் சர்வ சாதாரணமானதல்ல. ஆட்சியை ஆட்டி விழுத்தும் நோக்கோடு வெகுஜனக் கிளர்ச்சியையும் அரசியல் சதுரங்க ஆட்டத்தினால் தூண்டிவிடும் வேலைகளில் இவை இறங்கி விட்டன.

ஜாதிக ஹெல உருமயவின் முக்கியஸ்தரான வண. ஓமல்பே சோபித தேரர் சுனாமிக் கட்டமைப்புக்கு எதிராக ஆரம்பத்தில் ஆரம்பித்த சாகும் வரையிலான உண்ணாவிரதத்துக்குப் பிறகு நீராகாரம் அருந்தும் நிலைக்கு இறங்கி, 'சேலைன்' ஏற்றிய நிலைக்கு நழுவி, இறுதியாகத் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, புனர்வாழ்வு பெற்று விட்டார். 'சேலைன்' என்றால் என்னவென்று தெரியாத, தனியார் வைத்தியசாலைகளின் கக்கூஸ் பக்கம்கூடச் செல்வதற்கு வக்கற்ற நிலையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலட்சோபலட்சம் மக்கள் இந்த நாட்டில் வாழ்கிறார்கள். இவர்கள் இன்னமும் சாப்பாட்டுக்கு வழியின்றி அடிக்கடி உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு வழங்கப்பட வேண்டும். இக் கொடூர யுத்தத்தைக் கொலை செய்து ஆழக்குழி வெட்டி, மீள எழாதபடி நீளப் புதைக்க வேண்டும். போதாக்குறைக்கு ஜே.வி.பி., தனது பிக்குகள் முன்னணியை கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் உண்ணாவிரதத்தில் இறக்கி விட்டது. அதுவும் 'அம்போ' ஆகிவிட்டது. தற்கொலை செய்தாவது, பொதுக் கட்டமைப்பைத் தடுத்து நிறுத்துவோமென்று சூளுரைப்பவர்கள், கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வரும் படுகொலைகள் தொடர வேண்டுமென்று விரும்புபவர்களா?

(தொடர்ச்சி 22ஆம் பக்கம் பார்க்க..)



# நிறைவேறாத வாக்குறுதிகளும் நிர்க்கதியாகும் மலையகமும்

மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள் பற்றி விரிவாக எழுத வேண்டும் என்று எப்போதும் ஒரு எண்ணம் இருந்துகொண்டிருந்தாலும், அவ்வப்போது முக்கியத்துவம் பெறுகின்ற சம்பவங்கள் தடையாக இருந்து விடுகின்றன. மலையகத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இன்று நேற்று உருவானவையல்ல. கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்துக் கொண்டிருப்பவை. வடக்கு, கிழக்கு தமிழர்கள் தமது உரிமைகளுக்காகவும், விடுதலைக்காகவும் போராடிவருவதைப் போல மலையகத் தமிழர்கள் அன்றாடப் பிரச்சினைகளான இருப்பிடம், வருமானம், கல்வி, தண்ணீர், மின்சாரம், வேலைவாய்ப்பு என்று அனைத்துக்கும் போராடி வருகின்றனர். இவற்றுக்கான போராட்டங்கள் வருடக்கணக்காகத் தொடர்கின்றபோதும் தீர்வு காணப்படாததற்குப் பிரதான காரணம் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்களேயன்றி வேறு யாருமில்லை. அரசியல் கட்சிகளைக் கொண்டிருப்பவர்களே தொழிற் சங்கங்களையும் நடத்தி வருவதனால் தோட்டத் தொழிலாளர்களை அடிமைச் சமூகமாக வைத்திருப்பதில் பெரும் பங்கை வகிக்கின்றனர். மேற்படி தோட்டத் தொழிற் சங்கங்கள் ஊடாக மாதாந்தம் பெரும் லட்சக்கணக்கான சந்தாப் பணத்தைக் கொண்டு அந்த மக்களுக்குச் சேவை செய்வதாக இருந்தால்கூட கணிசமானளவு சேவை புரிந்திருக்க முடியும். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியினூடாகவோ, அமைச்சுக்களூடாகவோ, சந்தாப் பணத்தினூடாகவோ இதுவரை காலமும் மலையகத் தமிழர்களின் நெருக்கடிமிக்க வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைச் செய்ய முடியாத கையாலாகாத்தனத்தை மக்கள் இப்போது கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்துகொண்டுள்ளனர்.

மலையகத் தமிழர்களின் கல்வியறிவு ஓரளவு மேன்மையடைந்துள்ள போதும், பிரச்சினைகளை சம்பந்தப்பட்டவர்களுடன் தீர்த்துக்கொள்ள எவரும் முன்வருவதில்லை. அப்படி முன் வருபவர்களுக்கு மக்களின் ஒத்துழைப்பு என்பதும் முற்றாக இருப்பதில்லை. எனவே இவ்வாறான சமூகக் குறைபாடுகளை மக்களும் உணர்ந்துகொண்டு தமது சக்தியைப் பிரயோகிக்க வேண்டும்.

தோட்டங்களில் வாழ்கின்ற மக்கள் மருத்துவ சேவையைப் பெறுவதற்கு நீண்ட தூரத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது. அதுபோல பாடசாலை, தண்ணீர் வசதிகளுக்காகவும் பெரும்பாலானவர்கள் தூர இடங்களுக்குச் செல்லவேண்டியிருப்பதோடு, நீண்ட வரிசைகளில் காத்துக்கிடப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு அத்தியாவசியத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கும் நேர தாமதம், உடல், உளரீதியான பாதிப்பு, பண விரயம் ஆகியவற்றால் வாழ்வின் மீது பிடிப்பற்றவர்களாகவே தோட்டப்புற மக்கள் வாழ்கின்றனர்.

இதற்கிடையே தோட்டப்புறப் பெண்கள் எதிர்நோக்கும் இரு பிரதான பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று - பாலியல் வன்முறை. மற்றையது - சட்டவிரோதமான கருக்கலைப்பு.

## பாலியல் வன்முறைகள்

சன சந்தடியற்ற சுற்றுச்சூழல், போதிய கல்வியறிவு இல்லாமை, பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையில் போதிய நெருக்கமின்மை, இவற்றுக்கும் மேலாகப் பொருளாதார நெருக்கடியென்று பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினையின் பட்டியலை நீட்டிக்கொண்டு போகலாம். இவ்வாறான பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண்பதற்கு முன்னர், இதற்குக் காரணிகள் என்ன என்ற கேள்விக்கு அப்பெண்கள் கூறும் விடைகள் விசித்திரமனதும் வேடிக்கையானதுமாகும்.

முதலாளிகளின் கபடத்தனம், பொருளாதார ஈட்டலுக்காகப் பெற்றோர்கள் பிள்ளைகளை

> **வீட்டு வேலைகளில் இருக்கும் சிறுமிகள், யுவதிகள் தமது எஜமானர்களால் கொடுமைப்படுத்தப்படுவதும், நல்ல நாள், பெருநாளில் கூட பெற்றோரிடம் செல்ல அனுமதிக்காததும் நடைபெறுகின்றன**

வேலை வாய்ப்புகளுக்கு அனுப்பிவைப்பது, பெற்றோர் வேலைக்குப் போனபின் பெண் பிள்ளைகள் வீட்டில் எதிர்கொள்ளும் தனிமை, சட்டதிட்டங்களும் அவற்றின் அமுலாக்கமும் தொடர்பான போதிய அறிவின்மை அல்லது அறியாமை, நம்பிக்கைக்குரியவர்களின் நம்பிக்கைத் துரோகங்களும், அவர்களின் அதிகார துஷ்பிரயோகங்களும் இவைபோன்றவையே தோட்டப்புற பெண்களின் நிம்மதிக்கும் ஏமாற்றத்துக்கும் காரணமாக அமைகின்றன. இவற்றோடு மட்டுப்படுத்தப்படுவதாகக் கருதமுடியாது. வீட்டுவேலைகளுக்காக தரகர்களூடாகவும், தனியாகவும் நகரப் பகுதிகளை நோக்கி இடம்பெயரும் மலையகச் சிறுமிகள், பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பெரும் கண்ணீர் காவியங்களாக உள்ளன. உதாரணத்திற்கு நான் சந்தித்த 12 வயதுச் சிறுமி, தெரிந்தவர் ஒருவர் ஊடாக கொழும்பில் வீட்டு வேலைக்காகக் கொண்டுவரப்பட்டுள்ளார். இச்சிறுமி மூன்று வயது மற்றும் ஏழு வயதான இரு சிறுவர்களைப் பராமரிப்பதற்காக அமர்த்தப்பட்டுள்ளார். ஒரு சிறுமியே சிறுவர்களை பராமரிப்பதிலுள்ள மனிதாபிமான சிக்கல்கள். அதுபோல வீட்டு வேலைகளில் இருக்கும் சிறுமிகள், யுவதிகள் தமது எஜமானர்களால் கொடுமைப்படுத்தப்படுவதும், நல்ல நாள், பெருநாளில் கூட பெற்றோரிடம் செல்ல அனுமதிக்காததும் நடைபெறுகின்றன. பெற்றோர், உறவினர் பிள்ளைகளைத் தேடி வருகின்றபோது குறிப்பிட்ட தொகைப் பணத்தைக் கொடுத்து அவர்களுக்குப் பிள்ளையைக் காட்டாமலே அனுப்பிவைக்கும் கொடுமையும் நடக்கத்தான் செய்கிறது. இதே பாணியில் நடந்தேறும் பாலியல் கொடுமைகளும் வற்புறுத்தல்களும் வேறு ஒரு தருணத்தில் விரிவாக அலசி ஆராய வேண்டிய விடயமாகவுள்ளது.

இவ்வாறான சம்பவங்களும் கொடுமைகளும் ஒன்றும் புது விடயங்களோ அல்லது அதிசயங்களோ அல்ல. அரசியல் காரணங்களுக்காக விவாதிக்கப்படாத அல்லது மறைக்கப்படும் அருவருப்பான சம்பவங்களாகும். இவ்விடயத்தில் சிறுவர் அமைப்புகளும், மனித உரிமை பேசும் அமைப்புகளும் இன்னும் அதிக அக்கறையோடு தங்களைக் கவனிக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட - பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற சிறுவர், சிறுமிகளும், பெண்களும் கண்ணீர் நிறைந்த விழிகளோடு வேண்டி நிற்கிறார்கள். எல்லா அமைப்புகளும், கட்சிகளும், நிறுவனங்களும் தமது வசதி கருதி நகரப் புறங்களிலேயே மையம் கொள்வதால் உண்மையில்

*அலசுவது*
**- மதியூகி -**

பாதிக்கப்படுகின்றவர்களை நோக்கிய எவரது பார்வையும், விசாரிப்பும் படர்வதில்லை. அவர்களுக்குத் தேவையான ஆலோசனையோ உதவியோ கிடைப்பதில்லை. "திருடனாகப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்பது போல தவறு செய்பவன் திருந்தாதவரை தவறுகள் தொடரவே போகின்றன. அதைத் தடுக்கின்ற அல்லது தவறுக்கு வழிசமைக்காத திட்டங்களை - விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற மனிதநேயப் பார்வையும், உதவியும், ஆலோசனையும் நகரங்களை விடவும் தோட்டப்புற மக்களுக்கே அதிகத் தேவையாகவுள்ளன. சம்பந்தப்பட்ட அமைப்புகள், நிறுவனங்கள், மனிதநேயமிக்கவர்கள் முன்வருவார்களானால் அவர்களோடு இணைந்து பணியாற்ற 'தினமுரசு'ம் கரம்கோர்க்கக் காத்திருக்கிறது. இதன் தொடர்ச்சியாக சட்டவிரோதக் கருக்கலைப்பு, இளைஞர், யுவதிகளின் தொழில்வாய்ப்பு மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து அடுத்த வாரமும் எதிர்பாருங்கள். ◎

# அதிரடி அய்யாத்துரை



**கடைசியாப்** போன மின்னிற நிகழ்ச்சியைப் பார்த்திருந்தால் படுஜோரா இருந்திருக்கும். கதை, திரைக்கதை, தயாரிப்பு, டைரக்ஷன் எல்லாத்தையும் செய்யிற டி.ராஜேந்தர் மாதிரி, உந்த எல்லாப் பொறுப்புகளையும் சு.பாவே பொறுப்பெடுத்து நடத்தினார். அவருக்கு உதவியாளராகக் குடை பிடிச்சவர் வேறுயாருமில்லை, அந்த நிகழ்ச்சியின்ர தயாரிப்பாளர் தானுங்கோ. சனம் கூட்டத்தில இருந்து கேட்குமாப்போல கேளுங்கோ. நான் பதில் சொல்லுமாப்போல சொல்லிறன் எண்டு கேள்விகளையும் முன் கூட்டியே எழுத்தில கொடுத்துப் போட்டாராம். காலங்காலமா பெரும்பான்மை அரசு தமிழர்களை ஏமாற்றுதுகளாம். இனியும் ஏன் ரெண்டெழுத்தார் பொறுமை காக்கினம் எண்டு கணரெட்ணமான ஒருவர் கேட்டதுக்கு, சு.பா. கொடுப்புக்க சிரிச்சுக் கொண்டு, அது வந்து பாருங்கோ, சர்வதேச சமூகமும் பார்த்துக்கொண்டிருக்கு எண்டதாலை ரெண்ட் மாறிப்போயிட்டுது. எண்டாலும் தலைமை உரிய நேரத்தில உரிய நடவடிக்கையை எடுக்கும். அதுவரை பொறுத்திருங்கோ எண்டமாதிரி சொன்னதைப் பார்த்திருக்கணுமே. அது எப்புடி இருந்துதெண்டால் பாட்டும் நானே, எண்ட பாட்டை கேள்வியும் நானே, பதிலும் நானே. கேட்கும் உனை நான்.... கேக்க வைத்தேனே எண்ட மாதிரி சூப்பரா இருந்திச்சுதுங்கோ. உப்பிடி கண்ணாமூச்சி ஆட்டம் காட்டும் ரங்கநாதா, உனது வித்தியா சமான தேசிய உணர்ச்சியை நினைக்கேக்க புல்லரிக்குதப்பா.

**பொதுவான** கட்டமைப்பு தொடர்பாக அதிகார அம்மணியை கூத்தமைப்பு எம்.பி.மார் சந்திச்சினமெல்லோ தன்னைப் பத்தி தாருமாறா பேசுறவங்கள் எண்டாலும் அதுகளை பொருட்படுத் தாமல் அம்மணி ஆர்வமாக தண்ர திட்டத்தை விலாவாரியா விவரிச்சுக் கொண்டிருக்கேக்க திருவாணமலையைச் சேர்ந்த பழைய கிழநரி அதுதானுங்கோ சம்மந்தமில்லாம சம்சாரிக்கிற சம்மந்தமானவர் அதிகார அம்மணியிடம் அலுகோஸ்தனமா ஒரு வலியுறுத்தல் வலியுறுத்தின வராம் ஊடகவியலாளராக இருந்து கொல்லப்பட்ட சிவமான ராமரிண்ட கொலைக்கு வீணைக் கட்சியின்ர தலைவர் தேவமான ஆனந்தர் தான் காரணம் ஆகையாலை அவரை உடனடியா கைது செய்ய வேணுமெண்டு கட்டை விரிலில நிண்டி ருக்கார். உவரிண்ட முழிபிதுக்கங்களுக்கு அம்மணி எடுபடாமல் தர்மலிங்கத்தின்ர பெடியனைச் சுத்தி விசாரணை போகுதெண்டு சொன்னாவாம். பாவம் சம்மந்தமான்வர் பொக்கை வாயால அசடு வழிய நிண்டு குழைஞ்சவராம் தேவமான ஆனந்தரைக் கண்டால் இத்தனை பயமா இவைக்கு எண்டு அம்மணி நினைச்சது அவாவின்ர பார்வையிலேயே தெரிஞ்சுதாம். அசடு..... அசடு.....

**மகேஸ்வரனாரைப்** பற்றி கொஞ்ச நாளாவே தகவல் இல்லையே எண்டு யோசிச்சுக் கொண்டிருந்தன். அவர் சிங்காரமான பூரிலை போய் நிம்மதியாத் திரியிறார் எண்டு அரசல் புரசலாக ஒரு கதை அடிபட்டுது. இப்ப என்னடாவெண்டால் தலைநகரில தங்குமிடமொண்டை ஆடம்பரமாக் கட்டிறாராம். அட பக்கத்திலைதானே எண்டு விசாரிச்சால், வெள்ளவத்தையில மூண்டும் ஆறும் சேருற தெருவில வெளிநாட்டிலை இருந்து வாறவை உங்க தங்கியிருந்து கல்யாணமும் கட்டிக்கொள்ள வசதியா வாடகைக்கு விட்டு பணம் பார்க்கிற கட்டிட வேலையில மனிசன் பிஸியா இருக்கிறாருங்கோ. உந்தச் சங்கதியை அவரின்ர தம்பியார் தெரிஞ்சவயிற்ற பெரும் புழுகத்தோடை சொல்லித்திரியிறாருங்கோ. தம்பி உடையான் படைக்கு அஞ்சான் எண்டுவினம். இவரின்ர விஷயத்திலை தம்பியே உளறிக் கொட்டித் திரியிறாருங்கோ. பரமேஸ்வரா பகலில கதைக்கேக்கையும் அக்கம் பக்கத்தைப் பார்த்துக் கதையப்பா....

**படிக்கிற** பிள்ளையள் ஒப்படை எழுதி ஒப்படைக்கிறதெண்டு கேள்விப்பட்டிருப்பியள். இப்ப என்னடாவெண்டால் எம்.பி.மாரா இருக்கிறவையுமெல்லோ ஒப்படை எழுதினம். யாருக்கு வேலை கொடுக்கிறம் எங்க என்ன கதைச்சம், இனி என்ன கதைக்கப் போறம் எண்டதைப் பத்தி மாதத்துக்கு ஒரு தடவை ஒப்படை எழுதி வன்னியில கொடுக்கினமாம். நீங்க நினைக்கிறது மெத்தச் சரியுங்கோ. ஒப்படை ஒப்படைக்கிறது மாணவ எம்.பி.மார் எங்கட கூத்தமைப்புக்காரர்தானுங்கோ. இப்பதான் சில எம்.பி.மார் புலம்பினமாம். சாட்சிக்காரனா இருக்கிறதை விடவும் சண்டைக்காரனாக இருக்கிறது மேல் எண்டு. முடி நரைச்சவைக்கு மூளை நரைக்கவில்லையே. லோ படிச்சவையும் இப்ப லோலல் படுகினமெண்டு சொல்லாமச் சொல்லி அழாம அழுகினமாம். உந்த ரெண்டு பாட்டிலை எது பொருத்தமெண்டு பாருங்கோ:

உன்னைச் சொல்லிக் குற்றமில்லை;
என்னைச் சொல்லிக் குற்றிமில்லை.

சட்டி சுட்டதடா கை விட்டதடா;
புத்தி கெட்டதடா நெஞ்சைத் தொட்டதடா.

**சிவப்புச்** சட்டைக்காரரின்ட கரண்ட் சிச்சுவேஷன் சிவப்பு லைட்டடிக்குதெண்டு பொலிரிக்ஸ் வேதாந்தி ஒருவர் சொல்லுறாருங்கோ. புலி வருது புலி வருது எண்ட கதை மாதிரி, அந்தா விலத்தப்போறம் இந்தா விலத்தப்போறம் எண்டு போக்குக் காட்டிக் கொண்டு இருந்திச்சினம் - இப்ப விலத்திட்டினம். எங்க ஒரு சலசலப்பையும் காணயில்லையே எண்டு சனம் யோசிக்குதுகள். இவை கூட்டுச் சேரேக்கையே குழப்பத்துக்கு நாள் எண்ணிக்கொண்டுதான் பச்சைச் கட்சிக்காரர் இருந்திச்சினம். சிவப்புச் சட்டைக்காரரின்ர பொலிரிக்ஸ் சில்மிஷமெல்லாம் அதிகார அம்மணியிட்டை பலிக்காதெண்டதிலை பச்சைக் கட்சிக்காரர் முழு நம்பிக்கையா இருந்திச்சினம். நம்பிக்கை வீண் போகவில்லை. பலிச்சிட்டுது. வஞ்சனை செய்வாரடி கிளியே வாய்ச் சொல்லில் வீரரடி எண்டு பேராசிரியர் ஒருவர் அம்மணியை நினைச்சுப் படிக்கிறாராம்.

**பொதுவான** கட்டமைப்புக்குப் பொதுவாகவே எதிர்ப்பும் ஆதரவும் பொங்கி எழுந்தது. அதிகார அம்மணி, நான் புடிச்சபுடி இரும்புப் பிடி எண்ட கணக்கா ஒரே பிடியா நிண்டிட்டா. இவா உப்பிடி நிக்கமாட்டா. அதை வச்சுக் கொண்டு ஒரு ரவுண்ட் வரலாமெண்டு பிளான் பண்ணிக்கொண்டிருந்த ரெண்டெழுத்தாருக்குப் பிளான் பிழைச்சுப் போட்டுது. ரெண்டெழுத்தார் தங்கட எதிரியாப் பாக்கிற வீணைக் கட்சிக்காரர் உந்தப் பொதுக் கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிச்சதுதான் கூத்தமைப்புக்கும் - ரெண்டெழுத்தாருக்கும் பெருந் தலையிடியா இருக்குதாம். உப்பிடி ரெண்டு தரப்பும் எப்பிடி ஒரு திட்டத்துக்கு ஓம் பட்டிச்சினமெண்டு ஒரு சிலருக்கு ஒரே கன்பியூஸாம். மக்களுக்கு நல்லது நடக்குதெண்டதைப் பார்க்காம எதிரி யார் நண்பர் யார் எண்டதிலைதான் டைமை வேஸ்ட் பண்ணினம். சந்தேகப்பட்டு சனத்துக்கு நன்மை கிடைக்காம பண்ணிப் போடாதையுங்கோ... பிளீஸ். ●

# எந்த அளவையால் அளக்கிறீர்களோ, அந்த அளவையால்

# உங்களுக்கும் அளக்கப்படும்! ஏடு இட்டோர் இயல்

*(சென்ற வாரத் தொடர்ச்சி.....)*

## கொலையின் செய்தி

**எது** எப்படி என்றாலும், இந்த மரணம் பல அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கிறது. அதில் முக்கியமானது, புலிகளை ஆதரிப்பது என்பது உயிருக்கு உத்தரவாதம் அல்ல என்ற செய்தி. பரமசிவன் கழுத்துப் பாம்புகளாக நினைத்து கருடனைச் சௌக்கியம் கேட்ட பலர், இனிமேல் இடியோசை கேட்டது போல புற்றுக்குள் பதுங்கிக்கொள்ளவும் கூடும். இது ஒரு வகையில் ஊடகவியல் சுதந்திரத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாகத்தான் இருக்கும்.

இந்தக் கொலை தரும் செய்தி அதுதான் என்றால், அது சிவராம்தானே என்று மௌனமாக இருப்பது பல்வேறு பதில் கொலைகளுக்கும் வழி காட்டக் கூடும். இந்த மௌனத்தின் உற்சாகம் பெற்று பல 'இனம் தெரியாதவர்கள்' இவ்வாறான கொலைகளைத் தொடரவும் கூடும்.

இப்போது கனடாவில் முழக்கம் சிவராம் போன்ற கொலைகள் கனடாவில் விரைவில் நடத்தப்பட்டால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என்று எழுதி, புலிகளின் கொலைகள் கனடாவில் நடப்பதற்கு கட்டியம் கூறியும் அதை மற்றவர்களின் தலையில் போடுவதற்கும் வழிவகுத்திருக்கிறது. புலி வரும் பின்னே, பூச்சுற்றல் வரும் முன்னே.

## சுவாரஸ்யமான நிதர்சனம்

மனிதர்களின் மரணத்தின் போது அஞ்சலிகளில் அவரது மற்றப் பக்கம் மறைக்கப்பட்டு, அவரை நல்லவராக மிகைப்படுத்திச் சித்திரிப்பது ஒரு மரபுதான். ஆனால் சிவராமைப் பொறுத்தவரை, பின்குறிப்புத்தான் சுவாரஸ்யமாக இருக்கிறது.

புலிகளின் பினாமி இணையத்தளமான நிதர்சனம் புலிகளின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை விமர்சிக்கும் எவரையும் பண்பாட்டுக்கு ஒவ்வாத வகையில், எழுத்துப் பிழைகளுடன், கேவலமாக எழுதி வருவது தெரிந்ததே. அவர் கடத்தப்பட்டவுடனேயே, நிதர்சனம் அவரை நிதர்சனம் இணையத்தளத்தின் ஸ்தாபகர், பிரதம ஆசிரியர், பிரதம செய்தி ஆசிரியர், பிரதம ஆலோசகர் என்றெல்லாம் வர்ணித்திருந்தது. சில நேரங்களில் தங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் பழியை சிவராமின் மேல் போடும் நிதர்சனத்தின் செயற்பாடாகவும் இருக்கலாம். அல்லது இரகசியமாகவே சிவராம் பற்றி அவதூறு செய்யும் நோக்குடன் புலிகள் நடத்திய நாடகமாகவும் இருக்கலாம்.

ஆனால், இது உண்மையாக இருந்தால், சிவராம் பற்றி மேன்மையாக மிகைப்படுத்தி எழுத என்ன தான் இருக்கிறது.

## நடுநிலையா? புலி சார்பா?

வன்னி முதல் கனடா வரைக்கும் சிவராம் ஒரு ஆயுதம் ஏந்தப் போராளி நம் மத்தியில் உள்ள சில எழுத்தாளர்கள் எதிரிக்கு விலை போய் தமிழ்த் தேசியத்தை குத்திக் காயப்படுத்திக் கொண்டிருக்கும்போது, மாமனிதர் சிவராம் யாருக்கும் விலை போகாமல் தன் இறுதி மூச்சு வரை தமிழினத்திற்காக வாழ்ந்தவர் என்று புலிகளின் பினாமி அமைப்புக்கள் சிவராமுக்கு புலிக் கொடி போர்த்துக் கொண்டிருக்கின்றன. சிங்கள ஆய்வாளர் ஒருவர், ரிச்சார்ட்டி சொய்சா கொல்லப்பட்ட போது உலக அரங்கில் ஏற்பட்ட அதிர்வலைகள் போல இந்தக் கொலையின் போதும் ஏற்படும் என்று எழுதியிருக்கிறார்.. ரிச்சார்ட் டி சொய்சா எந்த அமைப்பின் தலைவருக்கும் புகழ் பாடாமல், தன் நடுநிலைத் தன்மையில் நிலையாக நின்றவர். ராஜினி திரணகம போன்று மனித உரிமைகளுக்காகப் போராடியிருந்தால் கூட ஒருவேளை பாதிப்பு இருந்திருக்கும்.

ஆனால், சர்வதேசமே கண்டிக்கின்ற அரசியல் கொலைகளையும், சிறார் கடத்தல்களையும் செய்கின்ற புலிகளின் இணையத்தள ஆசிரியர் என்றதுமே அவருடைய நடுநிலைத்தனம் போய், புலிப் பிரசாரகர் என்ற நிலைக்கு வந்ததும் சர்வதேச அரங்கில் அதன் பாதிப்புக்கள் வெறும் கண்டனங்களாகத்தான் இருக்கின்றன. வழமை போல கண்டித்து அறிக்கை விட்டிருக்கின்றன. நிமலராஜன், நடேசன், தராக்கியை புலிகளின் ஊதுகுழல்கள்தான் கருத்துக்களுக்காக கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் என்று தூக்கிக் கொண்டாடுகின்றன. சர்வதேச சமூகத்தின் முன் அவர்கள் புலிகளின் ஆதரவாளர்கள்தான். அவர்களை நடுநிலையாளர்களாகக் காட்டாமல், தங்கள் ஆதரவாளர்களாகக் காட்டுவதால் ஏற்படும் பாதிப்புக்களைக் கூட புரிந்துகொள்ளும் அளவில் புலிகளும் அதன் பினாமிகளும் இல்லை.

## கவித்துவமான நீதி

சிவராம் தமிழ்நெட்டில் ஆசிரியராக இருக்கும்போது, புலிகளால் நடத்தப்படும் கொலைகளுக்கு இனம் தெரியாதவர்களால் கொலை என்று எழுதி விட்டு, பின்னால் பொங்குதமிழ் கூட்டத்திற்கு இந்தக் கொலை புலிகளால்தான் செய்யப்பட்டது என்று சூசகமாக உணர்த்த, கொல்லப்பட்டவர் முன்பு துரோகக் குழுவில் உறுப்பினராக இருந்தவர். இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டவர் என்று பின்குறிப்பு எழுதுவார். அதன் மூலம் அந்தக் கொலைக்கான நியாயப்படுத்தல் துரோகி ஒழிப்பு என்ற பெயரில் அமுலாகும். அதே வழியில் சிவராமும் இன்று கொல்லப்பட்டு, புலி ஆதரவு இணையத்தள ஆசிரியர் இனம் தெரியாதவர்களால் கொலை என்று பி.பி.சி.யில் செய்தி வெளியாவது கூட ஒருவகையில் 'கவித்துவமான நீதி' தான்.

கூசாமல் கொலை செய்யும் புலிகளுக்கும், அக் கொலைகளை நியாயப்படுத்திய சிவராம் போன்றவர்களுக்கும் இயேசுவின் வார்த்தை ஒன்றை ஞாபகப்படுத்துவது இங்கே பொருத்தமானது. (பாவாடைப் பாதிரிகள் புலி வாலில் தொங்குவதால் பைபிள் பற்றிய பரிச்சயம் புலிகளுக்கு நன்றாகவே இருக்கும்.)

தீர்ப்பிடாதீர்கள், ஏனெனில் தீர்ப்பிடப்படுவீர்கள்.

எந்த அளவையால் அளக்கிறீர்களோ, அந்த அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்!

(முற்றும்)

விளம்பரப் பகுதி

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி. - ஆசிரியர்

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெற விரும்புவோர் D.D. Enterprises என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முாகமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசு கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் "Manager Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேணடும்.

ஈ.மெயில் :- (E-mail):- murasu@sltnet.lk



## ஹோமியோபதி சிகிச்சை

தமிழ் நாட்டில் பிரபல சிகிச்சை நிபுணரும், தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான **DR. R. தியாகராஜன் DHMS, AMRSH (Lon)** நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக் குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 21.06.2005 முதல் 25.06.2005 வரை
இடம் : ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.
தொலைபேசி : 2585592, 2581986, HOTLINE : 0777-602513







மலையாள மாந்திரிக சக்தி

(1) மலையாள தேசத்தில் வசிப்பவளே ஸ்ரீ துர்க்கா தேவி ! ஸ்ரீ துர்க்கா தேவியின் பீடம் மலையாளமே! மலையாள தேசத்தின் தனி மகத்துவம் மலையாள மாந்திரிகம். அது மட்டுமா? விதியின் விபரண சாஸ்திரம், சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளமே! மலையாள மாந்திரிக பேரரசர் டாக்டர் P.K. சாமி (J.D.G.A.N) J.P ஐயா அவர்களே

(2) இலங்கையில் தொண்டு தொட்டு 46 வருடகாலமாக நுவரெலியாவிலும் கொழும்பிலும் ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயங்களை அமைத்து அன்றாடு 6 மணித்தியால அக்கினி குண்டலி பூஜை நடை பெருவதாலேயே! எண்ணியது எண்ணியவாறு நிறைவேறுகிறது

(3) உண்மைக்கு எடுத்து காட்டாக இது ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் துரை P.K. Saamy Associate (Pvt) Ltd நிறுவனமாக இயக்கி வருவதால் வாங்கும் பணத்திற்கு ரசீதும் மாந்திரிக சித்த ஞானத்தால் காரியம் நிறைவேறும் திகதியை உடனே கூறிவிடும் சக்தி இங்கு இருக்கிறது.

(4) மேலும் ஐயாவின் பிரதான அனுசரணையுடன் வழங்கும் ஞாயிறு தோறும் சக்தி தொலை காட்சியில் இரவு 7 மணிக்கு **வேலன்** தொடரை தொடர்ந்து பார்த்து வேலன் மகிமையை கண்டறியுங்கள். மேலும் **கை அளவு உலகு** ஐரோப்பா முழுவதும் வெள்ளிதோறும் London நேரப்படி காலை 9.30 மணிக்கு கை ரேகை தொடர் நிகழ்ச்சியை Vectone TV பார்க்க தவறாதீர்கள். மேலும் விபரம் அறிய வெப்தலத்தை நாடுங்கள் www.drpksamy.com www.gangatharan.com

(5) இங்கு தீய வேலைகளுக்கு ஒருபோதும் இடமில்லை மனித ரூபத்தில் ஸ்ரீ துர்க்கா தேவியின் மகிமையை கண்டறிய மாதம் தோறும் இறுதியில் நடைபெறும் 11 மணித்தியால அக்கினி குண்டலி யாக பூஜையில் கலந்து கொண்டால் இவ் அற்புதத்தை கண்டறியலாம். அன்று அன்னதானமும் அடியார்களுக்கு வழங்கபடும்

(6) **இனி உங்கள் பிரச்சனை என்ன?**
தீராத நோய் தீர வேண்டுமா? ஆஸ்மா நோயால் அவஸ்தையா? பாரிச வாதமா? பக்க வாத விளைவுகளா? கை கால் உழைச்சலா? மன பேதளிப்பா? விரக்கிதியா-படபடப்பா? பில்லி சூனியமா? பேய் சேட்டையா? எதிரிகளின் சதிதிட்டத்தில் விடுபட வேண்டுமா?

(7) மற்றும் பிரிந்து போன கணவன்-மனைவி-காதலன் காதலி ஒன்று சேர, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரயாணத்தடை நீங்க, மது போதையில் இருந்த விடுபட, குபேர வாழ்வு அச்சர கூடு அணிந்து கொள்ள, கல்வி ஞான கவசம் பெற, தலைமுடி உதிர்வதை தடுத்து கொள்ள, இளம் நரையை போக்க, தலைமுடி வளர, சோம்பலை தவிர்க்க, வியாபாரம் விருத்தியடைய, ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் நன்மை பெற, கடற் தொழில் வியாபாரம் முன்னேற, வண்டி (வாகனம்) இலாபத்துடன் செயல்பட, விரும்பிய தொழில் கிட்ட, சென்றவர்கள் தேடிவர, முன்வினை தோஷம் கரும தோஷம் செவ்வாய் தோஷம் பரிகாரம் செய்து கொள்ள, குழந்தை பேறு கிட்ட, அதிஸ்டகல் மோதிரம் அணிந்து கொள்ள, இன்னும் உங்கள் குறைகளுக்கு நேரில் என்னை சந்தித்து ஆலோசிக்கவும்.(வெள்ளி ஞாயிறு கிழமை தவிர்த்து)

(8) இன்னும் அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே! பிழைத்தது இல்லை நடந்தது நடக்கபோவது, நடக்க இருப்பது, எத்தனையாம் திகதி திருமணம், எத்தனை மணிக்கு எத்தனையாம் திகதி பிரயாணம், எத்தனையாம் திகதி-எண்ணியது நடக்கும், சரிவருமா? சரிவராதா? என்பது இத்தனையாம் திகதி சரிவந்து விடும், என்று அறிந்த தெரிந்து செயல் பட முன்னறிவித்தலுடன் என்னை சந்திக்கவும்.

(9) தொலைபேசியில் விளக்கம் பெற விரும்புவோர் எனது சிரேஸ்ட தெளிவுரையாளர் சிவா விடம் நேரத்தை ஒதுக்கி கொண்டு தெளிவு பெறலாம் அனைத்து தொலை பேசிக்கும் எம்மிடம் (C.L.I) உண்டு வெளிநாட்டவருக்கு விஷேட தொலைபேசி வசதியுண்டு.

**உலக மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி**

**பேராசிரியர் டாக்டர் P.K. சாமி (J.D.G.A.N.) J.P.**

ஸ்ரீ துர்க்கா தேவி மாந்திரிக உச்சாடன பீடம் 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.
தொலைபேசி (CLI) :- (0094 -11)- 2342463,2342464,2470615,2449110, 2431137, 4616331, 4616127, 46131124, 4613133, Fax: 2344831
Mobile :- +0094 777-588405 E-mail:- drpksamy@sltnet.lk web:- www.drpksamy.com, www.gangatharan.com

**கிளைகள்** நுவரெலியாவில் (P.T.R ஐயாவை சந்தியுங்கள்) ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம் 33, கண்டி வீதி, தொ.பே: 0094-052-2222508/4490031/2223093
வெள்ளவத்தையில் 107/B, காலி வீதி, கொழும்பு-06. தொ.பே :- 0094 -11- 2552485

# இன்னொருவர் பார்வையில்

# பயிரை மேயும் வேலிகள் பிந்துனுவேவா ஓர் உதாரணம்

**2000ஆம்** ஆண்டு அக் டோபர் மாதம் 25ஆம் திகதி அதிகாலை நேரம் பண்டாரவளை பிந்துனுவேவா என்ற இடத்தில், தமிழ் இளைஞர்கள் தங்கியிருந்த புனர்வாழ்வு முகாமை சுமார் இரண்டாயிரம் பேர் கொண்ட கும்பலொன்று தாக்கத் தொடங்கியது. கிராமவாசிகள், வெளியிலிருந்து திட்டமிட்டு வாகனங்களில் கொண்டுவரப்பட்டோர் இந்த முகாமைத் தாக்கிய வேளை, அங்கு பிரசன்னமாயிருந்த பொலிஸார், தாக்குதலைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர். இத்தாக்குத லுக்குப் பொலிஸார் ஒத்தாசையாக இருந்தனரென்றும் சிலர் சம்பந்தப்பட்டனர் என்றும் உயிர் தப்பிய தமிழ் இளைஞர்கள் தெரிவித்தனர். இத்தாக்குதலின்போது 27 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டனர். 14 பேர் காயமுற்றனர். இந்த இளைஞர்களில் பலர் புலி இயக்கத்திலிருந்து விலகி படையினரிடமோ பொலிஸாரிடமோ சரணடைந்தவர்கள், சிலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள். இவர்கள் மீது வழக்கு கள் தாக்கல் செய்யப்படவில்லை. இம் மிலேச்சத்தனமான தாக்குதல் நடைபெற்று முடிந்தவுடனேயே உயர் மட்டத்திலிருந்தவர்கள் தமிழ் இளைஞர்கள் மீது குற்றம் சாட்டும் வகையில் திட்டமிட்டு கருத்துக்களை வெளியிட்டனர். அப்பிராந்தியத்தின் சிரேஷ்ட பொலிஸ் சுப்பிரிண்டனாக அப்போது பதவி வகித்த பி.எம்.பிரேமரட்ன என்பவர் தடிகள், பொல்லுகளுடன் வந்த தமிழ் இளைஞர்கள் அந்நிலையத்தின் களஞ்சியச்சாலையைத் தாக்கியதாலேயே பிரச்சினை எழுந்தது என்று குறிப்பிட்டார். கிராமத்திலிருந்த இளம் பெண்களுக்குத் தமிழ் இளைஞர்கள் சிலர் சாரத்தை உயர்த்திக் காட்டியதால் கிராமவாசிகள் ஆத்திரமுற்றிருந்தனர் என்றும் பொலிஸ் சுப்பிரிண்டன் சொன்னார். காடையர் கும்பல் தமிழ் இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியபோது கும்பலை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்திருந்தால், இறந்தவரின் தொகை இன்னும் அதிகரித்திருக்கும் என்றும் ஆகவேதான் பொலிஸார் சுடவில்லை என்றும் அவர் மேலும் சொன்னார். அரசாங்கத்தின்மீது அபகீர்த்தி ஏற்படுத்துவதற்காக அன்ரன் (அந்தோனி) என்பவரையும் ஜேம்ஸ் (புலிகள் இயக்கத்திலிருந்து விலகி சரணடைந்தவர், இத்தாக்குதலின்போது அவர் கொல்லப்பட்டுவிட்டார்.) ஆகியவர்களைத் திட்டமிட்டு முகாமுக்குள் அனுப்பி, புலிகள் இயக்கமே இத்தாக்குதலை ஏற்பாடு செய்ததாக அரசாங்கப் பேச்சாளர் ஆரிய ரூபசிங்க அப்போது தெரிவித்திருந்தார்.

இம் முகாம் தாக்குதல் பற்றி முதன் முதலாக ஆரம்ப அறிக்கையொன்றை வெளியிட்டது மனித உரிமைகள் ஆணைக் குழுவாகும். மேற்கூறிய அரச அதிகாரிகள் தெரிவித்த கருத்துக்கள் வெறும் கற்பனை என்றும் மக்களைத் தவறாக வழிநடத்துபவை என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது. களஞ்சிய சாலையின் பூட்டு உடைக்கப்படாமலேயே இருந்தது. தமிழ் இளைஞர்கள் சாரத்தை உயர்த்திப் பெண்களுக்குக் காட்டியதில்லை என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தமிழ் இளைஞர்கள் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தனரென்றும் ஈவிரக்கமற்ற முறையில் அவர்கள் கொல்லப்பட்டுள்ளனரென்றும் சிலர் உயிருடன் கொளுத்தப்பட்டனரென்றும் அறிக்கை கூறியது. ஜேம்ஸுக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் அர்த்தமில்லை என்றும் மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்தது.

சம்பவ தினத்திற்கு முதல் நாள் இரவு, முகாமின் பொறுப்பதிகாரியான கப்டன் வை.கே. அபேரட்னவுக்கும் தமிழ் இளைஞர்கள் சிலருக்குமிடையே வாக்குவாதங்கள் ஏற்பட்டிருக்கிறது. முகாமை விட்டு வெளியேற எப்போது அனுமதிப்பீர்கள் என்று தமிழ் இளைஞர்கள் சிலர் கேட்டதையடுத்து, வாக்குவாதம் ஏற்பட்டு அங்குள்ள சில பொருட்கள் உடைக்கப்பட்டன. கப்டன் அபேரட்ன தாக்குதலுக்குள்ளாகி காயமுற்றிருக்கிறார். அங்குள்ள பொலிஸ் காவல் நிலையிலிருந்த பொலிஸ்காரர் ஒருவர் வானத்தை நோக்கிச் சுட்ட பின்னரே இச்சம்பவம் இடம்பெற்றதாக ஆணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் தயாரத்ன, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி செனவிரட்ன ஆகியோரின் தலைமையின் கீழ் பொலிஸாரும் இராணுவத்தினரும் புனர்வாழ்வு முகாமுக்கு அன்றே வந்திருந்தனர். புனர்வாழ்வு முகாமிலிருந்து விடுக்கப்பட்ட அழைப்பின் பேரிலேயே பொலிஸார் அங்கு வந்து சேர்ந்தனர். அன்றைய இரவே பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டது. முகாமிலிருந்த இளைஞர்களால் கப்டன் அபேரட்னவின் காயத்திற்கு பாண்டேஜ் போடப்பட்டது. இப் படுகொலைகளை நியாயப்படுத்துவதற்காகக் கூறப்பட்ட விடயங்களில் தமிழ் இளைஞர்கள் ஈடுபடவில்லை. மறுநாள் காலை புனர்வாழ்வு முகாமுக்கு முன்னால் திரண்ட கும்பல் கற்களை வீசி தாக்கியபோது, இளைஞர்கள் எடுத்த நடவடிக்கை அனைத்தையும் தற்காப்புச் செயற்பாடு என்று கூறமுடியும். கும்பல் தாக்கத் தொடங்கியபோது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர். ஆனால் கும்பல் மீது அல்ல.

தமிழ் இளைஞர்கள் மீதே சுட்டனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. "25ஆம் திகதி நடைபெற்ற சம்பவங்கள் முகாமிலிருந்தவர்களின் ஆத்திரமூட்டலினால் ஏற்படவில்லை. திட்டமிடப்படாத முறையில் எழுந்தமானமாக ஏற்பட்ட கும்பலின் வன்செயல் அல்ல என்பதை நாம் சேகரித்த தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. இதில் முன்கூட்டியே திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் என்பதையே இச் சம்பவங்கள் காட்டுகின்றன" என்று மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தமை மிக முக்கியமானதாகும். எவ்வாறாயினும் இது திட்டமிடப்பட்ட தாக்குதல் என்பதை அரசாங்க அதிகாரிகள் நிராகரித்தனர். மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பி.எச்.ஏ.குலதிலக்கவை உள்ளடக்கிய ஜனாதிபதி ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கருத்தை நிராகரித்தது. "இத்தாக்குதல் வெளிச் சக்திகளால் திட்டமிடப்பட்டதோ ஒழுங்கு செய்யப்பட்டதோ அல்ல என்பதையும் முன்கூட்டித் திட்டமிடப்பட்டதொன்றல்ல என்பதையும் நான் பதிவு செய்து கொள்கிறேன்" என்று நீதிபதியின் கூற்றினை அலன்கீனன் என்பவர் தனது ஆய்வறிக்கையில் குறிப்பிட்டு விமர்சித்துள்ளார். 'பிந்துனுவேவா நீதி நிறைவேற்றப்படவில்லை' என்ற அறிக்கையிலேயே அவர் இதனைத் விமர்சித்துள்ளார்.

அப்போது 'சிலுமின' என்ற சிங்கள வாரப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த சுஜீவ திஸாநாயக்க என்பவர் முகாமுக்குச் சென்று, நிலைமைகளை நேரில் பார்த்து அறிந்து பின்னர் 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 29ஆம் திகதிய பத்திரிகையில் இது தொடர்பான செய்தி ஒன்றினைப் பிரசுரித்திருந்தார். "பிந்துனுவேவாப் படுகொலைகளுக்குப் பொலிஸாரே பொறுப்புக் கூறவேண்டும்" என்ற தலைப்பில் இச் செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.


சிலுமின என்ற சிங்கள வாரப் பத்திரிகை அரச சார்புப் பத்திரிகை நிறுவனமான லேக்ஹவுஸினால் வெளியிடுவது குறிப்பிடத்தக்கது. இதே நிறுவனம் சிறிது காலம் வெளியிட்ட மாதாந்த சஞ்சிகையான 'அமுது'வும் பொலிஸாரைச் சாடியே கட்டுரையொன்றினைப் பிரசுரித்திருந்தது. இதன் பிரதம ஆசிரியராக விளங்கியவர் மனோரஞ்சன் என்பவராவார். வெளியிலிருந்து தாக்குதல் நடத்துவதற்கெனக் காடையர்கள் கும்பலை ஏற்றிவந்த வாகனங்கள் நீண்ட நேரமாகப் பொலிஸ் காவல் நிலைக்குச் சற்று அப்பால் நிறுத்தப்பட்டிருந்தபோதிலும் இந்த வாகனங்களின் உரிமையாளர்கள் யாரென்பதைக் கண்டுபிடிக்கப் பொலிஸார் தவறியதேன் என்றும் அப்பொழுது கேள்வி எழுப்பப்பட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக இத் தாக்குதல் முன்கூட்டியே திட்டமிட்டு நடத்தப்பட்டதென்பதற்கு தாக்குதல் நடப்பதற்கு முதல் நாள் இரவு, முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் சாட்சி பகர்கின்றன. இச் சுவரொட்டிகளின் சூத்திரதாரிகள் யாரென்பதைக் கண்டுபிடிக்க எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. "புலிக் குட்டிகளின் சதைகளை எமது நாய்களுக்கு வீசுவோம்" என்பன போன்ற ஆத்திரமூட்டும் சுவரொட்டிகளை எழுதி ஒட்டிய நாய்கள் யார்? இந்த வாசகங்கள், முன்னைய வருடம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவின் வர்ணப் படத்தோடு கூடிய தேர்தல் பிரசாரச் சுவரொட்டிகளின் பின்பக்கத்தில் இனவெறியைத் தூண்டும் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. லேக்ஹவுஸ் பத்திரிகையாளரொருவர் இந்த சுவரொட்டியை ஜனாதிபதியிடம் கையளித்திருந்தார்.

இந்த சுவரொட்டிகளை ஊவா மாகாணத்தைச் சேர்ந்த பிரபல அரசியல்வாதி ஒருவரின் கார்ச் சாரதியே பிந்துனுவேவா முகாம் பகுதிக்குக் கொண்டு சென்றார் என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பிட்ட சாரதி சம்பவம் நடந்த தினத்தன்று இரவும் அதற்கு முதல் நாள் இரவும் அக் கிராமத்துக்கு வந்து சென்றாரென்றும் தெரிவிக்கப்படுகிறது. இத்தாக்குதல் திட்டம் பற்றி பதுளையைச் சேர்ந்த அந்த முக்கிய அரசியல் பிரமுகருக்கு ஏற்கெனவே தெரியுமென்றும் கூறப்படுகிறது. இந்த அரசியல்வாதி ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதிய ஆங்கில வாரப் பத்திரிகையான 'சண்டே ரைம்ஸ்'ஸுக்கு பிந்துனுவேவா சம்பவம் தொடர்பாக அளித்த பேட்டியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

"நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காகவே இத் தாக்குதல் நடத்தப்பட்டதென்று நான் நம்புகிறேன்" என்று கூறியதோடு "....கிராமவாசிகளுக்கு ஆத்திரமூட்டியதன் மூலம் புலிகளே இத்தாக்குதலுக்குத் தூண்டியிருக்கலாம் என்ற சாத்தியத்தையும் நிராகரிக்க முடியாது" என்றும் அந்த அரசியல் பிரமுகர் தெரிவித்திருந்தார். இத்தாக்குதல் நடைபெற்று மூன்று நாட்களுக்குப் பின்னர் பதுளையிலுள்ள ஹோட்டலொன்றில் சம்பந்தப்பட்ட அரசியல் பிரமுகர் சில முக்கியஸ்தர்களுக்கு விருந்துபசாரமொன்றினை அளித்தார். இந்த விருந்துபசாரத்தில் கலந்து கொண்ட டாக்டர் ஒருவர் இத் தாக்குதலுக்கான காரணங்களை மூடி மறைத்து புலிகள் மீது பழி போடும் விதத்தில் எவ்வாறு பிரசாரம் செய்தார் என்பதை அடுத்த வாரம் பார்ப்போம்.

(தொடரும்)



## வேலி தாண்டிய வெள்ளாடுகள்


**இந்த நாட்டின் இனவெறி வரலாற்றில் இரதத்தாலும் கண்ணீராலும் எழுதப்பட்ட மற்றொரு அத்தியாயம் 'பிந்துனுவேவா படுகொலைகள்'. இந்த நரவேட்டையாடலை அரச பயங்கரவாதத்துக்கு ஓர் அசல் உதாரணமாகக் காட்டலாம். சுமார் 60 பேரைக் கொண்ட ஆயுதம் தாங்கிய பொலிஸ் படையும் உயர் பொலிஸ் அதிகாரிகளும் ஆகக் குறைந்தது வானை நோக்கியாவது துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்து, சுமார் இரண்டாயிரம் பேர் கொண்ட காடையர் கும்பலை விரட்டியடிக்காமல் வெறும் பார்வையாளர்களாகப் பார்த்துக் கொண்டிருக்க, 27 தமிழ் இளைஞர்கள் அடித்தும் வெட்டியும் எரித்தும் கொல்லப்பட்டனர். 2000ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25ஆம் திகதி இந்த நரவேட்டைநிகழ்ந்தது. இப்படுகொலைகள் பற்றி ட்ரயல் அற் பார் முறையில் விசாரணை நடத்திய மூன்று நீதிபதிகளைக் கொண்ட மேல் நீதிமன்றம், இரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் உட்பட ஐவருக்கு மரணதண்டனை விதித்தது. 2003ஆம் ஆண்டு ஜூலை மாதம் இத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றம் இத் தீர்ப்பைத் திருத்தி எழுதியது. திருத்தப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் மரண தண்டனை ரத்துச் செய்யப்பட்டது. இதற்குக் கூறப்பட்ட காரணம், சந்தேகத்துக்கிடமின்றி குற்றச்சாட்டுகளை நிரூபிக்கச் சட்டமா அதிபர் தவறி விட்டார் என்பதாகும். வெள்ளாடுகள் வேலி தாண்டிவிட்டனவா? அப்படியானால் கறுத்த ஆடுகள் யார்? WHO ARE THE BLACK SHEEPS? பிந்துனுவேவா படுகொலைகள், தொடர்பாக மனித உரிமைகளுக்கான யாழ்.பல்கலைக்கழக போதனாசிரியர் சங்கம் கடந்த 12ஆம் திகதி விடுத்த விசேட அறிக்கையைத் தழுவி 'இன்னொருவர் பார்வை'யை இம்முறை தருகிறோம். மிகுதி அடுத்த வாரம் தொடரும்.**

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

என்றெல்லாம் அசட்டுத்தனமாகப் பேசும் அரை ஆவக்காடான தன்மையை கே.எஸ்.ஜி.யிடம் காண முடியாது.

இருபது சரணங்களும் சிறப்பாக இருப்பின், முதல் சரணத்திற்கும் அந்த சிறப்பு பொருந்துமல்லவா? அது ஏன் ஆரம்பத்திலேயே அந்த இயக்குநரின் அறிவுக்கு



எட்டவில்லை? இசையறிவும், மொழியறிவும் இல்லாதவர்கள் அதிர்ஷ்டசாலிகளாக இருப்பதால்தான் இத்தகு அபத்தங்கள் நேருகின்றன.

இசையறிவிலும், மொழியறிவிலும் திரு.கே.எஸ்.ஜி. பழம் தின்று கொட்டை போட்டவர்.

அவர் எதிர்பார்க்கும் கருத்து, நாம் சொல்லும் முதல் பல்லவியிலேயோ - முதல் சரணத்திலேயோ அமைந்துவிடின் அடுத்தது எழுத அவர் நம்மை அனுமதிக்க மாட்டார்.

"உனக்கு வேணும்னா, நீ எழுதி வீட்டுக்கு எடுத்துட்டுப் போ; எனக்கு இதுபோதும்" என்பார்.

அவ்வளவு தன்னம்பிக்கை; அவ்வளவு தீர்க்கமான தெளிவான முடிவு, அவரது தீர்ப்பில் தென்படும். தனது பேனாவில் மையை நிரப்பாமல், மெய்மை நிரப்பி யதார்த்தமான உரையாடல்கள் எழுதி, நம் நாடி நரம்புகளை சுண்டிப் பார்த்தவர் திரு.கே.எஸ். கோபாலகிருஷ்ணன்.

மறுநாள் வண்டி வந்தது. கே.எஸ்.ஜி. அலுவலகத்திற்குச் சென்றேன்.

திருவாளர்கள் விஸ்வாதன் - ராமமூர்த்தி பக்கவாத்தியக்காரர்களோடு பட்டுப் பாயில் அமர்ந்திருந்தனர்.

கே.எஸ்.ஜி. ஒரு தாலாட்டு பாட்டுக்கான சிச்சுவேஷனை சொன்னார்.

ஒரே பல்லவிதான் எழுதினேன்.

### 'அத்தைமடி மெத்தையடி ஆடி விளை யாடம்மா!'

- பல்லவியை அண்ணன் விஸ்வநாதனிடம் கொடுத்தேன். அவர் படித்துவிட்டு, எந்தக் கருத்தும் சொல்லாமல், கே.எஸ்.ஜி.யிடம் கொடுத்தார்.

ஒரு சிட்டிகை பொடிகை வேகமாக உள்ளுறிஞ்சிவிட்டு கே.எஸ்.ஜி. பல்லவியைப் படித்துப் பார்த்தார்.

ஓங்கி என் முதுகில் ஓர் அறை அறைந்தார்.

அது, உற்சாகத்தின் வெளிப்பாடு என்பதைப் பிறகுதான் அறிந்து கொண்டேன்.

### வேருக்கு நீர் வார்த்த விஸ்வநாதன்

கற்பகம் படத்தின் அனைத்துப் பாடல்களையும் நானே எழுதினேன். இந்தப் படம்தான் எனக்கு ஒரு நட்சத்திர அந்தஸ்தைத் தேடித் தந்தது. இந்தப் படத்தின் நூறாவது நாள் விழா, சென்னை அசோகா ஹோட்டலில் நடந்தது. அந்த விழாவிற்குத் தலைமையேற்று, எனக்கு வெள்ளிக்குத்து விளக்கை வழங்கியவர் என் அருமை நண்பர் திரு. கண்ணதாசன் அவர்கள்.

விழாவில் சிறப்புரையாற்றிய திரு.சின்ன அண்ணாமலை என்பால் அன்புக் கொண்டவராயிருந்த போதும், கண்ணதாசனைத் திருப்திப் படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் கீழ் கண்டவாறு பேசினார்:

"சிலசமயம் எதிர்பாராமல் சப்பைக் குதிரைகள் கிண்டி ரேசில் ஜெயித்துவிடுவதுண்டு. அப்படித்தான் இந்தப் படத்தின் பாடல்களின் வெற்றியும்..."

சின்ன அண்ணாமலை இப்படிப் பேசியதைத் தன்னுடை தலைமையுரையில் மறுத்துப் பேசினார் கண்ணதாசன்.


'மனசுக்குள்ளே தேரோட்ட
மைவிழியில் வடம் புடிச்சான்'

என்கிற ஒரு வாக்கியத்திற்காகவே, வாலி நம் பாராட்டுக்குரியவர் என்று கண்ணதாசன் என்னை சிலாகித்துப் பேசி, சின்ன அண்ணாமலையின் கூற்றைப் பொய்யாக்கினார்.

(தொடரும்.......)

---

## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....



## உள்வாளிகள் 42

MI-16 ஐச் சேர்ந்த உளவாளிகள் அனு ஆயுதத் தடுப்பு இயக்கத்தின் அலுவலகங்களில் புகுந்து தஸ்தாவேஜுகளைத் தேடினார்கள் என்றும் அதன் தலைவரின் தொலைபேசியை ஒட்டுக்கேட்டார்கள் என்றும் பாராளுமன்றத்தில் கண்டனக் குரல் எழுப்பப்பட்டதும் உண்டு.

கம்யூனிஸ்ட் சீனாவும் சக்தி வாய்ந்த உளவு இலாகாவை வைத்திருக்கிறது. 1965இல் இலங்கையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்ட் உளவாளிகள் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு ஆதரவாக வேலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. 1964இல் சூடானில் இராணுவ ஆட்சி கவிழ்ந்ததற்கு சீன உளவுத் துறையினரின் பணமும் ஆயுதங்களுமே காரணம் என்று சொல்லப்படுகிறது.

புதிய சீனா செய்தி நிறுவனத்தின் (New China News Agency) செய்தியாளர்கள் என்று சொல்லிக்கொண்டு சீன உளவாளிகள் அந்நிய நாடுகளில் உளவு பார்க்கும் வேலையைச் செய்கிறார்கள்.

மேற்கு ஜேர்மனியும் இஸ்ரேலும் திறமையான உளவு நிறுவனங்களை வைத்திருக்கின்றன. உலகின் பிரதான நாடுகளில் எல்லாம் இவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் வெகுகாலம் வரை IB என்றழைக்கப்படும் உள்நாட்டு நிறுவனம் பி.என்.முல்லிக் என்பவரின் தலைமையில் சிறப்பாகச் செயல்பட்டது.

நேபாள மன்னருக்கு ராணாக்களிடமிருந்து தொல்லைகள் ஏற்பட்டபோது, அதிலிருந்து அவர் விடுதலை அடைய இந்திய உளவுத்துறையினர் (IB) கொடுத்த ஆதரவே காரணமாக இருந்தது.

சீனப் படையெடுப்பின்போது நமக்கு ஏற்பட்ட தோல்விக்கு இந்திய உளவுத்துறையினர் சிறப்பாக செயல்படாததே காரணம் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் கொடுத்த தகவல்களை அரசியல்வாதிகள் அலட்சியப்படுத்தியதே காரணம் என்கிற மற்றொரு அப்பிப்ராயமும் நிலவுகிறது.

ஆனால், சீனப் படையெடுப்புக்குப் பிறகுதான் வெளிநாட்டுத் தகவல்களை சேகரிப்பதற்கென்றே RAW என்று சொல்லப்படுகின்ற சக்தி வாய்ந்த உளவு நிறுவனத்தை இந்திய அரசு உருவாக்கிற்று. ஆர்.என்.காவேரி என்கிறவர் அதன் முதல் தலைவரானார். அதற்கு முன் அவர் IBயில் பொறுப்பான பதவி வகித்தவர். RAW நிறுவனத்திற்கு நவீன விஞ்ஞானச் சாதனங்களை பெற்றுத் தந்து அதை சிறந்த முறையில் அமைத்தவர் காவேரி.

பங்களாதேஷ் போரின் போது RAW தனது திறமையை வெளிப்படுத்திற்று. பங்களாதேஷ் அதிபர் முஜிபுர் ரஹ்மானைக் கொல்லுவதற்கு சதி உருவாகி வருவதாக தகவல் அறிந்து RAW இந்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. இந்தத் தகவலை இந்திய அரசு முஜிபுர் ரஹ்மானுக்குத் தெரிவித்தது. முஜிபுர் ரஹ்மான் அதை அலட்சியப்படுத்தினார். அதற்கான விலையினையும் அவர் கொடுத்தார். குடும்பத்தாரோடு அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சமீபத்தில் இந்தியாவில் உருவாகி வரும் நிலைமைகளை வைத்துப் பார்க்கும் போது RAW வின் முக்கியத்துவம் அதிகரித்துக்கொண்டே போகும் என்பதில் சந்தேகமில்லை.

(தொடரும்.......)


(நன்றி : நர்மதா)

---

# மாமேதை ஆனந்தராஜா

நெருக்கமானவர்களால் ஆனந்தி எனவும், சகலராலும் ஆனந்தராஜா மாஸ்டர் எனவும் மிக மரியாதையுடன் அழைக்கப்பட்ட மாமேதை ஆனந்தராஜா, புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டு 2005 ஜூன் 26ஆம் திகதியுடன் 20 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. சிங்கள பேரினவாதத்திற்கு எதிராகத் தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கியதிலிருந்து பல தமிழ்த் தலைவர்கள் புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஆயினும் அரசியல்வாதி அல்லாத, புலிகளினால் கொல்லப்பட்ட முதல் புத்திஜீவி, அதிபர் ஆனந்தராஜா ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்போதைய பேரினவாத அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தலின் காரணமாகவே தமிழர் விடுதலைப் போராட்டம் மாணவர் பங்களிப்புடன் ஆயுதப் போராட்டமாக புதிய பரிணாமம் எடுத்தது. இதற்கு மூலகாரணமாக அமைந்தது, வெள்ளை அறிக்கையாகும். அவ்வெள்ளை அறிக்கைக்கு எதிராக வெகுண்டெழுந்த தமிழ் மாணவர்களை "ஈழ மாணவர் பொது மன்றம்" (GUES) ஓரணிப்படுத்தி போராட்டம் நடாத்த முற்பட்டது. இதற்காக ஈழ மாணவர் பொது மன்ற அங்கத்தினர்கள் தமது போராட்ட ஆதரவிற்காக சகல பாடசாலைகள், கல்லூரிகளுக்கும் ஏறி இறங்கி, அதிபர்கள், ஆசிரியர்களின் ஒத்துழைப்பு, ஆதரவைக் கோரினார்கள்.



மாமேதை ஆனந்தராஜா

இதில் முன்னின்று செயற்பட்டவர் அப்போதைய GUES பிரதிநிதியும், தற்போதைய அமைச்சருமாகிய டக்ளஸ் தேவானந்தா ஆவார். இதன் காரணமாக கைது செய்யப்பட்ட டக்ளஸ் தேவானந்தா சிறை வைக்கப்பட்டார். தோழர் டக்ளஸ் தேவானந்தாவின் பணியினை முன்னெடுத்துச் சென்ற தோழர் நடராஜா ரமேஷ், டேவிற்சன் மற்றும் GUES பிரதிநிதிகள் அதிபர் ஆனந்தராஜாவிடம் தமது போராட்டத்திற்கு ஆதரவு நல்குமாறு கோரினார்கள். அரச ஆயுதப் படையினரின் அடக்குமுறைகள் ஆரம்பித்த அக்காலத்தில் பல கல்விமான்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் வெள்ளை அறிக்கை பற்றி மூச்சு விடவே பயந்த காலத்தில் துணிந்து நின்று மாணவர் கூட்டங்களில் மேடைகளில் உரையாற்றினார். வெள்ளை அறிக்கை எப்படி எல்லாம் தமிழ் மாணவர்களைப் பாதிக்கப் போகின்றது என்பதனை விலாவாரியாக எடுத்து முழங்கினார். இக்கால கட்டத்தில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஈழ மாணவர் பொது மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் பொதுக் கூட்டத்தில் அதிபர் ஆனந்தராஜா ஆற்றிய உரை அப்போது சகல பத்திரிகைகளிலும் பரபரப்பான செய்தியாக வந்தது குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் அரசியலில் பூரண அறிவு பெற வேண்டும். ஆனால் அரசியலின் பேரில் மாணவர்களின் எதிர்காலம் எவ்வகையிலும் சீரழியக் கூடாது என்பதிலும் உறுதியான கொள்கைப்பிடிப்புக் கொண்டவர் அதிபர் ஆனந்தராஜா. 1979ஆம் ஆண்டு சென். ஜோன்ஸ் கல்லூரி உயர்தர மாணவர்களின் வருடாந்த ஒன்று கூடல் இராப்போசன விருந்திற்கு பிரதம விருந்தினராக ஈழத் தமிழரின் தேசியத் தலைவர் அ. அமிர்தலிங்கம் வரவழைக்கப்பட்டார்.

1983 ஆடிக் கலவரம் வெடித்த நேரம், தென்னிலங்கையில் இருந்து உடைமைகள் அனைத்தையும் இழந்து உயிரை மட்டும் கையில் பிடித்துக்கொண்டு தமிழ் மக்கள் அநாதரவாக கப்பல்களில் வந்துகொண்டிருந்த நேரம், தனது கல்லூரி மாணவர்களில் என்னென்ன கழகங்கள், சங்கங்கள் உண்டோ அனைவரின் சேவைகளையும், வெறுங்கையுடன் காங்கேசன்துறை துறைமுகத்தில் வந்திறங்கிய அகதிகளின் துயர்துடைக்கப் பயன்படுத்தினார். தனது கல்லூரி வரையறைக்குள் மட்டும் நின்றுவிடாமல் ஏனைய கல்லூரிகள், கழகங்களின் உதவிகளையும் பெற்று



புலிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் ...க்கப்பட்ட அதிபர் ஆனந்தராஜா நினைவு கட்டிடம்

ஒருங்கிணைந்து செயற்படுத்தினார். அது மட்டுமல்ல, 83 கலவரத்தில் பாதிக்கப்பட்டு வந்த மாணவர்களுக்கு வகுப்பறைகளைக் கட்டி தனது கல்லூரியிலேயே அனுமதி வழங்கி கல்வியைத் தொடரச் செய்ததுடன் ஏனைய யாழ். பாடசாலைகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து காட்டினார். இவற்றைப் பின்பற்றியே பல பாடசாலைகள் வகுப்பறைகளை அதிகரித்து, பாதிக்கப்பட்ட மாணவர்களை இணைத்துக் கொண்டன.

80களின் நடுப்பகுதியில் படையினரின் சுற்றிவளைப்பு, தேடுதல், கைதுகள், காணாமற் போதல் என்பன உக்கிரமடைந்திருந்த நேரம். அதுதான் புத்திஜீவிகள், மூளைசாலிகள் யாழ்ப்பாணத்தை விட்டு புலம்பெயர ஆரம்பித்த காலம். ஆனால், அதிபர் ஆனந்தராஜா நின்றிருந்த இடங்களோ, பொலிஸ் நிலையங்களும், இராணுவ முகாம்களும்தான் அதிகம். ஒரு மாணவன் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டாலோ, முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டாலோ, அம் மாணவன் விடுதலையாகும் வரை அதிபர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மிகவும் துரிதமானவை.

அதிபர் ஆனந்தராஜா மீது அக்காலத்தில் படையினர் அவ்வளவு பயம் வைத்திருந்தனர். இதே நேரம் படையினர் தொடர்பில் அதிபர் ஆனந்தராஜாவை மென்மையான போக்கைக் கடைப்பிடிக்கும்படி நெருங்கிய பலர் அவருக்கு ஆலோசனை கூறினார்கள். ஏனெனில் அதிபர் ஆனந்தராஜாவிற்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அது படையினரால்தான் ஏற்படும் என பலர் முற்று முழுதாக நம்பினார்கள். ஏனெனில் அந்த அளவிற்குப் படையினருக்கு அவர் சிம்ம சொப்பனமாக விளங்கினார்.

இக் காலத்தில்தான் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ்த் தரப்பினருக்கும் இடையில் வரலாற்றில் முதல் தடவையாக 1985இல் போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பன ஏற்படுத்தப்பட்டன. அப்போது கோட்டை இராணுவ மேஜர் பல்த்சர், அதிபர் ஆனந்தராஜாவுடன் தொடர்பு கொண்டார். அவர் அதிபர் ஆனந்தராஜாவின் முன்னாள் மாணவர் என்பது பலருக்கு இன்று வரை தெரியாத விடயம். அந்த அதிகாரி விடுத்த வேண்டுகோள் ஒன்றுதான். 'இப்போது சமாதான காலம். எவருமே போரை விரும்பவில்லை. நாம் ஒரு கிரிக்கெட் போட்டி விளையாடுவோம். பழைய பகைமையை மறந்து விளையாட்டின் மூலம் நட்பை, உறவை ஏற்படுத்துவோம்.' இது தான் அக் கோரிக்கை. இதே சிந்தனையில் இருந்த அதிபரும் அதற்கு உடன்பட்டார். யாழ். கோட்டை



மாமேதையின் கல்லறை

மைதானத்தில் மாணவர்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் விளையாட்டுப் போட்டி நடந்தது. வீண் சந்தேகங்கள் மறைந்து புரிந்துணர்வு ஏற்பட்டது. 'படையினர் எல்லோரும் கொலைகாரர் அல்ல - மாணவர்கள் எல்லோரும் புலிகள் அல்ல' என்னும் பரஸ்பர நம்பிக்கை பிறந்தது. அந்த நம்பிக்கையின் விளைவாகவே அதிபர் ஆனந்தராஜாவின் வாழ்விற்கு புலிகளினால் வேட்டு வைக்கப்பட்டது.

தாம் மட்டுமே தமிழர்களை ஆள வேண்டியவர்கள். தமிழ் சமுதாயத்தில் புத்தி ஜீவிகளோ, சிந்தனையாளர்களோ இருக்கக் கூடாது என்று தீர்மானம் கொண்ட புலிகள், மேற்சொன்ன விளையாட்டுப் போட்டியைக் காரணம் காட்டி அதிபரை நடுவீதியில் கோழைத்தனமாகச் சுட்டுக் கொன்றார்கள். 1985ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் திகதி, அப்போதைய யாழ். புலித் தளபதி கிட்டுவின் உத்தரவின் பேரில், ரிச்சட் என்பவன் அதிபர் ஆனந்தராஜாவை யாழ். சுண்டுக்குளி றக்கா வீதியில் வைத்துச் சுட்டுச்சாய்த்தான்.

சொந்தத் தமிழ் மக்களை, புத்தி ஜீவிகளை சுட்டுக்கொல்லும் புலிகளின் படுபாதகச் செயல் இன்று வரை நிறுத்தப்படவில்லை என்பதுதான் தமிழ் மக்களின் சாபக்கேடு. அதிபர் ஆனந்தராஜாவைச் சுட்டுக்கொல்ல உத்தரவிட்ட கிட்டு சிறிது நாட்களுக்குள்ளாகவே கோட்டை இராணுவ முகாம் காப்டன் கொத்தலாவலவுடன் கொஞ்சிக் குலாவியதும், கிட்டுவின் கடவுச் சீட்டிற்கு சாட்சிக் கையெழுத்திட்டது காப்டன் கொத்தலாவல என்பதும் வரலாறு.

அதிபர் ஆனந்தராஜாவைச் சுட்டுக்கொன்ற ரிச்சட் இன்று பரீஸ் நகரில் மதபோதகராக மாறி, கையில் பைபிளுடன் செய்யும் பிரசங்கம் என்ன தெரியுமா? 'கொலை செய்யாதிருப்பாயாக - தவறு விடாதிருப்பாயாக' என்பதுதான்.


# சங்கர மடத்துக் கிங்கரர்கள்

## 23

சங்கரராமன் கொலை வழக்கில் அரசு தரப்பில் அப்ருவராகிய கண்ட்ராக்டர் ரவி சுப்பிரமணியத்தைக் கொலை செய்ய இக் கொலைவழக்கில் கைதாகி மறியலில் இருக்கும் ரகு, சுந்தரேச ஐயர், கதிரவன், கே.எஸ்.குமார் ஆகியோர் திட்டம் தீட்டினார்களென்று பொலிஸார் மற்றொரு வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர். கதிரவனின் அண்ணனான அலங்கார் என்பவனோடு சென்னை மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்த அகிலன் என்பவன் கொடுத்த தகவலையடுத்தே இப்போது இவர்கள் புதிய சிக்கலில் மாட்டியிருக்கின்றனர். செங்கல்பட்டு செஷன்ஸ் நீதிமன்றத்துக்கு ரவி சுப்பிரமணியம் கூட்டி வரப்படும்போது கொலை செய்வதற்கு திட்டம் தீட்டப்பட்டிருந்ததாகவும் இதற்கெனத் தனக்கு இருபதாயிரம் ரூபா பணம் தரப்பட்டதாகவும் இவற்றில் பத்தாயிரம் ரூபா பணத்தை எடுத்துக்கொண்டு திருப்பதி சென்று கஞ்சா வாங்கி வந்ததாகவும் அகிலன் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளான். இதனையடுத்துக் கஞ்சா, கொலைச் சதி வழக்குகள் விஜயேந்திரரின் தம்பியான ரகு மீதும், சங்கரமடத்தின் முன்னாள் மேலாளரான சுந்தரேச ஐயர் மீதும் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. காஞ்சிபுரம் இடைத்தேர்தலை முன்னிட்டே இந்த வழக்கு சோடிக்கப்பட்டதாக சங்கரமடத் தரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ரகு, சுந்தரேச ஐயர் ஆகியோரே இக் கொலைத் திட்டத்தை வகுத்ததாகவும் சங்கரராமன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட மீனாட்சிசுந்தரம் என்பவரே இக் கொலைத் திட்டம் பற்றித் தன்னிடம் கூறினாரென்றும் அகிலன் தெரிவித்துள்ளான். சென்னை மத்திய சிறையிலிருக்கும் கே.எஸ்.குமார் என்பவரும் தன்னிடம் பேசினாரென்றும் அகிலன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் பகுதியிலுள்ள மணிமங்கலம் என்ற இடத்திலுள்ள சென்னகுப்பத்தைச் சேர்ந்தவன் அகிலன். இவனொரு கேடி. வீரராகவன் என்பவரைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டுச் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தான். காஞ்சிபுரம் இடைத்தேர்தல் மே மாதம் 14ஆம் திகதி நடைபெறுவதற்கு சுமார் மூன்று வாரங்கள் முன்னதாகத்தான் இவன் விடுவிக்கப்பட்டிருந்தான். ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி ஜாமினில் வெளிவந்த அகிலன், செங்கல்பட்டு பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருந்தபோது பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டான். சந்தேகத்துக்கிடமாக நடமாடியதால் ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி இவன் கைது செய்யப்பட்டான். கைதானபோது அவனிடம் கஞ்சா இருந்தது. அவன் தங்கியிருந்த லொட்ஜை சோதனையிட்டபோது பெருமளவு கஞ்சா பிடிபட்டது. பெருந்தொகைப் பணமும் கைப்பற்றப்பட்டது. ஏது இவ்வளவு பணமெனப் பொலிஸார் தமது வழமையான பாணியில் விசாரித்தபோதுதான் உண்மையைக் கக்கினான். ரவி சுப்பிரமணியத்துக்குத்தான் சங்கரமடத்தின் உள்விவகாரங்களெல்லாம் அத்துப்படியாகத் தெரியும். அவன் அப்ருவராக மாறி ஜெயேந்திரர், விஜயேந்திரருக்கு மட்டுமல்ல, அப்பு, கதிரவன் போன்றவர்களுக்கும் பிரச்சினையைத் தந்துவிட்டான். அவனால்தான் அப்புவும், கதிரவனும் குண்டர் சட்டத்தின் கீழ் ஜாமினில் வெளியே வர முடியாதபடி



மீனாட்சி சுந்தரம்



மீனாட்சி சுந்தரம் வாழ்ந்த வீடு

சிறைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். எனவே அவனைத் தீர்த்துக்கட்டுவதே சரியென்று மீனாட்சிசுந்தரம் தன்னிடம் சொன்னதாகப் பொலிஸாரிடம் கூறினான் அகிலன்.

ரவி சுப்பிரமணியம் காஞ்சிபுரம் கிளைச் சிறையில் இருக்கும்போதோ அல்லது நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்படும்போதோ தீர்த்துக்கட்ட வேண்டுமென்பதுதான் திட்டம். இதற்காக எவ்வளவு பணம் தேவையானாலும் தருவதாக மீனாட்சிசுந்தரம் உறுதியளித்திருந்தாராம். கதிரவனின் அண்ணன் அலங்காரைப் போய்ப் பார்க்கும்படி கூறியவரும் மீனாட்சிசுந்தரம்தானென்று பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் கூறியிருக்கிறான் அகிலன். ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி செங்கல்பட்டு செசன்ஸ் நீதிமன்றத்துக்கு ரவி சுப்பிரமணியம் கூட்டிவரப்படும்போது தீர்த்துக் கட்டுவதற்கே முதலில் திட்டம் தீட்டப்பட்டிருந்ததாம். ஆனால் அகிலனால் அதனை நிறைவேற்ற முடியவில்லை.

கொலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னதாகவே அகிலன் கைதுசெய்யப்பட்டதால் எல்லாவற்றிலுமே மண் விழுந்து போய்விட்டது. இப்போது ரவி சுப்பிரமணியத்தைக் கொலை செய்யச் சதி செய்ததாக ஏழு பேர் மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. முதலாவது எதிரியாக அகிலன் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. மீனாட்சிசுந்தரம், ரகு, சுந்தரேசஐயர், கதிரவன், கே.எஸ்.குமார், அலங்கார் ஆகியோர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. போதைப் பொருள் தடுப்புச் சட்டம், கொலைச் சதி ஆகிய சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மீனாட்சிசுந்தரம் சென்னை மத்திய சிறையிலிருந்து வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார். தற்போதும் அவர் வேலூர் சிறையிலேயே உள்ளார். சங்கரராமன் கொலை வழக்கில் போலிக் குற்றவாளிகளை ஆஜராக்கினாரென்ற குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்டவர் மீனாட்சிசுந்தரம். இவரைத் திட்டமிட்டுத்தான் பொலிஸார் வேலூர் சிறைக்கு மாற்றியுள்ளனரென்றும் கதையடிபடுகிறது. அதாவது தமது வழக்குக்கு ஆதரவாக மீனாட்சிசுந்தரத்தைப் பாவிப்பதே பொலிஸாரின் திட்டமென்றும் கூறப்படுகிறது. இதில் எந்தளவுக்கு உண்மை இருக்கிறதென்பது சரிவரத் தெரியவில்லை. ஆனால் மீனாட்சிசுந்தரம் ஆஜர்செய்த போலிக் குற்றவாளிகளில் சிலர் தாம்பரத்தைச் சேர்ந்தவர்கள். அகிலனும் தாம்பரத்தைச் சேர்ந்தவன் என்பதால் வழக்கை நன்றாகத் தொடுத்திருக்கிறார்கள் பொலிஸார்.

கஞ்சா, கொலைச் சதி வழக்கெல்லாம் திட்டமிட்டே போடப்பட்டது என்கிறார்கள் சங்கரமடத்து விசுவாசிகள். ஏனெனில் குண்டர் சட்டத்தின் கீழ் கைதான கதிரவன், ரகு, சுந்தரேச ஐயர் உள்ளிட்ட பலர் மீதான வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதன் தீர்ப்பு கதிரவன் உள்ளிட்ட ஏனையவர்களுக்குச் சார்பாக அமைந்துவிட்டால் அவர்கள் ஜாமினில் வெளிவந்து விடுவார்கள். இதனைத் தடுப்பதற்காகவே புதிதாக வேறொரு வழக்கைக் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பொலிஸ் தாக்கல் செய்திருக்கிறது என்கிறார்கள் சங்கரமடத் தரப்பினர்.

இந்த வழக்கைப் பொலிஸ் தாக்கல் செய்யப்போகிறதென்ற தகவல் முதலில் கதிரவனின் நண்பர்களுக்குத்தான் கிடைத்ததென்று கூறப்படுகிறது. சேட் என்பவனின் வாக்குமூலத்தை வைத்துத்தான் பொலிஸ் வழக்குத் தாக்கல் செய்யப்போகிறதென்று தகவல் கிடைத்ததும், கதிரவனின் நண்பர்கள் "எந்த சேட்" என்று மண்டையைப் போட்டுப் பிய்த்தனராம். ஏனெனில் சென்னையில் மட்டும் சேட் என்ற பெயரில் பதினைந்துக்கு மேற்பட்ட கிரிமினல்கள் நடமாடுகிறார்களாம். கதிரவனின் உறவினரொருவரின் பெயரும் சேட் தானாம். அம்பத்தூர் சேட், தாம்பரம் சேட், காஞ்சிபுரம் சேட் என்று பலர் புனைபெயர்களில் நடமாடுகிறார்களாம். கடைசியில்தான் அகிலன் மணிமங்கலம் சேட் என்பது தெரியவந்ததாம்.

செங்கல்பட்டு செஷன்ஸ் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றுபவர் ஒரு முஸ்லிம். அவரது பெயர் அக்பர் அலி. ஏற்கனவே இளைய மடாதிபதி விஜயேந்திரரின் மனு, நீதிபதி அக்பர் அலி முன்வந்தபோது, "சீதையைப் போலத் தீக்குளித்துத் தனது களங்கத்தை விஜயேந்திரர் துடைக்க வேண்டும்" என்று கூறி ஜாமீன் மனுவைத் தள்ளுபடி

**காஞ்சிபுரத்திலிருந்து**
**அருண் கண்ணன்**

செய்தவர். ஏப்ரல் 27ஆம் திகதி இவருக்கு முன்பாக வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது விசாரணைக்கு முன்னதாகவே பத்திரிகையாளர்களை அழைத்து "எத்தனை பேர் வந்துள்ளீர்கள்?" என்று கேட்ட நீதிபதி, பத்திரிகையாளர்களுக்குத் தனியான இடவசதியும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். இந்த விடயம் சங்கரமடத்து விசுவாசிகளை முகம் சுளிக்க வைத்துள்ளது. அத்துடன் நீதிமன்றத்துக்குள் ஜெயேந்திரர் வந்ததும், நீதிபதி அக்பர் அலியைப் பார்த்துச் சிரித்தார். அதனைப் பொருட்படுத்தாத நீதிபதி அக்பர் அலி, சைகையால் அவரை உட்காருமாறு பணித்தார்.

நீதிமன்றத்துக்கு ஜெயேந்திரரும், விஜயேந்திரரும் வந்தபோது, அவர்கள் அமர்வதற்கு நாற்காலி போடப்பட்டதும் சாமிகள் உட்காருவதற்கு வழக்கமாகப் பயன்படுத்தும் துணிகளை அதன் மீது விரித்தார்கள்.

இதற்கிடையில் இளைய மடாதிபதி விஜயேந்திரரின் தம்பியான ரகு, அப்ருவராக மாறப்போகிறாரென்ற வதந்தி பலமாக அடிபடுகிறது. சேலம் ஜெயிலில் இருந்து செங்கல்பட்டு நீதிமன்றத்துக்கு ரகு வந்து சேரத் தாமதமாகிவிட்டது. வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்ட பின்னரே அவர் நீதிமன்றத்துக்கு வந்து சேர்ந்தார். விசாரணை முடிந்து வழக்கு ஒத்திவைக்கப்பட்ட பின்னர், சங்கரமடத்து வாகனத்துக்குள் அமர்ந்திருந்த சங்கராச்சாரியார்களை பொலிஸாரின் அனுமதியோடு ரகு சென்று பார்த்தார். சங்கரராமன் கொலை வழக்கில் கைதான பின்னர் ஜெயேந்திரர், ரகுவிடம் அவ்வளவாக முகம் கொடுத்துப் பேசுவதில்லை. எதிர்ப்படும் போதெல்லாம் வெறும் புன்சிரிப்பை உதிர்த்துவிட்டுப் போய்விடுவார். ஆனால் "கவலைப்படாதே நாங்கள் இருக்கோம்" என்று ஜெயேந்திரர் ரகுவிடம் கூறினார்.

(தொடரும்....)





கர்ம யோக மொன்றே - உலகில் காக்கு மென்னும் வேதம்
தர்ம நீதி சிறிதும் - இங்கேயகு தவற லென்ப தின்றி,
மர்ம மான பொருளாம். நின்றன் - மலர டிக் கண்நெஞ்சம்.
செம்மை யுற்று நாளும் - சேர்ந்தே - தேசு கூடவேண்டும்.

- சுப்பிரமணிய பாரதியார்

# ஜோதிடனும் முத்துவும்

பரங்கிபுரம் என்ற சிற்றூரில் முத்து என்ற இளைஞன் வசித்து வந்தான்.

இளம் வயதிலேயே கடினமாக உழைத்து அவன் கொஞ்சம் பணம் சேர்த்துக் கொண்டான். தான் சேர்த்து வைத்திருந்த பணத்தை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு ஊராகச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டான்.

முத்து சிறுவயதிலேயே தண்ணீரைக் கண்டால் பயப்படுவான். அதனால் அவன் ஒவ்வொரு ஊராகச் சுற்றுகின்ற வேளைகளில் அங்குள்ள ஆறு, குளம், ஏரிகளில் எல்லாம் குளிக்க மாட்டான். சிறிது தண்ணீரை எடுத்து வந்து கரையோரத்தில் நின்றபடி குளித்துக் கொள்வான்.



முத்துவின் இந்தச் செயலை வெளியூர்க்காரர்கள் எல்லோரும் வேடிக்கையாகப் பார்ப்பது வழக்கம்.

வெளியூர் ஆட்கள் எல்லோரும் தன்னை வேடிக்கையாகப் பார்க்கின்றார்களே என்று முத்து ஒருபோதும் கவலைப்படமாட்டான். கரையோரத்தில் சீக்கிரமாக குளித்து முடித்துவிட்டு தான் செல்ல வேண்டிய இடத்திற்குப் புறப்பட்டு விடுவான்.

ஒருநாள் முத்து களைப்போடு ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தான். அந்த மரத்தடியில் போலி ஜோதிடன் ஒருவன் அமர்ந்திருந்தான்.

அவன் யாரை ஏமாற்றி பணம் பறிக்கலாம் என்று ஆவலுடன் 'யாராவது வரமாட்டார்களா?' என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

முத்துவைக் கண்டதும் அந்தப் போலி ஜோதிடன் உற்சாகமடைந்தான்.

உடனே எழுந்து முத்துவின் அருகே சென்றான்.

"தம்பி! உன்னைப் பார்க்கையில் ராஜயோகம் உள்ளவனாக தெரிகின்றாய்! உன் கைகளைப் பார்த்து நான் ஆராய்ந்து பலன்களைக் கூறுவேன். ஆனால் அதனைக் கேட்டதும் நீ ஆனந்தமடைவாய்! பணத்தையும் அள்ளி அள்ளி எனக்குத் தருவாய்! ஆனால் நானோ பணத்திற்கு ஆசைப்பட்டு உன் கையைப் பார்க்க முடியாது. ஏனென்றால் உன்கையில் யாருமே பார்த்துப் பலன் கூற முடியாதபடி நல்ல அம்சங்கள் இருக்கின்றன. அந்த அம்சத்தை நான் என்னுடைய கண்களால் பார்க்கும் பாக்கியம் இல்லை" என்று அலுத்துக்கொண்டே கூறினான்.

அந்த போலி ஜோதிடனின் ஆசை வார்த்தைகள் முத்துவின் மனதை மிகவும் கவர்ந்தன. உடனே அவன் அந்த போலி ஜோதிடனின் முன்னே தன் கைகளை நீட்டினான்.

"ஐயா ஜோதிடரே! நீர் இவ்வளவு தூரம் தெரிவித்த பின்னாடியும் நான் என் கைகளை உம் முன்னால் நீட்டாமல் இருப்பது நல்லதல்ல என்றே நினைக்கிறேன். இதோ உம் முன்னால் எனது கைகளை நீட்டி விட்டேன். நீர் என்னுடைய கைகளைப் பார்த்து எனது எதிர்காலம் எப்படி இருக்கின்றது என்பதைத் தெளிவாகக் கூறும்" என்றான்.

முத்து அவ்வாறு கூறியதைக் கேட்டதும் அந்தப் போலி ஜோதிடன் ஆனந்தமடைந்தான்.

இன்று அவனிடம் நம் செலவுக்குத் தேவையான பணத்தைப் பிடுங்கிவிட வேண்டியதுதான் என்று முடிவு செய்தான்.

உடனே முத்துவைப் பார்த்து "தம்பி! உன் கைகளில் ராஜயோகத்திற்கான ரேகையானது ஓடிக்கொண்டிருக்கிறது. இன்னும் இரண்டு வருடம் கழித்து உனக்கு கண்டிப்பாக அரசாங்கத்தில் வேலை கிடைக்கும். அப்போது நீ என்னை நினைத்துப் பார்ப்பாய்! உனக்கு அரசாங்கத்தில் வேலை கிடைத்தவுடன் அழகான மனைவியும் வாய்ப்பாள். உனக்கொரு ஆண் குழந்தையானது பிறக்கும். அதன் பின்னர் நீ சொந்தமாக வீடு கட்டுவாய்! அதன் பின்னர் கார், பங்களா, வீடுகள், தோட்டம் என்று சொல்ல முடியாத அளவுக்கு சொத்துகள் சேரும்" என்றாள்.

இதனைக் கேட்ட முத்து அளவிலா மகிழ்ச்சியடைந்தான. "ஜோதிடரே! நீர் சொல்வதெல்லாம் உண்மைதானா? உமது பேச்சைக் கேட்கக் கேட்க ஆனந்தமாக இருக்கிறது. ஆனால் நீர் சொல்வதெல்லாம் நடக்குமா? என்று என் மனத்திற்கு அச்சமாக இருக்கின்றது." என்றான் முத்து.

"தம்பி! நீ அச்சமோ தயக்கமோ படவேண்டிய தேவையே இல்லை. நான் சொன்னபடி எல்லாமே நடக்கும். எத்தனை பேர்களுக்கே நான் ஜோதிடம் பார்த்துள்ளேன். நான் ஜோதிடம் பார்த்தவர்கள் எல்லாம் பெரும் பணக்காரர்களாவும் கோடீஸ்வரர்களாகவும் இருக்கின்றார்கள். அதனால் நீ அச்சமோ, கவலையோ படத் தேவையில்லை. நான் யாருக்கும் ஜோதிடம் பார்க்கத் தயக்கம் காட்டுவேன். அவ்வளவு எளிதாக யாருடைய கையையும் பார்க்கமாட்டேன். உன்னைப் பார்த்த மாத்திரத்தில் ராஜ அம்சம் பொருந்தியவனாக இருக்கின்றாய்! அதனால் நான் உனக்கு ஜோதிடம் பார்க்க முன்வந்தேன்" என்றான் அந்த போலி ஜோதிடன்.

அதனைக் கேட்டதும் முத்துவிற்கு அவன் பெயரில் நம்பிக்கை வந்தது.

"ஐயா! ஜோதிடரே! இப்போது நான் உம்மை முழுமையாக நம்புகிறேன்! இன்னும் நன்றாக என் கையைப் பார்த்து என்னென்ன நடக்கப்போகிறது என்பதைத் தெளிவாக எடுத்துக்கூறும்" என்றான்.

உடனே போலி ஜோதிடன் 'நாம் நல்லதையே சொல்லிக் கொண்டிருந்தால் இவன் நம்மை சந்தேகப்பட்டு விடுவான் போலத் தெரிகிறது. நாம் ஒரு போலி ஜோதிடன் என்று தெரிந்துவிட்டால் நமக்குக் கிடைக்க இருக்கும் பணமாவது கிடைக்காமல் போய்விடும். அதனால் நாம் ஓரிரு கெட்ட பலன்களையும் அள்ளிவிடுவது தான் நல்லது' என முடிவு செய்தான்.

உடனே அவன் முத்துவை நோக்கி "தம்பி! 'உனக்கு ஏராளமாக நல்ல பலன்கள் எல்லாம் கைகூடி வருகின்றன. ஆனால் உனக்கொரு கண்டம் இருக்கிறது. அந்தக் கண்டம் தண்ணீரால் ஏற்பட வாய்ப்புள்ளது அதனால் நீ தண்ணீரைக் கண்டால் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும்." என்றான்

அதனைக் கேட்ட முத்து திடுக்கிட்டான். ஏற்கெனவே தண்ணீரைக் கண்டால் முத்துவிற்கு பயமாக இருந்தது. இப்போது இந்த போலி ஜோதிடர் கண்டம் இருக்கிறது என்று சொன்னதும் கூடுதலாகப் பயந்தான்.

உடனே அந்த போலி ஜோதிடரை நோக்கிய அவன் "ஐயா! நல்ல வேளையாக நீர் இந்தப் பலனை என்னிடம் தெரியப்படுத்தினீர்! இது மட்டும் எனக்குத் தெரியாதிருந்தால் நான் பெரும் ஆபத்தில் சிக்கியிருப்பேன். நல்ல வேளையாக நீர் இதைக் கூறியதற்காக உமக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுக்கலாம்! இதோ நான் உமக்கு ஐம்பது ரூபாய் கொடுக்கிறேன்! இதனை நீர் அன்போடு வாங்கிக் கொள்ள வேண்டும்" என்று இவர் முன்னே பணத்தை நீட்டினான்.

உடனே போலி ஜோதிடனும் "தம்பி! நான் ஜோதிடத்திற்காக யாரிடமும் கைநீட்டி பணம் வாங்க மாட்டேன்! நீ எனக்கு அன்போடு மனம் உவந்து இந்த ஐம்பது ரூபாயைக் கொடுப்பதினால் இதனை வாங்காமல் இருப்பது தவறு என்று நினைக்கிறேன். எனவே நீ கொடுக்கின்ற பணத்தை வாங்கிக் கொள்கிறேன்" என்று கூறியபடி பணத்தை வாங்கிக் கொண்டான்.

பின்னர் முத்து அந்த போலி ஜோதிடனிடம் விடை பெற்றபடி தன் ஊருக்குத் திரும்பினான்.

**பாப்பா முரசு சிறுகதை**

ஊருக்கு வந்தவுடன் முத்துவின் நண்பர்கள் எல்லாம் இவனைப் பார்க்க வந்தனர்.

தன் நண்பர்களைப் பார்த்த முத்து "நண்பர்களே! நான் பல ஊர்களுக்குச் சென்று சுற்றிப் பார்த்தேன். அவையெல்லாம் எனக்குப் புது அனுபவமாக இருந்தன" என்றான்.

முத்து கூறக் கேட்டதும் அவன் நண்பர்கள் எல்லோரும் ஆச்சர்மடைந்தார்கள்.

"முத்து நம் ஊர் குளத்தில் தண்ணீர் அதிகமாகப் பெருகிக் கொண்டிருக்கிறது. நீ வந்தால் நாம் எல்லோருமாக சேர்ந்து குளிக்கலாம்" என்றனர் நண்பர்கள்.

தண்ணீர் என்ற பேச்சைக் கேட்டதுமே முத்துவிற்கு ஜோதிடர் சொன்ன தண்ணீரில் கண்டம் என்பது தான் நினைவு வந்தது.

அதனைக் கேட்ட நண்பர்கள் "முத்து நீ எத்தனை நாட்கள் தான் இப்படி இருப்பாய்! அந்த ஜோதிடர் உன்னிடம் ஏதாவது பொய்களைக் கூறியிருக்கலாம். நீ அவருடைய பேச்சை உண்மையென்று நம்பவேண்டாம். தண்ணீரில் நீ குளிக்கின்ற போது உனக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது. அப்படி ஏதாவது ஆபத்து ஏற்படின் உடனே நாங்கள் உன்னைக் காப்பாற்றி விடுவோம்! நாங்கள் மொத்தம் பத்து பேர்கள் இருக்கின்றோம். இந்தப் பத்துப் பேர்களில் ஒருவராவது உன்னைக் காப்பாற்ற மாட்டோமா! அதனால் நீ ஒரு போதும் பயப்படவேண்டிய அவசியமில்லை" என்றனர்.

அதனைக் கேட்டதும் முத்து "நண்பர்களே! உங்கள் எவர்மீதும் எனக்கு நம்பிக்கை கிடையாது. இதுநாள் வரையிலும் நான் தண்ணீரில் இறங்காமலே இருந்துவிட்டேன். அதனைப் போன்று இப்போதும் தண்ணீரில் இறங்காமலே இருந்து விடுகிறேன். தயவு செய்து என்னை வற்புறுத்தாதீர்கள்" என்றான்.

அதனைக் கேட்டதும் நண்பர்கள் "முத்து நீ எத்தனை ஊர்களுக்குச் சென்றிருப்பாய்! எங்கெல்லாமோ அலைந்திருப்பாயே! எத்தனை இடங்களில் உன் கால்கள் பட்டிருக்கும்?

ஆனால், தண்ணீரில் இறங்க மட்டும் தயக்கம் காட்டுகின்றாயே! சிறு வயதிலேயே இப்படிப்பட்ட பழக்கம் உனக்கு இருந்தது தாழ்வு மனப்பான்மையினைத்தான் குறிக்கின்றது. நீ எங்களோடு குளிக்க வருவதால் உன்னுடைய தாழ்வு மனப்பான்மை விலகிவிடும். எப்போதும் ஒரே இடத்தில் ஒதுங்கிக் கொள்ளாமல் மற்றவர்களோடு சரி சமமாகப் பழகும் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்! அப்போதுதான் உன்னுடைய தாழ்வு மனப்பான்மையானது உன்னை விட்டு விலகும்" என்றனர்.

"இதோ பாருங்கள் நண்பர்களே! தண்ணீரில் பெரிய கண்டம் இருப்பதை நான் உறுதியாக நம்புகிறேன். எனவே உங்கள் மீது நான் எந்த அக்கறையும் காட்ட மாட்டேன். அதனால் தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள்! வீணாக என்னோடு பரீட்சை செய்து கொண்டிருக்காதீர்கள்!" என்று கூறினான் முத்து.

அவன் நண்பர்கள் எல்லோரும் இனிமேல் முத்துவிடம் பேசி எந்தப் பிரயோஜனமும் இல்லையென முடிவு செய்தனர். உடனே அவர்கள் எல்லாரும் அந்த இடத்தை விட்டு செல்லத் தொடங்கினார்கள்.

'நண்பர்கள் எல்லோரும் நம்மை விட்டுச் சென்று விட்டார்கள். இனிமேல் நமக்கு எந்தக் கவலையும் இல்லை. இனிமேல் நம்மை யாரும் தண்ணீரில் இறங்கும்படியாக வற்புறுத்தமாட்டார்கள்!' என்று முடிவு செய்தான் முத்து.

ஒருநாள் முத்து வெளியூருக்குச் சென்றான் அங்கு தன்னுடைய வேலைகளை எல்லாம் முடித்துக்கொண்டு கடற்கரைக்கு காற்று வாங்கச் சென்றான்.

கடற்கரையில் உலாவிய படி சென்று கொண்டிருந்த முத்து அங்கிருக்கும் ஜோதிடரை கண்டு திடுக்கிட்டான்.

ஜோதிடன் கடற்கரையில் மிட்டாய் வியாபாரம் செய்து கொண்டிருந்தான்.

முத்துவை கண்டதும் அவன் ஒளிந்து ஓட ஆரம்பித்தான். முத்துவோ அவரை விரட்டிச் சென்று பிடித்தான்.

"நீ அன்று எனக்கு ஜோதிடம் பார்த்தாய்! இன்று மிட்டாய் வியாபாரம் செய்து கொண்டிருக்கிறாய்? உண்மையைச் சொல். நீ உண்மையான ஜோதிடன்தானா? இல்லை ஜோதிடன் போன்று நடித்துக் கொண்டிருக்கிறாயோ?" என்று கேட்டான்.

அவனும் "தம்பி நான் ஜோதிடன் அல்ல! எந்த நேரத்தில் எந்த வேலை எனக்குப் பொருத்தமாக அமைகிறதோ அதனைச் செய்து கொண்டு காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறேன். உன்னிடம் சொன்னதெல்லாம் பொய்தான்!" என்றான்.

"என்னை ஏமாற்றிய உன்னை நான் சும்மாவிடப் போவதில்லை! இப்போது என்ன செய்கிறேன் பார்!" என்றபடி அவனைப் பலமாக தாக்கத் தொடங்கினான் முத்து.

"எனக்கு தண்ணீரிலா கண்டம் என்று கூறினாய்? இப்போது உனக்கு தரையில் கண்டம்" என்று கூறியபடி அவன் முகத்தில் ஓங்கி குத்துவிட்டான் முத்து.

"ஐயோ! என்னை அடிக்காதே! உன்னிடம் இருந்து வாங்கிய ஐம்பது ரூபாயைத் தந்துவிடுகிறேன் என்னை விட்டுவிடு" என்றான் அந்தப் போலி ஜோதிடன்.

பின்னர் முத்து அவனிடம் இருந்து ஐம்பது ரூபாயை வாங்கிக் கொள்ள, அவனோ ஓட்டமெடுத்தான்.

தன் ஊருக்குச் சென்று முத்து நண்பர்களைச் சந்தித்தான். "நண்பர்களே! நீங்கள் சொன்னது சரிதான்! நான் ஏமாற்றப்பட்டு விட்டேன். எனக்கு தண்ணீரில் கண்டம் இருக்கிறது என்று சொன்னது ஒரு போலி ஜோதிடன் தான். இனிமேல் எனது தாழ்வு மனப்பான்மையைக் கைவிட்டு விட்டு உங்களோடு வந்து குளத்திலும், ஆற்றிலும் குளிக்கிறேன். இனிமேல் நான் தண்ணீரில் இறங்கத் தயாராக இருக்கிறேன்." என்றான்.

அதனைக் கேட்டதும் அவன் நண்பர்கள் எல்லோரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

"முத்து நீ இப்போதுதான் தெளிவோடு இருக்கிறாய்! உன்னைப் பார்க்கின்ற வேளையில் எங்கள் எல்லோர்க்கும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. இனிமேல் நீ தண்ணீரில் இறங்குவாய் என்று நாங்கள் தாராளமாக நம்புகிறோம்" என்றனர்.

## அதிசய உலகம்

**இங்கிலாந்தில் உள்ள வொர்செஸ்டரில் 1881 மே மாதத்தில் 'நண்டு மழை' பெய்துள்ளது.**



## நீரும் நெருப்பும்

**தேரைகள் இமயமலைப் பகுதியில் சுமார் 8750 மீட்டர் உயரத்தில் கொடுமையான உறை பனியில் உயிர் வாழ்கின்றன. அதே சமயத்தில் மிகவும் வெப்பமான சுமார் 375 மீட்டர் ஆழமுள்ள நிலக்கரிச் சுரங்கத்தினுள்ளும் அமைதியாக தேரைகள் வாழ்க்கை நடத்துமாம்.**

## ஆத்திசூடி

### கூடிப் பிரியேல்

நீ நல்ல பண்புள்ளவர்களை அறிந்து தெரிந்து நட்பு கொள். பின் எக்காரணம் பற்றியும் அவர்களை விட்டுப் பிரியாதே.

-ஔவையார்

எஸ் நிரஞ்சலா, கண்டி.

## உங்கள் பொது அறிவு எப்படி?

### யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்கள்

| | |
|---|---|
| 1. கி.பி. 1282 - 1302 வரை | விக்கிரம சிங்கை ஆரியன். |
| 2. கி.பி. 1302 - 1325 வரை | வரோதய சிங்கை ஆரியன். |
| 3. கி.பி. 1325 - 1348 வரை | மார்த்தாண்ட சிங்கை ஆரியன். |
| 4. கி.பி. 1348 - 1371 வரை | குணபூசன சிங்கை ஆரியன். |
| 5. கி.பி. 1371 - 1380 வரை | விரோதய சிங்கை ஆரியன். |
| 6. கி.பி. 1381 - 1410 வரை | செயவீர சிங்கை ஆரியன். |
| 7. கி.பி. 1410 - 1440 வரை | குணவீரசிங்கை ஆரியன். |
| 8. கி.பி. 1440 - 1450 வரை | கனக சூரிய சிங்கை ஆரியன். |

9. கி.பி. 1450 இல் நான்காம் பராக்கிமபாகு மன்னன் சார்பாக செண்பகபெருமான் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி 1467 வரை 17 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்.

10. கி.பி. 1467இல் படைகளுடன் வந்த கனக சூரிய சிங்கை ஆரியன் யாழ்ப்பாணத்தை கைப்பற்றி 1478 வரை ஆட்சி புரிந்தான்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 29.06.2005

**வர்ணம் தீட்டும் போட்டி இல 601**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 599


**பரிசுக்குரியவர்:**
**தோ. வைஸ்ணவி, 'ஸ்ரீதேவி கோயில்', கொம்மாதுறை, செங்கலடி.**

**பாராட்டுக்குரியவர்கள் :**

| | |
|---|---|
| ஆர். திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. | கு. லக்ஷனா லோகேஸ்வரன், 1ஆம் ஒழுங்கை, குருமண் காடு, வவுனியா. |
| ர. நிரஞ்சனா, தரம் 10, மட்/செங்கலடி மத்திய கல்லூரி, செங்கலடி. | ஏ.ஜே. பாத்திமா பஸ்னா, 173/5B, கந்தவத்த, மல்வானை. |
| கா. அபிநயா, ப/தமிழ் மத்திய கல்லூரி, பண்டாரவளை. | ஏ.எம். பாத்திமா சினாதா, ஹாஜியார் வீதி, மருதமுனை -06. |
| ஏ. லியோசன், தரம் 02B, முகத்துவாரம், இந்துகல்லூரி, முகத்துவாரம். | ர. வினோ, தரம் 7, மட்/செங்கலடி மத்திய கல்லூரி, செங்கலடி. |
| இ. வினோதினி. 18, புகையிரதபாதை, குருமண்காடு, வவுனியா. | ஜெ. திவ்யா, புதிய தெரு உப்புக் குளம், மன்னார். |




# அடிக்க முடியாத இடம்



**கொ**ல்ப் வீரர் ஒருவரினால் ஓங்கி அடிக்கப்பட்ட பந்து வானில் பறந்து மீண்டும் பெற முடியாத இடமொன்றில் சிக்கிக்கொண்டது. ஆம் அமெரிக்காவின் ஃகலிபோர்னியா பிராந்திய கொல்ப் விளையாட்டரங்கின் எல்லையில் அமைந்திருந்த நீர் நிலையில் வசித்த முதலை ஒன்று ஒய்யார நடை பழக வெளியே வந்தபோது அதன் முதுகில் விழுந்த கொல்ப் பந்து கீழே விழுமா, விழாதா என்று ஏங்கிப் பார்த்துக்கொண்டிருந்தனராம் வீரர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ரைய்னோ மரதன்




**ல**ண்டன் மரதன் போட்டியில் பங்குபெறுபவர்கள் கலந்துகொள்வது போட்டியில் ஜெயிப்பதற்காகவே அல்ல. பங்களிப்பை ஒரு வெற்றியாகக் கருதியே. இது உலகளாவிய ரீதியில் உள்ள ரைய்னோஷிரஸ்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்ட ரைய்னோஷிரஸ் போன்று அலங்கரித்துக் கொண்டு மரதன் போட்டியில் கலந்துகொண்ட நபர் ஒருவரே இவர்.

## சுலபம்



**உ**யர்ந்த தூண்களில் தொங்குவது என்பது விளையாட்டான விடயமல்ல. ஆனால் இந்தியாவின் பெங்களூரில் நடைபெற்ற இராணுவ வீரர்களின் கண்காட்சி ஒன்றின் போது உயரமான தூண்களில் அனாயாசமாகத் தொங்கிய இராணுவ வீரர்கள் பூவைத் தொடுவது போல தீயைத் தொட்டும் விளையாட்டுக்காட்டினார்கள். இந்திய இராணுவத்தில் சேர்வது இலேசுபட்ட காரியமாகாது என்பது இதைப் பார்க்கும்போதே தெரிகிறது.

## பனிச்சிறை



**அ**ண்மைக் காலமாக தமது திருமணங்களைப் புதுமையான இடங்களில் நடத்தும் மோகம், ஜோடிகளிடையே நவீன ஃபஷனாகக் கருதப்படுகிறது. புதிதாக இந்நோயால் தாக்கப்பட்ட ஜோடியே இது. அதற்காக இவர்கள் தெரிவு செய்த இடம் திருமணத்தை நடத்துவதைவிட்டு நிற்கக்கூட முடியாத அளவு குளிர் பிரதேசமான அலஸ்கா பனிமலையொன்றை. பனி மலையென்றால் உருகிப் போகும். ஆனால், இவர்களின் மணவாழ்க்கை அப்படியாகக் கூடாது என்று கடவுளைப் பிரார்த்திப்போமாக.

## அச்சுப் பிழையோ



**பா**ர்த்த பார்வைக்கு ஏதாவது அச்சுப் பிழையோ என்று எண்ணத் தோன்றுகின்றதல்லவா? ஆனால், நியூயோர்க் 'கிறிஸ்டீஸ்'சில் தலையால் நின்று கொண்டிருக்கும் பாதுகாப்பு ஊழியர்களிருவரின் உருவச் சிலையே இது. கலைப் பொக்கிஷமாகக் கருதி இச்சிலைகளை அங்கு வைத்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

## விளையாட்டில் வேறுபாடில்லை



இரண்டு வீரர்கள் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருப்பது போல் தோன்றினாலும் உண்மையில் இது அரசியல் பின்பலம் கொண்ட நட்பாகும். பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் எல்லைப் பிரதேசத்தில் விரிசல் ஏற்பட்டிருந்தாலும், பாகிஸ்தான் வீரர் சயிட் அஃப்பிரிடிக்கும் இந்திய வீரர் ஹர்பஜன் சிங்கிற்கும் இவ் விரிசல் அவர்களது கிரிக்கெட் விளையாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்பது புலனாகிறது.



மாதவன் - பூஜா
தம்பி



சிம்பு - ரீமா சென்
வல்லவன்

# பொது வாழ்வில் நடிக்க மாட்டேன்

- விஜய்

“சினிமாவில் மட்டுமே நடிக்க வேண்டும். சினிமாவில் செய்வது போல வெளியேயும் செய்தால் அது நடிப்பாகி விடும்” என்று நடிகர் விஜய் கூறியுள்ளார்.

கோவையில் உள்ள ஈஷா யோக மையத்தின் சார்பில் நடந்த விளையாட்டுப் போட்டி மற்றும் கிராமிய திருவிழாவின் பரிசளிப்பு நிகழ்ச்சியில் நடிகர் விஜய் கலந்து கொண்டார்.

நிகழ்ச்சியில் அவர் பேசுகையில்-

எனது பெற்றோருக்கு யோகா மீது அதிக ஈடுபாடு உண்டு. எனக்கும் உண்டு. ஆனால் யோகா மீது கவனம் செலுத்த எனக்கு நேரம் கிடைப்பதில்லை.

யோகா செய்பவர்கள் படு சுறுசுறுப்பாக இருப்பதைப் பார்த்துள்ளேன். வாய்ப்பு கிடைத்தால் யோகாவின் சிறப்புகளை எனது படங்கள் மூலம் பரப்புவேன்.

இன்றைக்கு தமிழ் சினிமா மிக ஆரோக்கியமாக உள்ளது. 2 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த பல பிரச்சினைகள், திருட்டு விசிடி பிரச்சினை இப்போது இல்லை. எல்லாப் படங்களும் நன்றாக ஓடுகின்றன.

எனக்கு அமைதியாக இருக்கத்தான் ரொம்பப் பிடிக்கும். சினிமாவில் மட்டும்தான் நான் நடிப்பேன். அதையே வெளியிலும் செய்தால் அது நகைப்புக்குரிய நடிப்பாகி விடும். அது எனக்குப் பிடிக்காது. (யாரையோ வாருகிறாரே!)

நிறையப் புதுமுகங்கள் வருகிறார்கள். அனைவரையும் நான் சாதாரணமாக நினைப்பதில்லை. அவர்களுடன் போட்டி போடவே விரும்புகிறேன். கானா பாட்டுக்களுக்கு நான் அதிக முக்கியத்துவம் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் மக்களுக்கு கானா பாட்டுக்கள் பிடித்துள்ளன. அதை நிறைய இரசிக்கிறார்கள்.

விஜயகாந்த் படத்தில் ஆரம்பத்தில் நடித்துத்தான் இந்த நிலைக்கு நான் வந்துள்ளேன். விஜயகாந்த், ரஜினிகாந்த் பாதிப்பு இல்லாமல் ஆக்ஷன் படங்களில் நடிக்க முடியாது. விஜயகாந்த் கட்சி ஆரம்பிக்கப்போகிறார். அவருக்கு எனது வாழ்த்துக்கள் - என்றார் விஜய்.

முன்னதாக விஜய்யைப் பார்க்க ஏராளமானோர் நிகழ்ச்சி நடந்த வ.உ.சி. மைதானத்தில் கூடியிருந்ததால் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. பலர் விஜய்யைப் பார்க்க முண்டியடித்ததால் பொலிஸார் இலேசான தடியடி நடத்தி அவர்களைக் கலைத்தனர். விஜய் இரசிகர்களின் செயல்களால் நிகழ்ச்சிக்கு வந்திருந்த பெண்களும், குழந்தைகளும் படாத பாடுபட்டனர்.

# சிம்ரனுக்கு ஆண் குழந்தை

நடிகை சிம்ரனுக்கு டெல்லி மருத்துவமனையில் ஆண் குழந்தை பிறந்தது. தாயும் சேயும் நலமாக இருப்பதாக சிம்ரனின் கணவர் தீபக் தெரிவித்துள்ளார்.

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக இருந்த போதே நடிகை சிம்ரன், கடந்த ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இவரது கணவர் தீபக், டெல்லியை சேர்ந்தவர்.

திருமணத்துக்குப் பிறகு 'கிச்சா வயசு 16' படத்தில் மட்டும் நடித்தார். 'சந்திரமுகி' படத்தில் ரஜினியுடன் ஜோடியாக நடிக்க வாய்ப்புக் கிடைத்தும் அப்போது அவர் கர்ப்பமாக இருந்ததால் அந்த வாய்ப்பை மறுத்தார்.

கணவருடன் டெல்லியில் வசித்து வந்த சிம்ரன், குழந்தை பிறந்த பிறகு தமிழ்ப் படங்களில் நடிப்பது குறித்து தீர்மானிப்பேன் என்று கூறியிருந்தார்.

இந் நிலையில் நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த சிம்ரனுக்கு கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை பிரசவ வலி ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அவர் அங்குள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு சுகப் பிரசவத்தில் ஆண் குழந்தை பிறந்தது.

தாயும், சேயும் நலமாக இருப்பதாகவும், ஆண் குழந்தை பிறந்தது தனக்கு மிகவும் மகிழ்ச்சியளிப்பதாகவும் சிம்ரனின் கணவர் தீபக் கூறினார்.

சிம்ரனுக்கு ஆண் குழந்தை பிறந்த செய்தி அறிந்ததும் தமிழ் திரையுலகைச் சேர்ந்த நடிகர், நடிகைகள் அவருக்கு போனில் வாழ்த்து தெரிவித்தனர்.



ஸ்ரீகாந்த் - அபிராமி
பம்பரக்கண்ணாலே

# 'ஜோ' வுக்கு வலை வீசும் தெலுங்கு, கன்னடம்

'சந்திரமுகி' வெற்றி சூப்பர் ஸ்டார் உட்பட பலருக்கு மறுவாழ்வை அளித்துள்ளது. 'லகலக' ஜோதிகாவுக்கு தமிழ் தவிர தெலுங்கு, கன்னடத்திலும் நடிக்க அழைப்புகள் வந்துள்ளன.

சந்திரமுகி பல தமிழ்ப் படங்களின் சாதனைகளை முறியடித்து வருகிறது. படம் வெளியாகி 55 நாட்களிலேயே வசூல் ரூ.50 கோடியை தாண்டிவிட்டது. தமிழ்த் திரை வரலாற்றில் 50 நாட்களிலேயே 50 கோடி வசூலை இதுவரை எந்தப் படமும் வாரிக் குவித்ததில்லை.

8ஆவது வாரத்திலும் 80 சதவீதம் வரை இப்படத்தின் கலெக்ஷன் உள்ளது. சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் தியேட்டர்கள் நிரம்பி விடுகின்றன. இதனால் நீண்ட காலத்திற்குப் பிறகு விநியோகஸ்தர்களை புன்னகையுடன் பார்க்க முடிகிறது. படத்தை தயாரித்த சிவாஜி குடும்பத்தாரும் பெரும் மகிழ்ச்சியில் உள்ளனர்.

சந்திரமுகியின் வெற்றி இப்படத்தில் நடித்த நடிகர், நடிகைகளுக்கு மட்டுமல்லாமல் பலருக்கு மறுவாழ்வை அளித்துள்ளது. டைரக்டர் பி.வாசுவின் வீட்டை நோக்கி படையெடுக்கும் தயாரிப்பாளர்களின் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

சந்திரமுகியின் வெற்றி பிளஸ் அதில் 'லகலக' நடிப்பு ஆகியவை தான் ஜோதிகாவுக்கு கன்னட வாய்ப்புகள் வரக் காரணம். அதேபோல தெலுங்கிலும் ஜோதிகாவுக்கு மீண்டும் அழைப்புகள் வர ஆரம்பித்துவிட்டன.



எஸ்.ஜே. சூர்யா - நயன்தாரா
கள்ளவனின் காதலி

# சங்கரின் சமுதாயக் கோபம் : அந்நியன்

இயக்குநர் சங்கர் என்னதான் 'கட்டிக் காத்தாலும்' அந்நியன் கதை கொஞ்சம் கொஞ்சமாக வெளியில் கசியத் தொடங்கியுள்ளது. படத்தில் பெரிய அளவில் மேட்டர் ஏதும் இல்லை என்றும் பேச்சும் எழுந்துள்ளது.

வழக்கமான சங்கரின் சமூக கோபம்தான் இதிலும் படமாக்கப்பட்டுள்ளதாம். நடித்த நடிகர்களும், கதைக் களமும் புதிதே தவிர, இதே பாணியில் முன்பே பல படங்கள் வந்து ஹிட்டும் ஆகியுள்ளன.

இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகரனின் சிஷ்யரான சங்கர், தனது குருவின் முந்தைய படமான 'நான் சிகப்பு மனிதன்' மற்றும் தனது முந்தைய படமான 'இந்தியன்' ஆகிய இரு படங்களையும் போட்டுக் குலுக்கி அதிலிருந்து கிடைத்த சாரத்தை வைத்துத்தான் அந்நியனை உருவாக்கியுள்ளார் என்கிறார்கள்.

இந்த இரு படங்களுமே கிட்டத்தட்ட ஒரே கதையம்சம் கொண்டவைதான். 'நான் சிகப்பு மனிதன்' படத்தில் ரஜினி கௌரவமான பேராசிரியர். சமூக விரோதிகளால் தனது குடும்பம் பலியானதால் ஆவேசமடைந்து, அதேபோன்ற சமூக விரோதிகளை பழிவாங்குகிறார்.

பகலில் பேராசிரியர். இரவில் சமூக விரோதிகளை வேட்டையாடும் ராபின்ஹூட். இதே போலத்தான் இந்தியனும். பாடுபட்டு வாங்கிக் கொடுத்த சுதந்திரம் பரிதாப நிலையில் இருப்பதைப் பார்க்கும் இந்தியன் தாத்தா, சமூகத்தை சீரழிக்கும் சிலரால் தனது குடும்பம் சிதிலமடைவதைப் பார்த்து ஆவேசம் கொள்கிறார்.

இதுபோன்ற துரோகிகளை விட்டு வைப்பது சமூகத்திற்கு ஆபத்து என்று முடிவு செய்து பழி வாங்கப் புறப்படுகிறார்.

இந்த இரு கதைகளையும் கலந்துதான் அந்நியனை உருவாக்கியுள்ளாராம் சங்கர். இருப்பினும் கிட்டத்தட்ட நான் சிகப்பு மனிதன் கதையின் மறு தழுவலாகவே அந்நியன் கதையும் அமைந்துள்ளதாம்.


அமைதியான, ஆச்சாரமான பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர் விக்ரம். சமூகத்தின் சில கோளாறுகள் இவருக்குள் பூகம்பத்தை ஏற்படுத்துகின்றன. நேரடியாக அவற்றால் பாதிக்கப்படும் அவர், பழி வாங்கப் புறப்படுகிறார்.

சும்மா எப்போதும் முறைத்துக் கொண்டே உவ்வா, உவ்வா என ஆக்ஷன் காட்டும், நடிப்பே வராத அர்ஜுனையே முதல்வன் படத்தில் நன்றாக நடிக்க வைத்திருந்தார் சங்கர். இதனால் இதில் விக்ரமை அவர் நிச்சயம் முடிந்த அளவுக்கு நன்றாகவே பயன்படுத்தியிருப்பார்.


ஸ்டில்களிலும், டிரைலரிலும் இருக்கும் 'மிரட்டல்' உண்மையிலேயே படத்திலும் இருந்தால் இது நிச்சயம் பெரிய ஹிட்டாகும் என்கிறது கோடம்பாக்கம்.

புலி வருகிறது கதையாக இதோ, அதோ என்று இந்தப் படத்தின் ரிலீஸ் தேதி தள்ளிப் போடப்பட்டு வந்த நிலையில் ஒரு வழியாக வருகிற 17ஆம் திகதி நாள் பார்த்தாகிவிட்டது. உலகம் முழுவதும் அன்றைய தினம் 'அந்நியன்' ஒரு வழியாக ரிலீஸ் ஆகிறான்.

இந்தப் படம் ரூ.35 கோடிக்கு விற்பனையாகி இருக்கிறதாம். போட்ட காசை விட ரூ.10 கோடியை எடுத்துவிட்டார் தயாரிப்பாளர் ஆஸ்கார் பிலிம்ஸ் ரவிச்சந்திரன்.



கமல்
வேட்டையாடு விளையாடு



தமிழில் மார்க்கெட்டை தக்க வைத்துக்கொள்ள தெலுங்கில் நடித்துக்கொண்டே இங்குள்ள முன்னணி ஹீரோக்களுக்கும் தூண்டில் போட்டு வைத்திருக்கிறார் த்ரிஷா. என்றாலும் அவர் குறிவைத்துக் கொண்டிருந்த சிம்பு, ஜெயம் ரவியின் படங்கள் த்ரிஷாவுக்குக் கிடைக்காமல் இருந்து வந்தது. இந்நிலையில் பிரபுதேவா தெலுங்கில் இயக்கிய படமொன்று தமிழுக்கு ரீமேக்காக...அந்தப் படத்தில் ஜெயம் ரவி நடிக்க, நாயகி த்ரிஷாதானாம். இரட்டிப்பு மகிழ்ச்சி த்ரிஷாவுக்கு.



ஜெய் ஆகாஷ் - பிரணதி
காற்றுள்ள வரை



மல்லிகா ஷெராவத்

## ரஜினியின் தெரிவுக்காக போட்டிபோடும் தயாரிப்பாளர்கள்

புதிய படம் குறித்து ஆலோசிப்பதற்காக நடிகர் ரஜினிகாந்த் பெங்களூர் சென்றுள்ளார்.

கன்னடத்தில் வெளியான பி.வாசுவின் 'ஆப்தமித்ராவை' பெங்களூரில் பிரண்ட்ஸோடு சென்று தியேட்டரில் பார்த்துவிட்டுத்தான் 'சந்திரமுகி'யை உருவாக்க முடிவு செய்தார் ரஜினி.

'சந்திரமுகி' கன்னாபின்னாவென வெற்றியடைந்துவிட்ட நிலையில், அப்படியே தனது பேவரிட்டான இமயமலை பக்கமாக மலையேறினார். சில வாரங்களுக்கு முன் திரும்பி வந்தவர், அடுத்த படத்துக்கான ஏற்பாடுகளில் விறுவிறுவென இறங்கிவிட்டார்.

கதை ரெடியானால் வாசுவைக் கூப்பிட்டே படத்தை இயக்கச் சொல்வாராம்.

அதே நேரத்தில் 'ஜக்குபாயை' பாதியில் விட்டதால் தன் மீது கடுப்பில் இருக்கும் தனது நண்பரான கே.எஸ்.ரவிக்குமாருக்கும் ஒரு படம் பண்ணும் மூடில் ரஜினி இருக்கிறாராம்.

படத்தை இயக்குவது யார் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அதைத் தயாரிப்பது யார் என்பதில் கடும் போட்டா போட்டி நிலவுகிறது. இப்போதைக்கு சொந்த பேனரில் படம் எடுப்பதில்லை என்ற முடிவில் இருக்கும் ரஜினியை, தங்களது பேனரில் நடிக்க வைக்க ஜெயம் ரவியின் அப்பா எடிட்டர் மோகன், பஞ்சு அருணாச்சலம், ஆர்.எம்.வீரப்பன், ஏ.வி.எம். நிறுவனம் ஆகியோர் தீவிரமாக முயன்று வருகின்றனர்.

இதில் ரஜினிக்கு மாபெரும் வெற்றியைத் தந்த 'பாட்சா'வை தயாரித்தது வீரப்பன் என்பது குறிப்பிடத்தக்கது. அதே போல ரஜினியின் ஆரம்ப காலத்தில் கை கொடுத்த நிறுவனங்களில் ஒன்று ஏ.வி.எம். இப்போது இந்த நிறுவனம் சகோதரர்களுக்குள் பாகப்பிரிவினையாகி கொஞ்சம் பணத் தட்டுப்பாட்டில்தான் உள்ளது.

இதனால் சிவாஜி குடும்பத்துக்கு ஒரு 'சந்திரமுகி' மூலம் ரூ.25 கோடிகளை ஈட்டித் தந்த ரஜினி, தங்களையும் கவனிப்பார் என்று நினைக்கிறது அந்த நிறுவனம்.

அதே போல பஞ்சு அருணாச்சலமும் ரஜினியின் உதவியை எதிர்பார்த்திருக்கிறார்.

நல்ல கதையோடு போனால் ரஜினியை வளைத்துவிடலாம் என்ற நம்பிக்கையில் நல்ல கதையைத் தேடும் வேலையில் பஞ்சு, ஏ.வி.எம்., ஆர்.எம்.வீ. ஆகியோர் தீவிரமாகக் களமிறங்கியுள்ளனர்.

ஆனால், ரஜினி தரப்பில் இருந்து தங்களுக்கு ஏற்கனவே படம் தயாரிக்கத் தயாராக இருக்குமாறு தகவல் வந்துவிட்டதாக எடிட்டர் மோகன் தரப்பு கூறுகிறது. இதனால், ரஜினிக்குரிய கதையைத் தயார் செய்யும் வேலையில் அவரது படத் தயாரிப்பு நிறுவனம் பரபரப்பாக உள்ளது.

ரஜினி மட்டும் ஓ.கே. சொல்லிவிட்டால் படத்தை விடுவிடுவென முடித்து தீபாவளிக்கே ரிலீஸ் செய்யத் தயாராக உள்ளாராம் எடிட்டர் மோகன்.


28ஆம் திகதி மீண்டும் சென்னைக்கு வரும் ரஜினிகாந்த், தனது புதிய படம் குறித்து அறிவிப்பார் என்று தெரிகிறது.

இதற்கிடையே ரஜினியின் இளைய மகளான செளந்தர்யாவை ஹீரோயினாக்க கோலிவுட்டில் பெரும் முயற்சி நடக்கிறது. தனுஷைக் கைப்பிடித்த ஐஸ்வர்யாவுக்கு இளையவரான செளந்தர்யாவை ஹீரோயினாக நடிக்க வைக்க லட்சுமி புரொடக்ஷன்ஸ் நிறுவனம் முயற்சி செய்து வருகிறது.

'தில்' உள்ளிட்ட பல வெற்றிப் படங்களை தயாரித்த நிறுவனம் இது. 'காக்க காக்க' படத்தை இயக்கிய கௌதம் மேனன் இப்போது கமலை வைத்து 'வேட்டையாடு விளையாடு' படத்தை இயக்கி வருகிறார். அதை முடித்துவிட்டு லட்சுமி புரொடக்ஷன்சுக்கு ஒரு படத்தை டைரக்ட் செய்யவுள்ளார்.

அதில்தான் செளந்தர்யாவை நடிக்க வைக்க லதா ரஜினி மூலம் பேசப்பட்டதாம். ஆனால், ரஜினிக்கு அதில் சுத்தமாக விருப்பமில்லை என்கிறார்கள்.

## சினிசிட்



அவ்வப்போது ஏதோ ஆசை ஏற்பட்டு ஹீரோ என்கிற முட்புதரில் விழுந்துவிடும் விவேக். யாராவது உங்களுக்கு இருக்கிற அழகுக்கு ஹீரோவா நடிச்சா பெரிய ரவுண்டு வரலாம் என்று ஆசை வார்த்தை காட்டினால், "ஏண்டா நான் மத்தவங்கள மிமிக்ரி செய்து நாலு காசு சம்பாதிக்கிறது உனக்குப் பிடிக்கலையா? ஏற்கெனவே மார்க்கெட்டுல ஏகப்பட்ட போட்டி. புதுசுபுதுசா காமெடியனுங்க வந்துக்கிட்டே இருக்கானுங்க. இந்த நேரத்துல போய் ஹீரோ வேட்டையில இறங்கினேன்னு வை....இருக்கிற காமெடி வாய்ப்பையும் இழந்து ஜீரோவாக வேண்டியதுதான். அதனால வேற ஏதாசசும் நல்ல யோசனை இருந்தா சொல்லு. இல்லை...நடையைக் கட்டு" என்று ஆசை காட்டுபவர்களை துரத்தியடிக்கிறார் விவேக்.



த்ரிஷா




## தூரத்து நிலவு

வெந்த புண்ணில்
வேலைப் பாய்ச்சிய
அவள்
வார்த்தைகள்....

சுட்டெரிக்கும்
சூரியன் கூட
பரவாயில்லை
அமுதைப் பொழியும்
நிலவு மட்டும் - இன்று
அமிலத்தை
பொழிந்து கொண்டிருந்தது.

நாட்குறிப்பேட்டின்
நாயகியே
ஓடி, ஒழிந்து
கொள்வதில்
என்னடி
லாபமுனக்கு!

இருள்படிந்த
கூந்தலில்
விடியல் தேடி
வீரம் தொலைந்ததுதான்
மிச்சம்.

காதல் உணவை
விழுங்கிவிட்டேன்
சமிபாடடைவதற்குப் பதில்
சாவை அடைந்து
கொண்டிருக்கிறேன்!



அவள்
ஏணி வைத்தும்
எட்டமுடியாத நிலவு
நம் வீதிகள்
சேரலாம் - நம்
ஜாதிகள் சேராது!

அவதிப்பட்ட
இரவுகளுக்குத் தெரியும்
என்
அந்தரங்கமெல்லாம்!

*- புத்தளம் நஸீம்ரூமி.*

## வற்றாத ஊற்று

சிந்தித்தேன்.......
சிக்கியது உன் நினைவு
சிதறிப் போன
வாழ்வின் துண்டுகளை
சேர்க்க வந்துதித்தேன்
என்னையல்ல...
உன் பழைய நினைவுகளை
சோகமில்லை யோசிக்கிறேன்.
துவண்டு போன வாழ்வை
நிமிர்த்த - பாவமில்லை
பழகினேன் - பழைய
பாதையை மறக்க
வலி ஒன்றும் தெரியவில்லை
வாள் போன்ற விழியாலே
நெஞ்சை அறுத்துவிட்டாய்
ஈரம் கசியவும் என் இதயத்தில்
வற்றாத ஊற்றாய்
மீண்டும் உன் நினைவே
தேங்கிக் கிடக்கின்றது.



*கலைத்தோழன் கிருஷ்ணா,*
*வினாயகபுரம்.*

## அன்னை மடியில் மீண்டும்

என்னிதயப் பக்கங்களை
திறந்து எழுதுகிறேன்
எத்தனை தடவைகள்
அழுதிருப்பேன்
அம்மா அம்மாவென்று...
அழுத கண்ணீரிலும் ஆயிரம்
வலி
என்ன செய்யலாம் - இந்த
இற்றுப்போன
வாழ்க்கையை....!

பத்து திங்களது படாத
பாடுபட்டு
இந்தப் பாரிற்கெம்மை
அழைத்து வந்தவளும் -
அம்மா
தன் இரத்தத்தை பாலாக்கி
கொடுத்தவளும் - அம்மா

எத்தகைய விலையுயர்ந்த -
பஞ்சு
மெத்தையில் படுத்தாலும்
தூக்கமது
தூரத்தில்தானுள்ளது
அன்னையவள் மடியதை
தலையணையாக்கி
பாசத்தோடு
தலையதைக் கோதிவிட்டால்
அரைநிமிடமது போதுமே.....

பாசமான அன்னையது மடி
மீண்டும் வேண்டுமெனக்கு....!

*ஆரையம்பதி கிஷ்ஜனா*
*நந்தகுமார், லண்டன்.*



## பசியின் நடைகள்

விரக்தி பூத்த கண்கள்
பசியைக் கண்டு
ருசியைத் தணிக்க
மறைந்த பசிகள்
மடிந்த நிலைகள்
மறைந்த அந்தஸ்துகள்
மரத்துப் போன
விரக்திகள்
பழகிவிட்ட
பசியின்
பார்வைகள்
பட்டும் படாட்டும்
துறந்த
தோற்றங்கள்
கசங்கிய
உடைகள்
உயரப்
பறக்க
முடியாத
துயரங்கள்
உணர்ச்சியற்ற
முகங்கள்
உணவென்ற
ஒன்றின்
உணர்வை
உட்கொள்ளும்
உணர்வை
தெரிவிக்கும்
களையிழந்த
முக மினுக்கங்கள்
நீண்ட
நாட்களுக்குள்
புதைந்து
விட்ட
உணர்ச்சியற்று
காய்ந்து
விட்ட
முகங்கள்
வரட்டுப்
பாறைகள்
கையயிழந்த
கோலங்கள்
கைப்பிடித்
தீனுக்குச்
சாகும்
அவலங்கள்.

*—விஜய் கெல்சன்கிர்ஹன்,*
*வெஸ்ட் ஜெர்மனி.*

## இது காதல் இல்லை

சூரியனின்
பார்வை
பூமியை
முழுவதுமாய்
நனைத்திட
மிச்சமாய்
இருந்த
கொஞ்ச
இருட்டும்
தலை
துவட்டிக்
கொள்ள
மரத்தின்
நிழல்
தலையில்
பாய்
விரிந்தது!

என்
நரம்புகளையும்
சதைகளையும்
சிரமப்படாமல்
அதிரவைத்து
என்
இதயத்துக்குள்
ஒரு மலராய்
விழுந்து
ஆனால்...
தீயைப் போல்
வடுவுண்டாக்கி
என்னை
அகலப்படுத்திய
அனுபவம்
அது!

மழையாய்
வந்து
பனித்துளியாய்
கரைந்து
போன
ஒரு கனவும்
வெளிச்சமாய்
வந்து
நிழலாய்
மறைந்து
போன
ஒரு
நினைவும்
அது!

தற்கொலை
மார்க்கத்தில்
இல்லை
என்பதால்
உயிரையும்
உடலையும்
பத்திரப்படுத்தி
வைத்திருக்கும்
அந்தச்
சம்பவம்
என்னை
சிதைத்ததா
செதுக்கியதா?
நிச்சயமாக
அது காதல்
இல்லை

கர்ப்பத்திலே
இறந்துபோன
அந்தக்
குழந்தைக்கு
இன்னும் நான்
பெயர்
வைக்கவில்லை!

*-றிப்காஸ் றிஸ்மி,*
*பொத்துவில் - 03.*

## நேற்றைய காதல்....

சின்னப் பிள்ளையாய்
சின்னக் கதை படிக்கும்
காலம் அது.

விடிந்த பகல்
மறைவதற்குள்
கண்ணசைவுகள் தந்த
செய்திகளை விடிய முன்
தேடும் என் இதயம்
அது காதல் காலம்.

உனக்குத் தெரியுமா
அழகு பார்க்க எண்ணி -
என்னை
அசிங்கப்படுத்தினாய்.
விளையாட்டாகக் கழிந்தது
பொன்னான காலம்.

சேற்றில் புதைகின்ற போது
நீர் ஊற்றினாய்
காரணம் கேட்ட போது
நீச்சலடிக்கத்தான் என்றாய்
பகிடியானதுதான் அந்தக்
காலம்.

நெஞ்சில் வலி கேட்டு
மருந்தாகுவாய்.
கனவுகளில் முத்தத்தால்
களைத்துப்போன
கதை சொல்லுவேன்
வெட்கப்படுவாய்
அவஸ்தையானது தான் சில
காலம்.

கோயில் மணலில்
உட்கார்ந்து
உனக்குப் பிடித்ததைச்
சொல்வாய்
சிலதிற்கு கோபப்பட்டு
ஏன் பிடிக்கும் என்பேன்.
சந்தேகங்களால் காதல்
சண்டையானது பல காலம்.

பிரிவு நீண்ட போது
அழுது கொண்டே போன்
கதைப்பாய்
ஆறுதல் சொல்லி வீடு
வரும் முன்பே
கண்களில் கலங்கும்
கண்ணீர்
சோகமானதுதான் ஒரு காலம்

நடப்பதற்கு துணை கேட்டால்
பறப்பதற்கு வருகிறேன்
என்பாய்.
உன் துணிவு கண்டு
மகிழ்ந்து நான் ஓடுவதற்கு
வழி சொன்ன போது
தமிழச்சியாக
தலைகுனிந்தாய்
பண்பாடானது பல காலம்

விட்டுக்கொடுப்புக்களை
பழகிக் கொண்ட நாம்
காதலில்
நம்பிக்கையிழந்து
வாழ்ந்தோம்
நினைவிருக்கிறதா...
ஏக்கத்துடன் ஏமாந்து
போனது காதல் காலங்கள்

*ஏ. லக்ஸ்மன்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

*"கவிதையின் பிறப்பு பற்றி ஞானி அவர்கள் கூறுவது: "மனிதனுக்குத்தான் தன்னுணர்வு உண்டு. விலங்குகள், பறவைகளுக்கு உணர்வுண்டு; ஆனால் தன்னுணர்வு இல்லை. தன்னுணர்வோடு கூடிய மனிதனின் உயிரியக்கம் எத்தனையோ வழித்தடங்களைக் கண்டறிகிறது. வரலாறு, மொழி, கட்டிடங்கள், கலைகள், நாகரிகம், நாடு, கருவிகள், கால உணர்வு என்று எத்தனையோ வழித்தடங்களோடு மனிதனின் உயிரியக்கம் தொடர்ந்து தீவிரமாகச் செயல்படுகிறது.*

*உயிரியக்கம் என்பது முரண்பாடுகளோடும், மோதல்களோடும்தான் செயல்படுகிறது. தன்னைச் சூழ இருக்கும் உலகை அதன் பல்வேறு கூறுகளில் தன்வசப்படுத்திக் கொள்கிற மனிதனின் உயிர்ச்சக்தி இத்தகையது. வரலாறு மற்றும் நாகரிகம் என்பது இவனது மாபெரும் படைப்பு. பிரபஞ்ச அளவில் இவன் விரிவடைய விரும்புகிறான். இயற்கையின் நுட்பமான ஆற்றல்களைத் தொடர்ந்து கண்டறிந்து தனக்கு வசப்படுத்திக் கொள்கிறான். மனிதனுக்குள் செயல்படும் இந்த உயிர்ச்சக்தி அல்லது உயிரியக்கம் என்பதற்கு இன்னொரு பெயர்தான் கவித்துவம். இதைப் படைப்பியக்கம் என்றும் படைப்புத் திறன் என்றும் சொல்வது பொருந்தும். கவிதை என்பது இந்த மூல ஊற்றின் ஒரு வெளிப்பாடு."*


*மரபாக இருந்துவரும் காதலின் அவஸ்தையை, உணர்வுகளின் முக்குளிப்பை நவீன கவிதையின் சாத்தியங்களூடாக வெளிப்படுத்தும் யூமா வாசுகியின் இரண்டு கவிதைகள்.*



இன்றைக்கும் கடைசி ரயில் பிடித்து
அகாலத்தில் அறையடைந்திருக்கிறேன்.
அறைக்குள் அடி வைத்ததுமே
தெரிந்துவிட்டது.
சந்தேகமில்லாமல் உறுதிப்படுத்தியது
விளக்கு வெளிச்சம்.
சிறு மாற்றமுமில்லை -
எப்படி விட்டுச் சென்றேனோ அப்படியே
சற்றும் பிசகாமல் இருந்தன எல்லாம்.
தரைத் தூசுப் படலத்தில் தடம்
பதிக்காமல்
நீ நுழைந்து சென்றிருக்கிறாய்.
உன் கூந்தலிலிருந்து உதிர்ந்த பூக்கள்
இல்லை
உன் மணம் இல்லை - உடனே படும்படி
உன் கடிதமெதுவும் காணவில்லை
ஆயினும்
உன் வருகையை நான் உணர்கிறேன்.
எனக்கான செய்தியை அனைத்து
உடுப்புகளின் பைகளிலும் தேடுகிறேன்.
அயர்ச்சியினூடாக உன் வேடிக்கையை
ரசித்து
புத்தகங்களுக்குள்ளும் பெட்டியிலும்
துழாவுகிறேன்
தலையணை உறைக்குள், பாயின்
அடியில்,
போர்வை மடிப்பில். ஏமாற்றம்.
குப்பைக் கூடையைக் கொட்டிக்
கவிழ்த்து
கசங்கிக் கிடந்த தாள்களைப்
பிரிக்கிறேன்
ஒரு எழுத்தும் உன்னுடையதாயில்லை -
ரகசிய
பென்சில் கிறுக்கல்கள் ஏதுமற்றிருக்கிறது
புதிதாய் வெள்ளையடிக்கப்பட்ட சுவர்.
உன் விளையாட்டை விளங்கிக்கொள்ள
வேண்டி
பல தடவைகள் சோதித்தாகி விட்டது
சொற்ப பொருட்களையும்.
புதிர் அவிழ்க்கும் பிரயத்தனம்
சோர்ந்தது பயனற்று.
கடைசியாக கண்ணாடியின் பின்புறம்
பார்த்து
விளக்கணைத்துச் சாய்கிறேன்
ஒருக்கால் நீ வந்திருக்கவில்லையோ?
பிரமைதானோ?
இந்த அறையின் இருட்டு நிசப்தம்
இன்றவள் வந்தாள் என்றொலிக்கிறதே
நீ வந்திருந்தால் வழக்கம் போல
அறை கொஞ்சம் ஒழுங்குபட்டிருக்கும்.
புரளும்போது கைபட்டுத் தண்ணீர் சாடி
விழுகிறது,
பாயில் பரவுகிறது நீரின் குளிர்மை.
காலையில் நான் புறப்படுகையில்
காலியாகத்தானிருந்தது சாடி.
நனைகிறேன்.

பெரிதினும் பெரிதான சோதி
பெண்கள் விடுதியில் தஞ்சம் - தன்
அவதார மகிமையுணராது
பேருந்து நெரிசலில் அடைந்து வரும்.
ஒலி உபதேச நூலின் பக்கங்களை
நடையில் பறக்கவிடும் கொலுசுகள்.
கேசச் சுருள் பிரிந்து
நுதலில் நளினமாட நுழைகையில்
பேராலயமாய்ப் பெயரெடுக்க
பக்தி பக்குவம் போதாதோ என
ஏ.ஸி.முனகலாய் அழும் அலுவலகம்.
எல்லையற்ற ஏக தத்துவம் -
கம்ப்யூட்டருக்கும், கதவுகளுக்கும்
வருந்திக் காத்திருந்த எனக்கும்
சமமாய்ப் பகிரும் கனிந்த பார்வை.
வேத கோஷப் பறவைகள்
அதைச் சுற்றி வருகின்றன - தானொரு
விக்ரகம் என்பது விளங்காமலே
விளையாட்டாய்ப் பேசிப் போகும்
சிரஞ்சீவிக் கீர்த்தனை சிறிதே உணவுகொள்ள
கீர்த்தி வட்டம் தெளியும்
கேண்டீனுக்கு உள்ளும் புறமும்.
படைப்பும் நிலையும் செயலும்
மல்லிப் பூக்களாய் ஆரோகணித்த
என் சஞ்சாரதேசம் -
அறிவின் உட்கிடையடுக்குகள் அனைத்தும்
முயன்று
குறிப்பாலுங் கொள்ள முடியாது களைத்த
நுண்மா நுண்மையின் திருமேனி,
நிற்கும் போதும் அமரும் போதும் அதன்
பின்னணியாய் அமைந்து அருகதை பெற
பொருட்கள் தவிக்கின்றன.
கொன்ற கலியுடலே வளைகளாலான கரம்
அடக்கமாய்
காகிதத்தில் ஏதோ எழுதுகிறது
தாளில் பிரதிபலித்த தியானப் பெருமை
பார்த்திருந்த என்னையும்
பிரசித்தனாக்கியது.
இவ்வுலகில் - இப்பிறப்பில் - இப்போதே
நிகழும் அதிசயத்தின் அருகிலிருக்க
அனுமதி பெற்றேன்.
எனக்கு மட்டும் புரிந்தது அதன் பரிபாஷை.


## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : வசந்தகுமார்.
வயது : 28
முகவரி : 186 A, Mitcham Road, Tooting, London, SW17 9NJ, U.K.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர் : வ. தவராஜன்.
வயது : 21
முகவரி : 4, வீரபடி வீதி, வினாயகபுரம், திருக்கோவில்.
பொழுதுபோக்கு : வானொலி, கேட்டல், பத்திரிகை வாசித்தல்.



பெயர் : ஏ.டபிள்யூ. றிபாய்.
வயது : 19
முகவரி : கச்சக்கொடித்தீவு, கிண்ணியா - 05.
பொழுதுபோக்கு : பத்திரிகை, ரி.வி.



பெயர் : ஆர். பிரபாகர்.
வயது : 18
முகவரி : 3ஆம் மாடி, 138 செட்டியார் தெரு, கொழும்பு 11.
பொழுதுபோக்கு : வழமையானவை.

# குளிர்ச்சி தரும் மங்குஸ்தான்

**கோ**டை வெயிலின் கொடுமையில் மனித இனம் இளைப்பாற இறைவன் பல விதமான பழ வகைகளைக் கோடையிலே தந்துள்ளான். மா, பலா, உள்ளிட்டவற்றுடன் கோடையில் குளுமை தரும் மங்குஸ்தான் பழங்களின் வரத்தும் இந்த கோடையில் தான் அதிகரிக்கும். குற்றாலம் மலைச்சாரலில் விளையும் இந்த மங்குஸ்தான் பழம் பார்ப்பதற்குப் பனை நொங்கு போல் தோற்றத்தில் உள்ளது. இதன் வெளிப்புறத் தோலை நீக்கினால் உள்ளே பருத்தியைப் போன்று வெண்மையான ஆரஞ்சு சுளைகள் உள்ளது.

குளிர்ச்சியைத் தந்து உடல் சூட்டைத் தணிக்கிறது. பெண்களுக்கு ஏற்படும். வெள்ளைபடுதல், மாதவிடாய் அதிகம் போவதைக் கட்டுப்படுத்துதல், குடல் இரைப்பை புண், அல்சர், நோய்களுக்கும் மருந்தாக உள்ளது. இதன் தோல்ப் பகுதி துவர்ப்பாக உள்ளதைக் காய வைத்து தூள் ஆக்கி வைத்துக் கொண்டு இரத்தக் கசிவுடன் மலம் வெளியேறும் போது உண்டு வந்தால் நோய் தீரும். இத்துடன் இந்தப் பழம் பசி இல்லாதவர்களுக்குப் பசியையும், உண்டாக்கும்.

முட்டை பழம், மாம்பழம் போன்று உள்ள இந்தப் பழம், நன்றாகப் பழுத்ததும் சுவையாக உள்ளது. இதை சாப்பிட்டால் மனநிலை சரியில்லாதவர்களுக்கு தீர்வு கிடைக்கும். பள்ளிக் குழந்தைகளுக்கு ஞாபக சக்தி அதிகரிக்கும். சிறுநீர் பிரச்சினை




உடைந்து விடுகிறது. இதன் உட்புறம் முட்டையின் மஞ்சள் கரு போல் மாவு போல் உள்ளவர்களுக்கு நோய் தீர்ந்து தெளிவாக சிறுநீர் வெளியேறும்.




# குழந்தைகளுக்கு உடற்பயிற்சி

குழந்தைகளின் ஆரோக்கியமான வாழ்வுக்கு உடற்பயிற்சி அவசியம் ஆகும். ஏனெனில் தற்போது குழந்தைப் பருவத்திலேயே உடல் எடை போடுவது உலகெங்கும் அதிகரித்து வரும் பெரும் பிரச்சினை ஆகும். சின்ன வயதிலேயே உடல் உப்பி விடுவதால், வயது வந்த பருவத்தில் நீரிழிவு நோய் முதல் இருதய நோய்கள் வரை பல்வேறு நோய்கள் தாக்க வாய்ப்பு உள்ளது. இந்நிலையில் குழந்தைகள்






ஒரு நாளைக்குக் குறைந்தது 1 மணி நேரமாவது உடற்பயிற்சி செய்தால் நிறைய நன்மைகள் கிடைக்கும்.

குழந்தைகளுக்கான உடற்பயிற்சி என்று எதையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாவிட்டாலும், அவர்கள் ஒரே இடத்தில் சோம்பிப் போய் கிடக்காமல் துறுதுறுப்பாக இருந்தாலே போதும். அதுவே அவர்களுக்குப் பெரிய உடற்பயிற்சி தான். நம்ம ஊரில் குழந்தைகள் மணிக்கணக்கில் டி.வி. முன் உட்கார்ந்து நிகழ்ச்சிகளைப் பார்க்க அனுமதிக்கிறோம். இது இரு வழிகளில் தவறானது. ஒன்று, குழந்தையின் கற்பனா சக்தி, கிரியேட்டிவ் தன்மை பாதிக்கப்படுகிறது. மற்றொன்று போதுமான இயக்கம் இல்லாமல் இருந்தால் பல்வேறு நோய்கள் வர வாய்ப்பு உள்ளது.

8 முதல் 11 வயது வரையிலான கட்டத்தில் தான் குழந்தைகளின் எலும்பு வளர்ச்சி, பலம் உச்சக்கட்ட அளவுக்கு அதிகரிக்கும். இதற்கு சரியான தூண்டுகோல் உடற்பயிற்சி தான் ரெகுலராக உடற்பயிற்சி செய்யும் குழந்தைகளுக்குத் தான் வலுவான எலும்புகள் அமையும்.

# பல் ஈறு பாதுகாப்பு....!



**பல்** ஈறுகளைப் பாதுகாக்க கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு முறைகள் வருமாறு:

1. பற்களில் காரை படியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதை தவிர்ப்பதற்குச் சரியான பல் துலக்கும் முறையைப் பின்பற்ற வேண்டும்.

2. பற்படலம் மற்றும் பற்காரைகளில் பதுங்கியிருக்கும் நுண்ணுயிரிகளின் தாக்குதலால் ஈறு அழற்சி ஏற்படுகிறது. இதைத் தடுப்பதற்கு பற்காரை மற்றும் பற்படலத்தை நீக்க வேண்டும்.

3. சுமார் 6 அங்குல நீள கைப்பிடியுடன், ஒன்றரை அங்குல நீளம் நைலோன் நாரிழைகள் உள்ள பிரஷைப் பயன்படுத்தி பற்களை துலக்க வேண்டும். மசாஜ் செய்வது மாதிரி மேலும் கீழுமாக சுழற்சி முறையில் பற்களைத் துலக்குவதே சிறந்த முறை.




4. உணவுக்கு முன்னும் பின்னும் அல்லது நாளொன்றுக்குக் குறைந்தது இருவேளையேனும் பல் துலக்குவது அவசியம்.

5. பற்களுக்குகிடையில் உணவுத் துணுக்குகள், கிருமிகள் சேராமல் பார்த்துக் கொள்வதோடு, புகைப்பழக்கம், வெற்றிலை, பாக்கு, புகையிலை மெல்லுதல் ஆகிய பழக்கங்களை அடியோடு விட்டொழிக்க வேண்டும்.

6. நகம் கடித்தல், பென்சில் கடித்தல், பற்களை நாக்கினால் தள்ளுதல், வாய் மூலம் சுவாசித்தல், விரல் சூப்புதல், கண்ட மருந்துகளை ஈறுகளில் தடவுதல், குண்டூசிகளால் பற்களைக் குத்துதல் போன்றவற்றையும் தவிர்க்க வேண்டும்.

மருத்துவரின் ஆலோசனைப்படி பற்களையும், ஈறுகளையும் பாதுகாக்க உணவுப் பழக்கங்கள் மற்றும் தூய்மைப் பழக்கங்களைக் கைக்கொள்வதோடு குறைந்தது



3 மாதங்களுக்கு ஒருமுறையாவது பல் மருத்துவரை அணுகி பரிசோதனைச் செய்து கொண்டால் ஈறு நோய்கள் இருக்கும் இடம் தெரியாமல் போகும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* —ஷோபா—

## சர்க்கரைவள்ளிக்கிழங்கு ஜாங்கிரி

***தேவையானவை***

சர்க்கரை வள்ளிக் கிழங்கு - 1/2 கிலோ
சீனி - 1/2 கிலோ
பச்சைக் கற்பூரம் - 5 கிராம்.
கேசரி பவுடர் - ஒரு சிட்டிகை
அரிசி மாவு - 2 டம்ளர்.
உளுத்தம் மாவு - 2 டேபிள் ஸ்பூன்.
கடலை எண்ணெய் - 350 மி.லி.
டால்டா - 1 டேபிள் ஸ்பூன்.

***செய்முறை:***

சர்க்கரைவள்ளிக் கிழங்கை ஆவியில் வேக வைத்து தோல் உரித்து மிக்ஸியில் நைசாக அரைக்கவும் அத்துடன் கேசரி பவுடர், உளுத்தம் மாவு, அரிசிமாவு, டால்டா சேர்த்து கலவையில் ஒன்றாகக் கலந்து கொள்ளும் வரை (ரொட்டி மாவு பசைவது போல) பிசையவும்.

வெல்லத்தை ஒரு டம்ளர் தண்ணீர் சேர்த்து அடுப்பில் கரைய விட்டு, வடிகட்டி பிறகு மிதமான சூட்டில் கம்பிப்பாகு பதம் வந்தவுடன் பச்சைக் கற்பூரம் சேர்க்கவும். அடுப்பை மிகவும் தணிக்கவும்.


பிசைந்த சர்க்கரை வள்ளிக் கிழங்கு, மாவுக் கலவையை முறுக்கு குழலில் ஒற்றைத் துளை தட்டு போட்டு கடலை எண்ணெயில் வட்டமாக ஜாங்கிரி போல இரண்டு சுற்றாகப் பிழியவும். வெந்ததும் எண்ணெயை வடிய விட்டு சூட்டோடு பாகில் போடவும், பாகு கோர்த்துக்கொண்டு மிக ருசியாக இருக்கும்.

# புற்றுநோயைக் குணப்படுத்தும் மஞ்சள்...!



இந்திய உணவு அயிட்டங்களில் தனியொரு இடத்தைப் பிடித்து வைத்திருக்கும் மஞ்சளுக்கு, மார்பகப் புற்றுநோயைக் குணப்படுத்தும் ஆற்றல் இருப்பதாக அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். மஞ்சளில் காணப்படும் குரகுரியம் என்ற பொருள் மார்பகப் புற்றுநோய் செல்கள் மேற்கொண்டு நுரையீரலுக்குப் பரவி விடாதபடி தடுப்பது எலிகளைப் பயன்படுத்தி நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது. தற்போது மனிதர்களில் இந்த சோதனை நடந்து வருகிறது.

மஞ்சளை எந்த ரூபத்திலாவது உணவில் சேர்த்துக் கொள்பவர்களுக்கு மார்பகப் புற்றுநோய், புரோஸ்டேட் புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் மற்றும் பெருங்குடல் புற்றுநோய் ஆகியவை வருவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாக இருந்து ஏற்கனவே நடந்த ஆய்வுகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் மஞ்சள் சாப்பிட்டால், மார்பகப் புற்றுநோயில் இருந்து பாதுகாப்பு கிடைக்கும் என்று தற்போதைய நிலையில் அறுதியிட்டுச் சொல்ல முடியாது.



# ஒரு தாயின் மகள் 36

“ஸாரி பேஜ். பிராட் வரவுமில்லை, போன் செய்யவுமில்லை என்றுதான் உன் சினேகிதி சொன்னாள்.” என்றான் தாரென்ஸன், அவள் கையை ஆறுதலாகத் தட்டிக் கொடுத்தபடி. கணவனுக்கும் மனைவிக்குமிடையே என்ன தகராறு என்று இப்போதும் அவனுக்குத் தெளிவாகப் புரியவில்லை. பிராட் ஏதோ பெண் விவகாரத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறான் என்று ஊகித்தான்.

ஆனால் வாழ்க்கையில் இந்த மாதிரி எவ்வளவோ நெருக்கடிகளைப் பார்த்தவன் தாரென்ஸன். மனைவி டானாவுடன் எத்தனையோ கசப்பான அனுபவங்களைக் கண்டவன். ஆகவே பேஜின் பிரச்சினையொன்றும் புதிதல்ல. எனினும், பேஜைப் பார்க்க அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. ஒண்டியாக எத்தனை சுமையைத் தாங்கிக் கொண்டிருக்கிறாள் பாவம்!

“கொஞ்ச நேரத்தில் பிராட் வந்து விடுவார். மனசைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே. சில பேருக்கு ஆஸ்பத்திரி என்றாலே தலை சுற்றும். நான் கூட அப்படித்தான் இருந்தேன்.” என்று மெதுவாகப்



பேச்சை மாற்றினான் அவன்.

“அப்புறம் எப்படி மாறினீர்கள்?”

“குழந்தைகளினால்தான். டானா அவர்களைக் கொஞ்சம் கூடக் கவனிக்க மாட்டாள். நான்தான் எல்லாம் செய்ய வேண்டியிருந்தது. உன் கணவனுக்கு அப்படியில்லை. குழந்தைகளை நல்லபடி பார்த்துக் கொள்ள நீ இருக்கிறாயே?” என்று புன்னகையுடன் சொன்னான் அவன்.

தான் மன ஆறுதல் அடைய வேண்டுமென்பதற்காகவே அவன் பிராடுக்குப் பரிந்து பேசுகிறான் என்பது பேஜுக்குப் புரிந்தது. ஏற்கெனவே அவன்பால் ஏற்பட்டிருந்த நன்றியுணர்வு இன்னும் அதிகரித்தது.

டாக்டர்கள் வந்து, ஆலிஸனின் நிலைமை அப்படியே தான் இருக்கிறது என்று தெரிவித்தார்கள். “மூளையில் வீக்கம் ஏற்பட்டிருப்பது நல்லதல்ல. உங்களுக்குத் தப்பான நம்பிக்கை தர நாங்கள் விரும்பவில்லை. இன்றைய இரவைத் தாண்டினால்தான் சொல்ல முடியும்....” என்றார்கள்.

திகீரென்றது பேஜுக்கு. “இன்றைய இரவைத் தாண்ட வேண்டும் என்றால்.... அதாவது.... அதாவது....”

அவளால் வாக்கியத்தைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. இன்று இரவு ஆலிஸன் இறந்து போகக்கூடும் என்று சொல்கிறார்கள்! தெய்வமே! கூடாது!கூடாது!

கொஞ்ச நேரம் கழித்து அவளை ஆலிஸனைப் பார்க்க அனுமதித்தார்கள்.

இரண்டு கண்களிலிருந்தும் கண்ணீர் பொங்கி வழிய, ஆலிஸனின் படுக்கைக்குப் பக்கத்திலே உட்கார்ந்து, அவள் கைகளைப் பற்றிக் கொண்டாள் - அவள் தன்னை விட்டுப் போய் விடாதபடி தடுத்துப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகிற மாதிரி.

இரவு முழுவதும் ஆலிஸனின் பக்கத்திலேயே உட்கார்ந்திருக்க அவளை அனுமதித்தார்கள். ஆலிஸன் கொஞ்சமும் அசையவில்லை. அவள் முகத்தைப் பார்ப்பதும் கையைப் பிடித்துக் கொள்வதும் பிரார்த்தனை செய்வதுமாக இருந்தாள் பேஜ்.

பொழுது விடிந்தது.

ஆலிஸனின் மூளை வீக்கம் நல்லவேளையாக மேலும் மோசமாகவில்லை. தொடர்ந்து ரெஸ்பிரேட்டர் கருவியின் மூலம் சுவாசித்துக் கொண்டிருந்தாள். நிலைமையில் அபிவிருத்தி இல்லை. எனினும் உயிருடன் இருக்கிறாள். அதுவே போதும் என்று எண்ணிக் கொண்டாள் பேஜ். ஆனால் நிமிடத்துக்கு நிமிடம் நிலைமை மாறுகிறதே!

“நீங்கள் வீட்டுக்குப் போவதானால் போகலாம்” என்றார்கள் டாக்டர்கள். “உடனடியாக அபாயம் எதுவும் இல்லை. மயக்க மருந்து பலமாகக் கொடுத்திருக்கிறோம். வீட்டிலேயே இருங்கள். அவசரமென்றால் போன் பண்ணுகிறோம்.”

மீண்டுமொரு முறை ஆலிஸனை முத்தமிட்டுவிட்டு அவள் புறப்பட்டபோது காலை ஆறரை மணி. வெயிட்டிங் அறையை நோக்கி நடக்கையில் அவள் தேகத்தின் ஒவ்வோர் அங்குலமும் தாள முடியாமல் வலித்தது.

முன்னறையில் -

தாரென்ஸன் அவளுக்காகக் காத்திருந்தான். நாற்காலியில் உட்கார்ந்தபடியே ராத்திரி முழுவதும் அவன் தூங்கியிருக்கிறான்! ஆலிஸனுக்கு ஏதாவது நேர்ந்து, பிராடும் வராமலே இருந்து விட்டானென்றால், பேஜுக்குத் துணை தேவைப்படும் என்பதால் வீட்டுக்குப் போகாமல் இருந்திருக்கிறான். நினைக்க நினைக்கப் பேஜின் உள்ளம் உருகியது.

ஆலிஸன் தாக்குப் பிடித்துக்

**எழுதியது: டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

கொண்டிருக்கிறாள் என்பதைக் கேட்டதும் தாரென்ஸன் முகத்தில் நிம்மதி ஏற்பட்டது.

“என் காரில் உன்னை அழைத்துப் போகிறேன். உன் வண்டியை இங்கேயே விட்டு விட்டு வா. நானே உன்னை மறுபடி இங்கே அழைத்து வருகிறேன்.” என்றான்.

இரண்டு அடி எடுத்து வைப்பதே பெரும் கஷ்டமாக இருந்தது அவளுக்கு. கார் ஓட்டுவதைப் பற்றி நினைக்கவே முடியாது. எனவே நன்றியுடன் ஒப்புக் கொண்டவள், “என்னை வீட்டில் கொண்டு போய் விட்டால் கூடப் போதும். டாக்ஸியில் திரும்பி வந்து கொள்வேன்” என்று சொல்லி அவனுடன் முன் சீட்டில் அமர்ந்து கொண்டாள். ‘என் செல்லம்.... என் கண்மணி.... இன்னொரு ராத்திரியை தாண்டி விட்டால்...’ என்ற நினைப்பில் அவள் நெஞ்சு நிறைவு கொண்டது. இப்படியே கொஞ்சம் கொஞ்சமாய்ப் பிழைத்து விட்டால்.

“நீ ரொம்ப தைரியசாலி” என்று பாராட்டிய தாரென்ஸன் மிருதுவாக அவள் கன்னத்தில் முத்தமிட்டான். அவள் தோளை ஒரு முறை அழுத்தி, கையைத் தட்டிக் கொடுத்தான். பிறகு காரைக் கிளப்பினான்.

வீட்டு வாசலை அடைந்தபோது, பேஜ் சீட்டில் சாய்ந்தபடி அயர்ந்து தூங்கிப் போயிருந்தாள். மெல்லத் தட்டி எழுப்பினான்.

கண்ணைக் கசக்கிக் கொண்டு விழித்தவள், “தாங்க் யூ.... அருமையான சினேகிதர் கிடைத்தீர்கள்” என்று புன்னகை செய்தாள்.

மணி ஏழரையாகியிருந்தது. வீட்டை அடைந்து, கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். பிராடைப் பார்த்தால் என்ன சொல்லப் போகிறோம் என்று நினைத்துக் கொண்டாள். இனிமேல் சொல்வதற்கு என்ன இருக்கிறது? குட் பைதான்.

வீட்டுக்குள் யாரும் இல்லை.

படுக்கையில் விழுவதா அல்லது ஜேனின் வீட்டுக்குப் போய் ஆண்டியை அழைத்து வருவதா என்று அரை வினாடி யோசித்தாள். உடம்பு கெஞ்சியது. தூக்கம் இமைகளை அழுத்தியது. ஆனால் குழந்தையை அழைத்து வருவதே முக்கியம் என்று தீர்மானித்து, முகத்தைக் கழுவிக் கொண்டு, முடியை அழுத்திப் படிய வைத்துக் கொண்டாள். யாராவது கூப்பிட்டார்களா என்று டெலிபோனைப் பார்த்தாள். யார் யாரோ கூப்பிட்டார்கள் என்று பதிவாகியிருந்தது.

ஆனால் பிராடிடமிருந்து மூச்சுப் பேச்சைக் காணோம்.

என்ன கல் நெஞ்சம் இருந்தால், மகள் ஆலிஸனின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் வேளையில் காதலியின் வீட்டில் உட்கார்ந்திருக்க முடியும்! இந்நேரம் அந்த ஸ்டிபானிக்கும் ஆலிஸனைப்பற்றித் தெரிந்திருக்கும். அப்படியும் இவரை விடாமல் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறாளே ராட்சசி!

பொங்கும் சினத்தை அடக்கிக் கொண்டு ஜேனின் வீட்டை அடைந்தபோது ஆண்டி சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தான். ஜேன் மெல்லப் பாடியபடி சமையல் செய்து கொண்டிருந்தாள். டெலிவிஷன் ஓடிக் கொண்டிருந்தது.

“அதிர்ஷ்டக்காரண்டா நீ!” என்று கூறி அவன் உச்சந்தலையில் முத்தமிட்டாள் பேஜ்.

அவன் உடனே கேட்ட கேள்வி : “ஆலி எப்படியம்மா இருக்காள்?”

பேஜ் கண்ணீரை விழுங்கிக் கொண்டாள். நேற்று ராத்திரி போயிருக்க வேண்டியவள். கடவுள் அருளால் பிழைத்திருக்கிறாள் என்று குழந்தையிடம் எப்படிச் சொல்ல முடியும்?

(தாய் தொடர்வாள்.....)

**சென்ற வாரம்**

பேஜ் தாரென்ஸனிடம் தனக்கு ஏற்பட்ட கதியை கூறிவிடுகிறாள். இதனால் தாரென்ஸனுக்கு பேஜ் மேல் ஒரு பரிவு ஏற்படுகின்றது. ஆலிஸனின் நிலைமை கொஞ்சம் சீரடைந்து வருகிறது. இனி......

## ஷகீலாவின் முத்..த்..த்...தம்


ஷகீலா

சென்னை டி.வீ.கே. கல்சுரல் அகாடமி நிறுவனம் சென்னையில் கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. பல்வேறு மொழிக் கலைஞர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சிக்கு அனைத்து மொழிகளிலும் பிரபலமான ஷகீலா சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

ஷகீலா சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார் என்ற செய்தி பரவியதும் எதிர்பாராத அளவுக்குப் பெரும் கூட்டம் குவிந்து கலை நிகழ்ச்சிக்கான டிக்கெட்டுகள் படுவேகமாக விற்றுத் தீர்ந்தன.

நிகழ்ச்சி நடந்த நடராஜா அண்ணாமலை மன்றம் நிரம்பி வழிந்தது. ஆச்சரியப்படத்தக்க வகையில் ஆண்கள் மட்டும் இல்லாமல் ஏராளமான பெண்களும் வந்திருந்தனர். அத்தனை பேரின் கண்களும் ஷகீலாவையே எதிர்பார்த்துக் காத்திருந்தன.

நிகழ்ச்சி தொடங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன் ஷகீலா அரங்குள் வந்தார். வந்தவர் பார்வையாளர்களைப் பார்த்து கையசைத்தவாறு, கும்பிட்டவாறு, கிட்டத்தட்ட அரசியல்வாதி ரேஞ்சுக்கு உள்ளே நுழைந்து பார்வையாளர்கள் மத்தியில் போய் அமர்ந்து கொண்டார்.

கலை நிகழ்ச்சியை படு ஆர்வமாக



ரசித்துப் பார்த்த ஷகீலா அவ்வப்போது கை தட்டியும், வாய்விட்டுச் சிரித்தும் அனுபவிக்க, இவரா அப்படியெல்லாம் நடித்தார் என்று ஆச்சரியத்துடன் பார்த்தது கூட்டம்.

நிகழ்ச்சியின் நிறைவாக, ஷகீலாவுக்கு நிகழ்ச்சி அமைப்பாளர்கள் சிறப்புப் பரிசு ஒன்றை வழங்கினர். இதற்காக ஷகீலாவை மேடைக்கு அழைத்தபோது அரங்கமே ஒட்டு மொத்தமாக கை தட்டியது ஷகீலாவும் மேடைக்குப் போய் பார்வையாளர்களுக்கு ஒரு சூடான பறக்கும் முத்தத்தை பறக்க விட்டார்.

## கொலையா? தற்கொலையா?


மயூரி

'கும்பகோணம் கோபாலு' பட நாயகி நடிகை மயூரி என்ற ஷாலினி தற்கொலை செய்து கொண்டதற்குப் புதிய காரணம் கூறப்படுகிறது.

'கும்பகோணம் கோபாலு' மூலம் ஹீரோயினாக அறிமுகமானாலும் ஷாலினிக்கு பின்னர் சிறு சிறு வேடங்கள் மட்டுமே கிடைத்தது. ஆனாலும் அது பற்றிக் கவலைப்படாமல் அந்த வேடங்களிலும் நடித்து வந்தார். அவர் கடைசியாக நடித்த படம் 'கனா கண்டேன்.'

இந் நிலையில் சென்னை அண்ணா நகரில் உள்ள அவரது வீட்டில் கடந்த 15ஆம் தேதி ஷாலினி தூக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

அவரது தற்கொலைக்கு என்ன காரணம் என்பது குறித்து பொலிஸார் தீவிரமாக விசாரித்து வந்தனர். காதல் தோல்வி காரணமாக இருக்கலாம் என முதலில் கருதப்பட்டது. ஆனால் அவரது நண்பர்கள், குடும்பத்தினர் மத்தியில் விசாரித்த போது, ஷாலினிக்கு காதலர்கள் யாரும் இல்லை என்று தெரியவந்தது.

காதலர்கள் இல்லாவிட்டாலும் அவருக்கு ஆண் நண்பர்கள் அதிகம் இருந்தனர் என்றும் அதே சமயம் கெட்ட பழக்கங்கள் எதுவும் அவரிடம் இல்லை என்றும் தெரியவந்தது.

இந்த மன வருத்தத்தில் அவர் இருந்த போது ஷாலினியின் தந்தை குமாருக்கும் தாயார் சாந்திக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் குமார் கோபித்துக் கொண்டு சில நாட்களுக்கு முன்பு வீட்டை விட்டுப் போய் விட்டார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த ஷாலினிக்கு மேலும் மன வேதனை ஏற்பட்டுள்ளது. ஷாலினியின் தந்தை குமார் வீட்டை விட்டுப் போன 2 நாட்களில், அப்பகுதி ரயில்வே தண்டவாளம் அருகே ஒருவர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டதாக செய்தி வந்துள்ளது.

அது தனது தந்தையாக இருக்குமோ என்று நினைத்து குழம்பிய ஷாலினி, தாயுடன் ஏற்பட்ட தகராறால் மனம் உடைந்து தந்தை தற்கொலை செய்து கொண்டு விட்டதாக நினைத்துள்ளார்.

இதனால் மேலும் குழப்பத்தில் மூழ்கிய அவர் விரக்தியில் தற்கொலை முடிவை நாடியிருப்பார் என பொலிஸ் தரப்பில் இப்போது கூறப்படுகிறது.

# உரிமை மடல்...15

மலை தடை கடந்து
புயலிடை எழுந்து
உங்களுக்காக
ஓர் உரிமை மடல்!

உண்மை எதுவென உரத்த குரலெடுத்து
உன்னத வழிகாட்டி எழுதும்
உரிமை மடல்!

இது
செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ்
தேவானந்தா அவர்கள்
இடர் படும் எம் தேசத்து மக்களுக்காக எழுதும்
தொடர் மடல்!...

***அன்பான எம் தேசத்து மக்களே!***

உங்களுக்கு வணக்கம்!

எமது இலட்சியப் பயணத்தில் இதுவரை நாம் கண்டவைகள் ஈடற்ற இழப்புக்கள்!

இனி இழப்பதற்கு இங்கே எஞ்சியிருப்பவைகள் கொன்று பலியாக்கப்பட்ட எமது மக்களினதும் போராளிகளினதும் புதைகுழிகளையும் அதன் மீது எழுப்பப்பட்டிருக்கும் சமாதிகளையும் தவிர வேறொன்றும் இல்லை!

இதுவரை நீங்கள் எல்லாவற்றையும் இழந்திருக்கிறீர்கள்! உங்கள் உறவுகளை.... இரத்த பாசங்களை.... நண்பர்களை.... கூட இருந்தவர்களை.... குடும்பத்தவர்களை என்று பலரையும் இழந்திருக்கிறீர்கள்!

உங்களுக்காகப் போராட எழுந்த உன்னதப் போராளிகளை இழந்திருக்கிறீர்கள்!

நீண்டதும் நெடியதுமான அனுபவம் மிக்க பல தமிழ்த் தலைவர்களை இழந்திருக்கிறீர்கள்!

கொன்று பலியாக்கப்பட்ட போராளிகளும் தலைவர்களும் உங்களுக்காகவே போராட எழுந்தவர்கள்! ஆகவே, அந்த இழப்பின் துயரம் அளவிடமுடியாத அவலத்தைக் கொண்டது!

கொல்லப்பட்ட போராளிகளும் தலைவர்களும் எங்களுடன் கூட இருந்தவர்கள்! ஒன்றாய் உண்டு.... ஒன்றாய் உறங்கி... நண்பர்களாய்.... தோழர்களாய்... உடன்பிறந்தவர்களாய் இருந்தவர்கள்!

ஆகையால், அந்த இழப்பு எங்களது நினைவுகளில் கொடிய ரணங்களாக இன்னமும் வலியெடுக்கிறது!

நாம் கடந்து வந்த பாதையில் பல இன்னுயிர் தோழர்களை பேரினவாதத்திற்கும் புலிப் பாசிசத்திற்கும் பலிகொடுத்திருக்றோம்!

ஆனாலும், கொன்றொழிக்கப்பட்ட எமது தலைவர்களில் ஒருவரையாவது அரச படையினர்

கொன்றொழித்ததாக சரித்திரம் இல்லை!

புதிய தமிழ் புலிகளின் தலைவர் செட்டி தனபாலசிங்கம்.... ரெலோ இயக்கத் தலைவர் ஒபரோய் தேவன்.... ரெலோ இயக்கத் தலைவர் ஜெகன்.... ரெலோ முக்கியஸ்தர் தோழர் மனோ மாஸ்ரர்...

ரெலோ தலைவர் தோழர் சிறீசபாரத்தினம்.... ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா... தேசியத் தலைவர் அமிர்தலிங்கம் என்று புலிப் பாசிசம் பலிகொண்ட இந்தப் பட்டியல் நீள்கின்றது!

இந்தப் படுகொலைகள் மாறாத வடுக்களாக.... ஆற்ற முடியாத துயரங்களாக இன்று வரை எமது நினைவுகளில் நீடித்திருந்தாலும்...

எனது இதயத்தில் கனத்த வலியினை ஏற்படுத்திய புலிகளின் படுகொலைப் பட்டியலில் தோழர் பத்மநாபா அவர்கள் மீதான படுகொலை என்பது பிரதான ஒன்றாகும்!

இன்று ஜூன் 19!.... என் நெஞ்சத்தில் ரணம் விழுந்த நினைவு நாள்!

என் இதயம் கனத்து வலியெடுத்துக் காயப்பட்ட நாள்! என் இரத்தத்தின் இரத்தமாக...

தோழனுக்குத் தோழனாக இருந்து பாசிசப் புலிகளினால் கொன்று பலியாக்கப்பட்ட தோழர் நாபாவின் நினைவு நாள்!..

சென்னை கோடம்பாக்கத்தில் வைத்து இதே தினத்தில் தோழர் நாபாவையும் சக தோழர்களையும் புலிப் பாசிசம் பலி கொண்ட நாள்!....

அவர் படுகொலை செய்யப்படுகின்ற அந்த இறுதிக் காலத்தில் நான் அவரை விட்டுப் பிரிந்தி ருந்தாலும் அவரது இழப்பில் நான் முரண்பாடுகளை மறந்து துடிதுடித்துப்போன

துயரம் தோய்ந்த நாள்!....

ஆம்!... தோழர் நாபாவின் அந்த நினைவுகளைச் சுமந்தபடி மக்களாகிய உங்களோடு நான் மனந்திறந்து பேச விரும்புகின்றேன்!

தோழர் நாபா அவர்களின் நினைவுகளை மக்களாகிய உங்களிடையே எடுத்து வந்து அந்த ஞாபகங்களை மீட்டுப் பார்ப்பதற்கான வரலாற்றுக் கடமை என்பது இன்று எனது தோள்களின் மீது இலட்சியச் சுமையாக விழுந்திருக்கிறது.

அவரது நினைவுகளையும் அவரது ஆரம்ப கால இலட்சியக் கனவுகளையும் சுமந்து நடக்க வேண்டிய வாலாற்றுப் பொறுப்பு இப்போது எனது அரசியல் கடமையாக உருவெடுத்து நிற்கிறது!

தோழர் நாபாவின் வரலாறு எங்களது ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப வரலாறு!

அந்த வரலாற்றோடு சம்பந்தப்பட்டவர்கள் பலரும் எம்மிடையே இல்லாமல் போய்விட்டனர்.

பலர் அழிக்கப்பட்டுவிட்டனர். இங்கு சிலர் ஓடுகாலிகளாக அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருக்கின்றனர்!

வேறு சிலர் மனித நேயத்தை மறுப்பவர்களின் பக்கம் மாறி நிற்கின்றனர்.

தோழர் நாபா என்ற வரலாற்று நாயகனோடு ஆரம்ப காலம் தொட்டு சம்பந்தப்பட்டவன் என்ற வகையில் இன்றைய தினத்தில் என்னால் அவரை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை!

70களின் ஆரம்பங்களில் எங்கள் தேசத்து மக்களாகிய உங்களை நேசிக்கத் தொடங்கியவர்!

மானுட விடுதலையை நேசித்து மக்கள் என்ற மாபெரும் சமுத்திரத்தில் இறங்கியிருந்தவர்!

தோழர் நாபா, வசதியான குடும்பத்தில் பிறந்தவர்! ஆனாலும் அவர் தான் கொண்ட அரசியல் சித்தாந்த வழிமுறையை ஏற்ற பின்பு, தனது வாழ்க்கையைப் புதிதாக ஆரம்பித்தது வசதியற்ற கிராமங்களில்....


தோழர் நாபா தனது அரசியல் பணியை ஆரம்பித்தது கல்லுடைக்கும் தொழிலாளர் மத்தியிலும்... செம்மண் தோட்டத்து வரம்புகளிலும்... எங்கள் தேசத்து கிராமங்களின் குடிசைகளிலும் மட்டும்தான்!

அந்த வரலாற்றினை நான் அவருடன் கூட இருந்து கண்டுகொண்டவன்!

மிக எளிமையான தோற்றம்!... தன்னைப்போல் பிறரையும் நேசிக்கும் மனித நேயம்!...

மனிதாபிமானப் பண்பு!.... தான் வாழும் சமூகம் பற்றிய சரியான மதிப்பீடு!.... அது குறித்த புரட்சிகர எண்ணங்கள்!.... இவைகளே தோழர் நாபா அவர்களை ஏனைய தலைவர்களிடம் இருந்து வித்தியாசப்படுத்திய அவரது வாழ்வின் குறியீடுகள்!

ஆரம்பங்களில் ஈழ விடுதலை இயக்கத்தில் தோழர் நாபா அவர்களோடு இருந்தவர்களில் நானும் ஒருவன்!



டக்ளஸ் தேவானந்தா

அந்த அமைப்பு அன்றைய அரசியல் நெருக்கடிகளினால் சிதைந்துபோயிருந்தது!

அதன் பின்பு, ஈரோஸ் அமைப்பின் உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்தவர்களில் தோழர் நாபாவுக்கும் எனக்கும் முக்கிய பங்குண்டு!

ஈரோஸ் அமைப்பில் இருந்து முரண்பாடு காரணமாகப் பிரிந்து வந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். என்ற மக்கள் இயக்கத்தைக் கட்டி அமைப்பதற்கு தோழர் நாபா அவர்கள் தன்னை வருத்திய வரலாற்று நிகழ்வுகளோடு எனக்கும் சம பங்கு இருப்பதால் அந்த நினைவுகளை நான் எண்ணிப் பார்க்கின்றேன்!

இயக்கத்தை வளர்ப்பதற்காக தமிழ் நாட்டின் பாதை ஓரங்களிலும் கடற்கரை மணல் வெளிகளிலும் நான் அவரோடு படுத்துறங்கிய நாட்களை எண்ணிப் பார்க்கின்றேன்!...

உடுத்த உடுப்பை மாற்றி உடுக்க உடு புடைவை இருக்கவில்லை! எங்களது இளமையை அழகு படுத்த எங்களுக்கு நேரமிருக்கவில்லை!... அந்த நினைவிலும் இருக்கவில்லை!.... அந்த அக்கறை எமக்கு இருக்கவில்லை! தாய் தந்தையரை, உறவுகளை நினைத்துப்பார்க்க நேரமிருக்கவில்லை! நாங்கள் எண்ணியிருந்ததெல்லாம் எமது மக்களாகிய உங்களது இலட்சிய கனவுகளை மட்டுமே!

எம் இனிய மக்களே! நாங்கள் ஆயுதப் போராட்டத்தை நோக்கி அணி திரளுமாறு அப்போது உங்களுக்கு அறைகூவல் விடுத்திருந்தோம்! எங்களை நம்பி உங்களது பிள்ளைகள் போராட்டக் களம் நோக்கி வந்தார்கள்! உங்களது பிள்ளைகளை எங்களது தோழர் களாக்கிக் கொண்டோம்!

இந்த மண்ணை நேசித்து.... மக்களாகிய உங்களை நேசித்து..... உங்களது உறவுகளை பிரிந்து வந்த உங்களது பிள்ளைகளை நாம் பராமரிப்பதற்குத் திண்டாடி யிருந்த அந்த நாட்களை எண்ணிப் பார்க்கின்றோம்.

அதற்காக நானும் தோழர் நாபாவும் பட்ட அவஸ்தைகளையும் அர்ப்பணங்களையும் நான் நினைத்துப் பாரக்கின்றேன்!

நானும் தோழர் நாபாவும் அடிக்கடி தமிழ் நாட்டின் மருத்துவ மனைகளுக்குச் சென்று, அங்குள்ள இரத்த வங்கிகளில் எமது இரத்தத்தை விற்று, அதைக்கொண்டு பெறப்பட்ட பணத்தைக் கொண்டுதான் எங்களது தோழர்களுக்கு நாங்கள் சாப்பாடு கொடுத்திருக்கின்றோம்!

எங்களது குருதியை விற்ற பணத்திலும்தான் எமது இயக்கத்தின் தேவைகளை நாங்கள் பூரத்தியாக்க வேண்டிய நிலைமை அன்றிருந்தது!

பசியும் பட்டினியும் போராட்ட வீரர்களுக்கு ஒரு பொருட்டல்ல! தங்களை வருத்தி தாம் சார்ந்த மக்களின் விடியலுக்காக உழைப்பவர்களே உணர்வுமிக்க போராளிகள்!

***'இடது கையைக் கடித்துக்கொண்டு வலது கையால் போராடுவோம்!'***

இப்படி எழுதினான் ஆபிரிக்க தேசத்துக் கவிஞன் ஒருவன்! அந்தக் கவிஞன் எழுதிய நம்பிக்கை தரும் வரிகளையே இங்கு நான் ஞாபகப்படுத்த விரும்புறேன்!

இதில் நாம் கூறுவது என்னவெனில்....

பசித்திருந்த தோழர்களுக்கு
எங்கள் குருதியில்
நாங்கள் உணவு படைத்தோம்!
எங்கள் குருதியும் தசையும்
கொட்டிய வியர்வையும்தான்

நாம் கட்டி வளர்த்த மக்கள் இயக்கம் ஈ.பி.ஆர்.எல்.எவ்!

இப்படிச் சொன்னால் அது மிகையாகாது என எண்ணுகின்றேன்! இத்தகைய தலைமைப் பண்பும் அர்ப்பண உணர்வும் ஈழப் போராட்டத்தின் உன்னத எடுத்துக்காட்டாக உலகப் போராட்டங்களின் தியாக வரலாற்றில் குறிக்கப்படவேண்டியவைகள் என்பதை நான் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்!

எம் இனிய மக்களே! எமது அரசியலுரிமைப் போராட்ட வரலாறு என்பது இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு முன்பு.... அதற்குப் பின்பு எனப் பிரித்துப் பார்க்கப்பட வேண்டிய ஒன்று!

அதே போல் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் வரலாறும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்திற்கு முன்... அதற்குப் பின் என்று இரு வேறு பகுதியாகப் பிரித்துப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்!

ஆரம்பக் காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் ஸ்தாபகர்களில் நானும் ஒருவனாக இருந்தவன்! அந்த நாட்களில் தோழர் நாபா அவர்களின் அரசியல் தலை மையை ஏற்றுக்கொண்டு எமது அமைப்பின் மக்கள் விடுதலைப் படை என்ற இர்ாணுவப் பிரிவின் பிரதம தளபதியாக இருந்தவன் நான்!

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் உயர் அரசியல் பீட உறுப்பினர்களில் ஒருவனாகவும் தோழர் நாபாவுடன் கூட இருந்தவன்!

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் நாம் வெறுமனே அரச படையினரோடு யுத்தம் புரியும் படைக் கருவிகளாக மட்டும் அன்றி, எமது மக்கள் முகம் கொடுக்கும் தேசிய.... பொருளாதார...சமூக ஒடுக்கு முறைகள் குறித்தும் உயரிய எண்ணங்களையே கொண்டிருந்தவர்கள்!

அப்போது நடந்த நிலமற்ற விவசாயிகளுக்கான போராட்டங்கள்... சமூக ஒடுக்கு முறை குறித்த போராட்டங்கள்... மாணவர் எழுச்சிப் போராட்டங்கள்.... 77 இல் நடந்த இனக் கலவரத்தை ஒட்டி இடம்பெயர்ந்த எமது மக்களின் துயர் துடைக்கும் பணிகள்.... கிழக்கில் அடித்த சூறாவளிக்கான நிவாரணப் பணிகள் என்று இவைகள் குறித்து நாம் நேரடியாகவே மக்களைத் தேடிச் சென்றவர்கள்!

எமது போராட்டம் என்பது ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் என்ற வகையில் ஒட்டு மொத்த மக்களையும் நேசித்து ஓரணியில் திரட்டியே நாம் எமது இலட்சியப் பயணத்தை முன்னெடுத்திருந்தோம்!

நாங்கள் தனி நபர் பயங்கரவாத நடவடிக்கைகளில் இருந்து எமது போராட்டத்தை ஆரம்பித்தவர்கள் அல்ல! மக்களை வழிநடத்திச் செல்லதற்கென ஒரு புரட்சிகர கட்சியின் துணையோடு..... அதற்கான கட்டுக்கோப்புமிக்க ஒரு மக்கள் விடுதலைப் படையோடு... சரியானதும் தெளிவானதுமான ஒரு சிந்தாந்த வழிமுறையோடு போராட்டக் களத்தில் புகுந்தவர்கள்!

எங்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தில் அரசியல் தலைமையை ஏற்கும் பொறுப்பினை தோழர் நாபா அவர்கள் மீது வரலாறு எப்படிச் சுமத்தியதோ,... அவ்வாறுதான் அந்த அரசியல் தலைமையை ஏற்று மக்கள் விடுதலைப் படையை வழி நடத்திச் செல்லவேண்டிய பொறுப்பினை வரலாறு என் மீதும் சுமத்தியிருந்தது!

உலகெங்கும் வாழுகின்ற ஒடுக்கப்படுகின்ற தேசங்களின் மக்களுக்கான போராட்டத்தின் ஒரு பகுதிப் போராட்டமாகவே நாம் எமது போராட்டத்தைக் கருதியிருந்தோம்!

அதற்காக சர்வதேசமெங்கும் பரந்து வாழும் முற்போக்குச் சக்திகளோடு ஈ.பி.ஆர்.எல்.எவ். அன்று கைகோர்த்து நின்றது! சர்வதேச நாடுகளில் எமது நட்பு சக்திகள் யார் என்பதை நாம் அன்று தெளிவாக வரையறுத்திருந்தோம்!

அதே போல் உள்நாட்டிலும் எதிரி யார்?... நண்பன் யார்? என்ற விடயத்தில் நாம் சரியான ஒரு கணிப்பீட்டையே கொண்டிருந்தோம்! அதற்காக தோழர் நாபாவும் நாங்களும் நேச சக்திகளை நாடி அவர்களோடு கைகுலுக்கிக்கொண்டவர்கள்!

எமது அயலுலக அரசியல் உறவு குறித்து தோழர் நாபா அவர்கள் மிகத் தெளிவான நிலைப்பாட்டினை எடுத்திருந்தார். அது குறித்து அவர் கூறிய கருத்தினை நான் இங்கு காலத்தின் தேவை உணர்ந்து சுட்டிக்காட்ட விரும்புகிறேன்!

“ஈழ விடுதலைப் போராட்டம் என்பது இந்தியாவின் நலனுக்கோ இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்கோ முரணானதல்ல! மாறாக இந்தியாவின் நலன்... ஈழ மக்களின் நலன்.... இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதி.... இந்த மூன்று விடயங்களையும் பிரிக்க முடியாதபடி ஒன்றிணைந்த வகையில் ஒத்திசைவாக உள்ளன! இந்தியாவின் நட்பையும் மீறி நாங்கள் போராடுவோம் என்று யாராவது கருதுவார்களேயானால் அது எமது இன்றைய யதார்த்தத்திற்குப் புறம்பான ஒன்றாகும்! அது அதீத துணிச்சல் மனோ பாவத்தின் வெளிப்பாடேயாகும்! அவ்வாறான நினைப்பானது எம்மை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லும்! அல்லது நீண்ட கால அடிப்படையில் ஈழப் போராளிகளைச் சர்வதேச பிற்போக்குச் சக்திகளின் கையில் வீழ்த்திவிடும்!”

இதுதான் தோழர் நாபா கொண்டிருந்த இந்தியா தொடர்பான கருத்தாகும்! அவரது தீர்கதரிசனம் மிக்க கருத்துக்களை இன்றைய நடைமுறைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் பல உண்மைகள் தெளிவாகும் என்ற விடயத்தை தோழர் நாபா அவர்களின் இன்றைய நினைவு நாளில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்!

எம் இனிய மக்களே! நாம் இன்று தோழர் நாபாவை நினைவு கூருகின்றோம்! அதே நேரம் அவருக்கும் எனக்கும் இடையில் முரண்பாடுகள் இருந்ததாக நீங்கள் அறிந்திருப்பீர்கள்! ஆனாலும் அது குறித்த சில உண்மைகளையும் நான் சொல்லியே ஆகவேண்டும்!

மட்டுநகர் சிறையுடைப்போடு தமிழ்நாடு சென்றிருந்த நான், 84ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அங்கிருந்து மீண்டும் எமது மண்ணுக்குத் திரும்பியிருந்தேன். எமது தேசத்தில் எமது மக்களுக்கான போராட்டத்தை நாம் முன்னெடுத்து வந்த வேளை எமது கட்சிக்குள் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டன.

திட்டமிட்ட வகையில் எனக்கும் தோழர் நாபா அவர்களுக்கும் இடையில் முரண்பாடுகளை வளர்த்து விடவேண்டும் என்பதில் சிலர் குறியாக இருந்தனர்; தமது சுயலாபங்களுக்காக.

நாங்கள் விவாதித்துக்கொண்டோம்....ஆனாலும்

தோழமை உணர்வோடு.... முரண்பட்டுக் கொண்டோம்!

ஆனால் எமக்குள் இருந்தது பகை முரண்பாடு அல்ல! எமக்குள் நிலவிய முரண்பாட்டினை நானும், நாபா தோழரும் நேச முரண்பாடாகவே கருதியிருந்தோம்! அதைப் பகை முரண்பாடுகளாக உருவாக்க சிலர் எத்தனித்திருந்ததையும் நான் இங்கு தெரிவித்தே ஆகவேண்டும்!

இயக்கத்திற்குள் இருந்த சிலர், மக்களது நலன்களுக்கு அப்பால்... கட்சியின் ஒட்டு மொத்த நலன்களுக்கு அப்பால்.... தங்களது சுய லாபங்களை மட்டும் கணக்குப்பார்த்து செயற்பட்டதினால் எனக்கும் தோழர் நாபா அவர்களுக்கும் இடையிலான முரண்பாடு இன்னும் விரிந்து செல்ல வேண்டியிருந்தது!

ஆனால், முரண்பாடுகளைக் கையாள்வதற்காக நாம் எமக்குள் துப்பாக்கிகளைத் தூக்கியது கிடையாது!

நான் அப்போது பிரதம தளபதியாக இருந்தவன்! கட்சிக்குள் முரண்பட்டவர்கள் என்பதற்காக நாபா தோழர் மீதோ அன்றி முரண்பாடுகளை எம்மிடையே தூண்டிவிட்டவர்கள் மீதோ எமது ஆயுதங்களை ஒரு போதும் திருப்ப எண்ணியதில்லை! அனுமதித்ததும் இல்லை.

அதே போல் தோழர் நாபா, கட்சியின் செயலாளராக இருந்தவர். அவர் என்னுடனும் சக தோழர்களுடனும் முரண்பட்டவர் என்பதற்காக எம்மீது துப்பாக்கிகளை நீட்ட எண்ணியதில்லை!

ஆனாலும் சில சக்திகளின் தவறான அணுகு முறையினால் சில கசப்பான சம்பவங்கள் நடந்தன என்பது உண்மைதான்! அது குறித்து முரண்பட்டு நின்ற எமது தோழர்கள் அதை ஜனநாயக வழிமுறையில் எதிர்கொண்டதால் அதை நாம் வெற்றி கொள்ள முடிந்திருந்தது!

86இன் ஆரம்பப் பகுதியில் தோழர் நாபா எமது மண்ணுக்கு வந்திருந்தார். ஓரிரு மாதங்கள் தங்கியிருந்தார். ரெலோ அமைப்பு பாசிசப் புலிகளால் தடைசெய்யப்பட்ட பின்பு, தோழர் நாபா தமிழ் நாட்டிற்குச் செல்லவேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது!

வடமராட்சி கிழக்கின் தாளையடியில் படகேறுவதற்காக தோழர் நாபா அவர்கள் காத்திருந்தபோது, புலிகள் எங்களைத் தேடி வந்தார்கள்! தோழர் நாபாவுடன் ரெலோ போராளிகளும் சேர்ந்து செல்லவுள்ளார்கள் என்றும், அவர்கள் தோழர் நாபா அவர்களோடு தங்கியிருப்ப தாகவும்..... தாம் எம்மைச் சோதனையிட வேண்டும் என்றும் புலிகளின் தளபதியாக இருந்த கிட்டு தேடி வந்திருந்தார்.

நாங்கள் ஒரு விடுதலை இயக்கம்! எங்களைச் சோதனையிடுவதற்கு உங்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்று நான் கிட்டுவிடம் அழுத்தமாகக் கூறி அனுப்பிவிட்டேன்! நாபா தோழரோடு நான் முரண்பட்டு நின்றிருந்தாலும் அவரை புலிகள் நெருங்கி வர நான் அனுமதித்திருக்கவில்லை! அவரது பாதுகாப்பை நான் உறுதிப்படுத்தி அவரை வழியனுப்பியிருந்ததையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்!

மீண்டும் நான் தோழர் நாபா அவர்களோடு உள் முரண்பாடுகளைப் பேசித் தீர்க்கலாம் எனக் கருதி தமிழ் நாடு சென்றிருந்தேன்! நான் நாபா தோழரை நெருங்கிச் செல்லும் போதெல்லாம் அவருக்குத் தவறான கருத்துகள் ஊட்டப்பட்டன! அதனால் அந்த முயற்சி கைகூடவில்லை என்ற ஆழ்ந்த கவலையோடு அந்த முயற்சியினை இறுதியாக நான் கைவிட வேண்டியிருந்தது!

அன்று கட்சிக்குள் இருந்த முரண்பாடுகள் தீர்க்கப்பட்டிருந்தால் இன்று ஈ.பி.ஆர்.எல். எவ். என்ற மாபெரும் மக்கள் இயக்கம், எமது தேசத்தில் பல வரலாறுகளைப் படைத்திருக்கும்! எமது மக்களின் தலைவிதி முன்னேற்றகரமான ஒரு பாதையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும்! இது குறித்த ஆழ்ந்த கவலை எனக்கு இப்போதும் உண்டு!

அன்று கட்சியைச் சிதைப்பதற்குக் காரணமாயிருந்தவர்கள் இன்று ஓடுகாலிகளாகிவிட்டனர்.

தோழர் நாபாவின் கனவுகளைக் கலைத்துவிட்டனர். அவர்களில் பிரதானமானவர்கள் தோழர் நாபாவை யார் கொன்றொழித்தார்களோ அவர்களோடு கூட்டுச்சேர்ந்து எமது மக்களை ஒடுக்கும் நவீன ஒடுக்குமுறையாளர்களாகிவிட்டனர்.

என்னை ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியிலிருந்து வெளியேற்றியதாகக் கூறி வரும் இவர்கள் இப்போது தாங்களே கட்சியின்றி, கொள்கையின்றி தொங்குதசையாக இருப்பதுதான் இன்றைய வரலாறு! ஓடுகாலிகளாகி விட்டதுதான் இன்றைய வரலாறு!....நாங்கள் இன்றும் தனித்துவமான ஒரு கட்சியின் வழி நின்று எமது மக்களின் அரசியலுரிமைக்காக சுதந்திரமாகப் போராடியும் வாதாடியும் வருகின்றோம்!

எம் இனிய மக்களே! இலங்கை – இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டபோது – நாங்கள் தமிழ் நாட்டில் இருந்திருந்தோம்! உண்மையில் அது ஒரு பொன்னான வாய்ப்பு! அதைச் சரிவர நடைமுறைப்படுத்தியிருந்தால் நாம் இன்று நடைமுறையில் சுயநிர்ணய உரிமையை அனுபவித்திருக்கலாம்!

தோழர் நாபா பதவியை விரும்பாதவர்!.... தான் கொண்ட இலட்சியத்தில் மட்டும் குறியாக இருந்தவர்! அவரது கட்சியின் பெயரால் நடந்த தவறுகள் அனைத்தும் அன்று அவருடன் கூட இருந்தவர்களால் இன்று அவரது தலையில் சுமத்தப்பட்டிருக்கிறது!

இலங்கை – இந்திய ஒப்பந்த நடைமுறை விடயங்களில் எமக்கு முரண்பாடு இருந்திருந்தாலும்..... அப்போது நாம் அதில் சம்பந்தப்படாமல் விலகியிருந்தாலும்.... தோழர் நாபாவும் தோழர்களும் சில விடயங்களை அதனூடாகச் சாதித்திருந்ததையும் நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்!

எமது நட்பு நாடான இந்தியாவை, எமது மக்களின் சார்பாக எமது அரசியலுரிமை விடயத்தில் தலையிட வைத்தது பிரதான பணியாகும்!

ஆனாலும் புலிகள் அந்த அயலக அரசியல் உறவைப் பகைத்துக்கொண்டனர் என்பது வேறு விடயம்!




எமது வரலாற்று வாழ்விடமாக.... தாயக தேசமாக இருக்கும் வடக்கு – கிழக்கு இணைப்பை ஏற்படுத்தி, அதை ஒப்பந்தமாக எழுதிக்கொண்டது இன்னொரு வரலாறு!

ஆனாலும் அந்த ஒப்பந்தம் சுய லாப அரசியல் நோக்கம் கொண்ட பாசிசப் புலிகளாலும், ஈ.பி.ஆர்.எல்.எவ்.வின் கட்டுப்பாடற்ற சிலரது வழிநடத்தலாலும் அதன் செயல்வடிவத்தை இழந்துவிட்டது!

எமது மக்களின் தாயக பூமி வடக்கு – கிழக்கு! எமது அயலக அரசியல் நட்பு நாடு இந்தியா! இவைகள் தோழர் நாபா கண்ட இலட்சியக் கனவுகள்! அவர் நடைமுறைப்படுத்த முயன்ற எமது மக்களுக் கான அரசியல் பணிகள்!

அவரது கனவுகளை ஏற்று நாம் அதற்குச் செயல் வடிவம் கொடுக்கவேண்டிய தேவை எமக்கு உண்டு என்பதை நான் உணர்கின்றேன்!

எமது மக்களின் விடியலுக்காக.... அரசியலுரிமைக்காக.... நாம் தோழர் நாபா அவர்களின் இலட்சியக் கனவுகளை ஏற்று நடப்போம்!

மானுட விடுதலைக்காக.... மனித நேயத்தின் உயிர்ப்புக்காக...ஒடுக்கப்படுகின்ற தேசங்களின் விடுதலைக்காக.... நாங்கள் குரல் கொடுப்போம்! செயல் வடிவம் கொடுப்போம்!

இதுவே தோழர் நாபா அவர்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்!

இறுதியாக நாபா தோழர் கூறும் சில வார்த்தைகளை இங்கு நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்!

“நாம் மக்களுக்குத் தலைமைதாங்க வேண்டிய நிலைமை என்பது வரலாறு எம்மீது சுமத்தியுள்ள கடமையே அன்றி, மாறாக அது எமக்குக் கிடைத்திருக்கும் அதிகாரம் அல்ல!”

ஆம்! அதிகாரப் போட்டிக்காக அன்றி எமது மக்களின் அரசியலுரிமைகளுக்காக....

நீடித்த மகிழ்ச்சிக்காக.... நிரந்தர அமைதிக்காக.... எமது மக்களின் நிம்மதியான

நித்திரைக்காக... நாங்கள் உழைப்போம்!

மானுட விடுதலைக்காக உழைத்த மக்கள் புரட்சியாளன் தோழர் நாபா அவர்களுக்கும் அவருடன் கொல்லப்பட்ட சக தோழர்களுக்கும், தோழியர்களுக்கும் இன்றைய தினத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பாக – ஈ.பி.டி.பி.யின் சார்பாக நான் வீர மரியாதை செலுத்துகிறேன்!

மானுட விடுதலையை நேசிப்பவர்கள் மானுட சமூகத்தின் மரியாதைக்குரியவர்களே!

தேசத்தை நேசிப்பவர்கள் தேசத்தின் விடுதலை வித்துக்களே!

கொன்று பலியாக்கப்பட்ட
தோழர்களின் குருதிச் சுவடுகளை
தேசியம் பூசிய உங்கள்
பாசிசக் கொடியினால் போர்த்துங்கள்!
அழித்தொழிக்க வந்தவர்களே
அழியுங்கள்! அழியுங்கள்!
நாங்கள் பீனிக்ஸ் பறவைகள்!

***மீண்டும் மறுமடலில் சந்திப்போம்!***

***திட்டங்கள் எங்களது!..... தீர்மானம் உங்களது!.....***
***தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!...***
***என்றும் நாம் மக்களுக்காக!....***

பிரியமுடன்
செயலாளர் நாயகம்

**தோழர் டக்ளஸ் தேவானந்தா...**

**நன்றி :– இதய வீணை**

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## இந்திராவின் கேள்வியால் திக்குமுக்காடிய ஜே.ஆர்.

**ஈ.பி.ஆர்.எல்.எவ்.,** புளொட் ஆகியவை இடதுசாரி சிந்தனை செல்வாக்கிற்குட்பட்டவை. எந்தவொரு அரசியல் சித்தாந்தத்தையும் சாராத ரெலோ இயக்கத்திற்கு அரசியல் நோக்கம் எதுவும் இருக்கவில்லை. எனவேதான் 'றோ' உளவு அமைப்பு ரெலோ இயக்க இளைஞர்களை முதலில் ஆயுதப் பயிற்சிக்கென அழைத்துச் சென்றது. அத்துடன் அப்போதிருந்த தமிழீழ இயக்கங்களுக்குள் இந்திய அரசியல் தலைவர்களின் நம்பிக்கையைப் பெற்றிருந்ததும் ரெலோதான். இந்தியா விரும்புவதை எல்லாம் செய்வதற்கு ரெலோ இயக்கம் தயாராகவும் இருந்தது.




தமிழ் நாட்டிலுள்ள சேலம் மலைப் பகுதியில் 200 ஏக்கர் மலைப் பரப்பில் பாரிய பயிற்சி முகாமொன்று 1984ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஈரோஸ் என்றழைக்கப்படும் ஈழப் புரட்சிகர அமைப்புக்கு அப்போது வி.பாலகுமார் தலைவராக இருந்தார். ஈ.பி.ஆர்.எல்.எப்.இற்கு எஸ்.பத்மநாபாவும், புளொட் அமைப்புக்கு உமாமகேஸ்வரனும் தலைமை தாங்கினார்கள். இந்தக் குழுக்கள் அனைத்துமே இந்தியாவில் பயிற்சி பெறுவதற்காகத் தமக்குள் போட்டியிடத் தொடங்கின. தனித் தனியாக இக் குழுக்களை 'றோ' அழைத்துச் சென்று பயிற்சி வழங்கியது. புதுடில்லி விமானநிலையத்திற்குச் சமீபமாகவுள்ள டெஹ்ரா, டன் என்ற இடத்திலுள்ள பல பகுதிகளில் இவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டன. புதுடில்லியிலுள்ள ராமகிருஷ்ணபுரம் என்ற இடத்திலும், உத்தரப்பிரதேசத்திலும்கூட பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஆரம்பத்தில் ஈரோஸுக்கென 200 தமிழ் இளைஞர்களுக்கும், ஈ.பி.ஆர்.எல்.எப்.புக்கென 100 இளைஞர்களுக்கும், புளொட் அமைப்பைச் சேர்ந்த 70 பேருக்கும் ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

புலி இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு இந்தியா ஆயுதப் பயிற்சி அளிக்கும் விடயம் 1984ஆம் ஆண்டின் ஆரம்பகாலப் பகுதியிலேதான் தெரியவந்தது. இதனால் 'றோ' தொடர்பாகவும், இந்தியா சம்பந்தமாகவும் பிரபாகரனுக்குப் பலத்த சந்தேகங்கள் ஏற்பட்டன. ஆனால்,

**இந்த ஐந்து நாடுகளுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் வழியில் புதுடில்லிக்கும் ஜெயவர்த்தனா விஜயம் செய்தார். அப்போது தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியும், அமிர், சிவா, சம்பந்தன் போன்ற கூட்டணித் தலைவர்களும் புதுடில்லியில் தங்கியிருந்தனர். இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவே இவர்கள் புதுடில்லி சென்றிருந்தனர். பிராந்திய சபைகளை ஏன் அமைக்கக்கூடாதென்று இந்திரா காந்தி ஜெயவர்த்தனாவைக் கேட்டார். "இக் கோரிக்கைக்கு மக்களின் ஆதரவை என்னால் பெற முடியாமலிருக்கிறது. தமிழ் மக்களுக்குப் பிராந்திய சபைகளை நாம் வழங்கினால் எமது கட்சிக்கிருக்கும் சகல ஆதரவையும் நாம் இழந்து விடுவோம்" என்று ஜெயவர்த்தனா, திருமதி காந்திக்குப் பதிலளித்தார்**

பின்னர் எப்படியோ 'றோ' வுக்கும் பிரபாகரனுக்குமிடையில் தொடர்புகள் ஏற்பட்டன. இத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்ட விதம் குறித்து இரு வேறு கருத்துகள் நிலவுகின்றன.

ஏனைய தமிழீழக் குழுக்களுக்கு 'றோ' பயிற்சியளிப்பது பற்றித் தெரிந்து கொண்ட தமிழர் தேசியக் கழகத் தலைவர் பழ. நெடுமாறன், இந்திய உளவு அமைப்பையும் பிரபாகரனையும் சந்திக்க வைப்பதற்கான ஏற்பாடுகளைத் தானே செய்து கொடுத்தாரென்று தெரிவித்திருந்தார். ஆனால், பிரபாகரனை 'றோ'வே அணுகியதென்று புலிகள் இயக்கம் குறிப்பிட்டிருந்தது. பெங்களூர் இராணுவ முகாமில் புலி இயக்க

*(அரசியல் தொடர்)*

உறுப்பினர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. பின்னர் புலி இயக்கத்தினர் தமிழ் நாட்டின் பல இடங்களில் பயிற்சி முகாம்களை ஏற்படுத்தித் தமது உறுப்பினர்களுக்குப் பயிற்சியளித்தனர். பழ. நெடுமாறன் 'புரொன்ற்லைன்' என்ற இந்திய சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் தமிழ் இயக்கங்களுக்கு இந்தியாவில் ஆயுதப் பயிற்சி வழங்கப்படுவது பற்றித் தானே முதன் முதலாக அமிர்தலிங்கத்துக்கு அறிவித்ததாகவும், அதுபற்றி அதுவரை அவருக்கு எதுவுமே தெரியாதென்றும் குறிப்பிட்டிருந்தார். இதனை அமிர்தலிங்கம் பின்னர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

அநுராதபுரத்தில் அப்பாவிகளான பௌத்த யாத்திரிகர்கள் மீது புலிகள் நடத்திய தாக்குதல், அமிர்தலிங்கத்தைக் குழப்பத்திலாழ்த்திவிட்டிருந்தது. "பல குடிமக்கள் கொல்லப்பட்ட பின்னரும்கூட இந்த மனிதர் (ஜனாதிபதி ஜெயவர்த்தனா) பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் எவ்வித அக்கறையும் காட்டுகிறா ரில்லை" என்று அமிர்தலிங்கம் சர்வகட்சி மாநாட்டின் பின்னர் ஜூன் மாதம் முதலாம் திகதி பத்திரிகையாளர் ந.சபாரத்தினத்திடம் தெரிவித்திருந்தார். அன்று காலை நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டுக் கூட்டத்தில், விரைவான அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டியதன் அவசியத்தை அமிர்தலிங்கம் வலியுறுத்தியிருந்தார். அத்துடன் "இஸ்ரேலிய புலனாய்வு நிபுணர்களின் உதவி பெறப்பட்டுள்ளதால் இராணுவத் தீர்வு காண விரும்புகிறீர்களா?" என்று தான் ஜெயவர்த்தனாவைக் கேட்டதாகவும், அதற்கு அவர் எவ்வித பதிலுமளிக்காமல் வெறுமனே புன்சிரிப்பைச் சிந்தினாரென்றும் அமிர், கட்டுரையாளர் சபாரத்தினத்திடம் தெரிவித்திருக்கிறார்.

1984ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14ஆம் திகதி ஐந்து நாடுகளுக்கான விஜயமொன்றினை மேற்கொண்டு ஜெயவர்த்தனா இலங்கையை விட்டுப் புறப்பட்டுச் சென்றார். சீனா, ஜப்பான், தென் கொரியா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கான விஜயமே இதுவாகும். அவர் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றேகனுடனும், பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரட் தட்சருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இப் பேச்சுவார்த்தைகளின் பயனாக அதிகளவில் இஸ்ரேலிய

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

இராணுவ அதிகாரிகளும், எஸ்.எ.எஸ். என்றழைக்கப்படும் பிரிட்டிஷ் இராணுவ அமைப்பின் ஓய்வுபெற்ற அதிகாரிகளும் இலங்கைக்குவர வழிவகுத்தது. அதே போன்று அமெரிக்க ஆயுத விற்பனையாளரோடு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளவும், தென் ஆபிரிக்க ஆயுத மற்றும் உபகரணங்களைப் பெறவும் இப் பேச்சுவார்த்தை வழிவகுத்தன.

இந்த ஐந்து நாடுகளுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் வழியில் புதுடில்லிக்கும் ஜெயவர்த்தனா விஜயம் செய்தார். அப்போது தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியும், அமிர், சிவா, சம்பந்தன் போன்ற கூட்டணித் தலைவர்களும் புதுடில்லியில் தங்கியிருந்தனர். இந்தியத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காகவே இவர்கள் புதுடில்லி சென்றிருந்தனர். பிராந்திய சபைகளை ஏன் அமைக்கக்கூடாதென்று இந்திரா காந்தி ஜெயவர்த்தனாவைக் கேட்டார். "இக் கோரிக்கைக்கு மக்களின் ஆதரவை என்னால் பெற முடியாமலிருக்கிறது. தமிழ் மக்களுக்குப் பிராந்திய சபைகளை நாம் வழங்கினால் எமது கட்சிக்கிருக்கும் சகல ஆதரவையும் நாம் இழந்து விடுவோம்" என்று ஜெயவர்த்தனா, திருமதி காந்திக்குப் பதிலளித்தார். தமிழ்த் தீவிரவாதிகளின் பயங்கரவாதச் செயற்பாடுகள், சிங்கள மக்கள் கடினமான நிலைப்பாட்டை எடுக்க வைத்துள்ளது என்றும் ஜெயவர்த்தனா பதிலளித்தார்.

மாகாண சபைகள் அமைப்பது தொடர்பாக பார்த்தசாரதி எழுப்பிய கேள்விகளுக்கும் பதிலளிக்காமல் மழுப்பினார் ஜெயவர்த்தனா. இதற்குப் பதிலாக இரண்டாவது சபையொன்றை அமைக்கும் யோசனையை வெளியிட்டு விவகாரங்களைக் குழப்பியடித்தார் அவர். இரண்டாவது சபை அமைக்கும் யோசனையை அமிர்தலிங்கம் எதிர்த்தார். இது தீர்வு முயற்சிகளிலிருந்து பின்வாங்கும் செயல் என அவர் வர்ணித்தார். இந்திரா காந்தி - ஜெயவர்த்தனா சந்தித்துப் பேசிய சில நாட்களின் பின்னர் யாழ்ப்பாணம் வீரமாகாளி அம்மன் கோவில் முன்றலில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதமிருக்க தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தீர்மானமெடுத்தனர். இதனை வெறும் ஏமாற்று என வர்ணித்த தமிழ் இளைஞர்கள், வன்செயல்கள் மூலமே உரிமைகளை வென்றெடுக்க முடியுமென வாதிட்டனர். இந்த அடையாள உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ள வேண்டாமென்று மக்களைக் கோரும் துண்டுப் பிரசுரமொன்றைத் தீவிரவாதத் தமிழ் இளைஞர்கள் அச்சிட்டு வெளியிட்டிருந்தனர்.

(தொடர்ந்து வடியும்....)




அங்கு அவர் ஒரு எலும்புக்கூட்டின் மண்டையோட்டை திருடிக்கொண்டு வருகிறார். மண்டையோட்டை கொண்டு வந்த குமார் லாபரட்டரியில் வைத்து அதனைப் பொருத்தி சௌபர்ணிகாவை உருவாக்குகிறார். இனி....

**க**ட்டிலில் படுத்தவாறே தூக்கக் கலக்கத்தில் ஸ்டோர் ரூமைப் பார்த்தார். மொத்த எலும்புக்கூடும் தான் பொருத்தி வைத்த மாதிரி பத்திரமாக இருந்தது.

'சௌபர்ணிகா எங்கே போனாள்?' சிந்திப்பதற்குள் குமார் அப்படியே உறக்கத்தில் ஆழ்ந்தார்.

மறுநாள் எதிர்பாராத காரணத்தால் கல்லூரிக்கு விடுமுறை விடப்பட்டிருந்தது.

குமார் தனது அறையில் உட்கார்ந்து லைப்ரரியிலிருந்து எடுத்து வந்த ஒரு புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்தார். ஆவி மற்றும் பிசாசுகளைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த



புத்தகம் அது.

நம்பமுடியாத பல சம்பவங்கள் அதில் தேதிவாரியாகத் தொகுக்கப்பட்டிருந்தன.

இங்கிலாந்தில் ஏதோ ஒருநகரில் உள்ள லெவல் கிராஸிங்கின் முன், இளம்பெண் ஒருத்தி, வரும் வாகனங்களைக் கைகாட்டி நிறுத்திக் கட்டுப்படுத்துகிறாள்.

அதேகணத்தில், பயங்கர வேகத்தில் பாய்ந்து வரும் ரயில் வண்டி லெவல் கிராஸிங்கைக் கடந்து செல்கிறது. இதே அனுபவம் வேறு பலருக்கும்

**எழுதுவது**
**சிவன்**

ஏற்படுகிறது.

செய்தியைக் கேள்விப்பட்ட பத்திரிகையாளர் ஒருவர் இதைப்பற்றி விசாரணை நடத்துகிறார். அது தொடர்பாகப் பழைய பத்திரிகைகளைப் புரட்டியபோது ஓர் உண்மை புலப்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட அந்த லெவல் கிராஸிங்கில் சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன் இளம்பெண் ஒருத்தி கார் ஓட்டிக்கொண்டு வந்தபோது, சிக்னலோ, கேட்டோ இல்லாததால் பாய்ந்து வந்த ரயில்வண்டி, காரில் மோதி அதைத் தூக்கி எறிந்திருக்கிறது. தெறித்து விழுந்த அந்த இளம்பெண்ணின் உடல் பகுதிகளைப் பல்வேறு இடங்களிலிருந்து பொறுக்கி எடுத்திருக்கின்றனர்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகுதான் மேற்படி லெவல் கிராஸிங்கை கடப்பவர்களுக்கு வித்தியாசமான அனுவபங்கள் ஏற்படத் தொடங்கியிருக்கின்றன.

மற்ற மனிதர்களுக்குத் தொல்லை தந்த ஆவிகளின் கதைகளையும் அதில் குறிப்பிட்டிருந்தார்கள்.

மதியவேளை ஹோட்டலுக்குப் போய் சாப்பாட்டை முடித்துக்கொண்டு திரும்பவும் லாபரெட்டரிக்கு வந்த குமாரிடம், அட்டெண்டர் ராகவன்நாயர் ஒரு தகவல் தெரிவித்தார். "சார் உங்களுக்கு ஒரு போன் கால் வந்திருந்தது. நீங்க சாப்பிடப் போயிருக்கிறதா சொன்னேன். அவங்க ஒரு நம்பர் குடுத்திருக்காங்க நீங்க வந்ததும் போன் பண்ணச் சொன்னாங்க."

ராகவன், தன்னுடைய சட்டை பாக்கெட்டிலிருந்து நாலாக மடித்த ஒரு பழைய துண்டுக் காகிதத்தை எடுத்துக் கொடுத்தார்.

குமார் அந்தத் துண்டு காகிதத்தை வாங்கிப் பார்த்தார். அந்த நம்பர் அவருக்குத் தெரிந்ததாக இல்லை.

இருப்பினும் தன்னுடன் பேச விரும்பியது யார் என்று தெரிந்துகொள்ளும் ஆவலுடன் அந்த நம்பருக்கு டயல் செய்தார்.

எதிர்முனையில் ரீசிவரை எடுக்கும் சத்தம் கேட்டது.

"ஹலோ... இந்த நம்பர்லேந்து யாரோ...." குமார் தொடரும் முன்,

"நான்தான் பிரபாகரன் பேசறேன். உன்னோட பழை ..ப்ரண்டுடா. மிலிட்டரியில இருந்து திரும்பி வந்துட்டேன். இரண்டு மூணு நாள் லீவு எடுத்துக்க. ஊர்ப்பக்கம் போயிட்டு வரலாமே?" பிரபாகரன் இடைவெளியே விடாமல் பேசினான்.

ரொம்ப நாள் கழித்து பழைய நண்பனின் குரல் கேட்டதும் குமார் உற்சாகமடைந்தார். ஆனால், ஊருக்குப் போகிற ஐடியா அவருக்கு ஏனோ பிடிக்கவில்லை.

"ஊருக்கா...ம்.. எனக்கு அங்க யார் இருக்காங்க?" குமார் கேட்டார்.

"ஏன் எங்களையெல்லாம் மனுஷனாத் தெரியலையா? நீ ஊருக்கு வந்து வருஷக்கணக்காச்சுன்னு கேள்விப் பட்டேன். வா! நாம ஒரு தடவை கிராமத்துப் பக்கம் போயிட்டு வரலாம். நம்ம ஊர் இன்னும் பழையபடியே தான் இருக்கு. மலையும், மலைமேல் இருக்கிற பகவதி கோயிலும் அப்படியேதான் கிடக்கு வாடா" பிரபாகரன் உரிமையோடு அதட்டினான்.

குமாரின் மனதில் பழைய நினைவுகள் கிளர்ந்தெழத் தொடங்கின.

சிறுவயதில் விளையாடித் திரிந்த கோயில் மைதானம்...

கோயில் நிலைகொண்டிருக்கும் இடத்தைச் சுற்றி நான்கு புறமும் மேற்புறமாகச் சரிந்து உயரும் முக்கூற்றிமலை, காட்டுக் கதளி, மூக்குச்சளி பழமும், முக்கூற்றிப் பூக்கள் ஏராளமாகக் கிடக்கும் பெரிய குன்றுப் பகுதி எல்லாவற்றையும் குமாரின் மனம் அசை போட்டது.

பெரிய பெரிய இரும்பு ஆணிகளை அறைந்திருக்கும் யக்ஷிப்பாலை மரம்.

இரவின் நிழல் விழத்தொடங்கினால் பிறகு யாரும் அங்கெல்லாம்

(வாசனை வீசும்....)

# அல்வா துண்டு யாருக்கு?

'**போ**ய்யா! ஒரே போர் அடிக்குது...' என்று சொல்லிக் கொண்டு நேரம் காலமே இல்லாமல் படுக்கையில் சதா குப்புறடித்துத் தூங்குபவர்கள் நம் நாட்டில் நிறையப் பேர்!

அதுவும் பள்ளி, கல்லூரிகள் எல்லாம் விடுமுறையில் இருக்கிற நேரத்தில் 'வீட்டுல உட்கார்ந்துகிட்டு பயங்கர போரடிக்குது....' என்ற வார்த்தைகளை எந்த வீட்டுக்குப் போனாலும் பஞ்சமே இல்லாமல் கேட்கலாம்!

சரி.... 'போரடிக்குது' என்றால் என்ன அர்த்தம்....? சுருக்கமாகச் சொன்னால் வெறுமனே உட்கார்ந்து கிடப்பது, தூக்கம் வராதபோதும் படுத்திருப்பது போன்ற செயல்களை - நம் மனதுக்குப் பிடிக்காத செயல்களை.... வேறு வழி தெரியாமல் செய்யும்போதுதான் நமக்கு போரடிக்கிறது!

நம் மனதுக்குப் பிடிக்கிற எந்தவொரு காரியத்தை எடுத்துச் செய்தாலும் நமக்கு போரடிக்காது! ஆனால், இந்த விஷயத்தில் நம்மில் பலருக்கு விளங்குவதில்லை! நாம் விருப்பப்பட்டுச் செய்வதற்கென்றே சில வேலைகள் காத்திருந்தால்கூட, அதை நாம் தள்ளிப் போடுகிறோம்!

'உன் மனதுக்குப் பிடித்த ஒரு விஷயம் இருந்தால், அதைச் செய்வதற்கு நேரத்தைத் தள்ளிப்போடாதே...' என்பதை விளக்குவதற்கு ஒரு தமாஷான கதை உண்டு!

வெள்ளைக்காரன், அரேபியன், இந்தியன் இந்த மூவரும் ஒரு நாள் சந்திக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு சின்ன அல்வா துண்டு கிடைக்கிறது. மூவரும் பங்கு போட்டுக் கொள்ள முடியாத அளவுக்கு மிகச் சின்ன அல்வா துண்டு அது!


அதனால், அவர்கள் ஒரு முடிவுக்கு வருகிறார்கள். 'நாம் இப்போதைக்கு இந்த அல்வாவை ஒரு பாத்திரத்தில் மூடிவைத்துவிட்டு, இன்றிரவு படுத்துத் தூங்குவோம். மூவரில் யாருக்கு அற்புதமான சிறந்த கனவு வருகிறதோ, அவருக்கே இந்த அல்வா துண்டு....' என்று தீர்மானித்துக் கொள்கிறார்கள்.

மறுநாள் காலையில் மூன்று பேரும் தாங்கள் முதல் நாள் ராத்திரி கண்ட கனவைப் பகிர்ந்துகொள்ள, அல்வா இருக்கும் பாத்திரத்தைச் சுற்றி உட்காருகிறார்கள்.

முதலில் வெள்ளைக்காரன் ஆரம்பிக்கிறான். "நேற்றிரவு என் கனவிலே கடவுள் வந்தார். என்னை அவர் தன் பூந்தோட்டத்துக்குள் அழைத்துக்கொண்டு போய் பல அற்புதங்களைச் செய்து காண்பித்தார்...." என்றான்.

அடுத்து, அரேபியன் தான் கண்ட கனவைச் சொன்னான் - "நேற்றிரவு என் கனவிலும் கடவுள் வந்தார். ஆனால், அவரை நான் என் பூந்தோட்டத்துக்கே அழைத்துப்போய் அவருக்கே பல அற்புதமான விஷயங்களைக் காண்பித்தேன்..."

கடைசியாக இந்தியன் பேச ஆரம்பித்தான். "நேற்றிரவு என் கனவிலும் கடவுள் வந்தார். ஆனால், நாங்கள் பூந்தோட்டத்துக்கு எல்லாம் போகவில்லை! கடவுள் என்னைப் பார்த்து, 'அடேய் முட்டாளே.... எதிரிலேயே இவ்வளவு இனிமையான அல்வா துண்டை வைத்துக்கொண்டு கனா கண்டு கொண்டிருக்கிறாயே.... முதலில் தூக்கத்தை விட்டொழி! உடனே எழுந்து போய் அந்த அல்வா துண்டைச் சாப்பிடு!' என்று கடுங்கோபத்துடன் கட்டளையிட்டார். கடவுள் சொல்வதை நாம் மீறுவது சரியாகுமா? அதனால் நானும் மறுபேச்சில்லாமல் எழுந்துபோய் அல்வாவைச் சாப்பிட்டுவிட்டேன்..... என்று சொன்னான்.



மற்ற இருவரும் திடுக்கிட்டுப் போய்ப் பாத்திரத்தைத் திறக்க.... உள்ளே அல்வாவைக் காணோம்!

இந்தக் கதை சொல்லும் செய்தியை மட்டும் எடுத்துக் கொள்வோம். எந்த ஒரு வேலையைச் செய்யும்போது நமக்குச் சந்தோஷம் கிடைக்கிறதோ, அந்த வேலையை நாம் தள்ளிப்போடவே கூடாது! இந்த வாக்கியத்தைக் கொஞ்சம் இப்படியும் திருத்திச் சொல்லலாம். நீங்கள் எந்த வேலையைச் செய்தாலும் அதைச் சந்தோஷத்தோடு முழு ஈடுபாட்டோடு செய்யுங்கள். 'போரடிக்கிறது' என்ற வார்த்தை உங்கள் அகராதியிலிருந்து தானாகவே மறைந்துவிடும்!

உங்களுக்கு நீச்சல் தெரியாது என்றால் நீச்சல் கற்றுப் பாருங்கள். படகில் போனதில்லை என்றால், படகில் போய்ப் பாருங்கள்! அல்லது ஏதாவது இசைக்கருவி வாசிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்! உங்களுக்குத் தெரியாத தெலுங்கு, மலையாளம் போன்ற புதுமொழிகளைக் கற்றுக்கொள்ளுங்கள்! இதெல்லாம் கஷ்டம் என்றால், குறைந்தபட்சம் நீங்கள் பல ஆண்டுகளாகச் சந்திக்காத ஒரு பழைய நண்பரையாவது போய்ச் சந்தியுங்கள்!

ஜென் மதத் துறவி ஒருவர் மரணப் படுக்கையில் கிடக்கிறார். அவரைச் சுற்றிலும் கவிழ்ந்த தலைகளுடன் நிற்கும் சீடர்கள், 'குருவே.... நீங்கள் எங்களுக்கு உபதேசிக்கும் கடைசி போதனை என்ன....?' என்று கேட்கிறார்கள். ஜென் துறவி இவர்களுக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், 'எனக்கு ஒரு துண்டு இனிப்பு கொண்டுவாருங்கள்...' என்று கேட்கிறார். இனிப்பு வருகிறது! அந்தக் கடைசித் தருணத்திலும் ஜென் துறவி அந்த இனிப்பை, ஒரு குழந்தையைப் போலப் பார்த்து ரசிக்கிறார். பிறகு, அதைக் கொஞ்சம் கொஞ்சமாக ருசித்து ருசித்துத் தாளம் போட்டுக்கொண்டே சாப்பிட்டுவிட்டு இறந்துவிடுகிறார்! இனிப்புச் சாப்பிடுவது என்ற ஒரு சாதாரண காரியத்தைச் செய்யும்போதுகூட, அதை முழு ஈடுபாட்டோடு ரசித்து, ருசித்துச் செய்யவேண்டும் என்பதே ஜென் துறவி, தன் சீடர்களுக்குச் சொல்லாமல் சொன்ன கடைசி போதனை!

வேலையே இல்லாமல் வீட்டில் சும்மா உட்கார்ந்திருப்பவர்களுக்கு மட்டும்தான் போரடிக்கும் என்பதில்லை! செக்குமாடு மாதிரி ஒரே மாதிரியான வேலையை வருஷக் கணக்காகச் செய்துகொண்டிருக்கும் நபர்களுக்கும் போரடிக்கும்.

எந்த ஒரு மனிதனுக்கும் நான்கு வகையான வாழ்க்கை உண்டு. ஒன்று - தனிப்பட்ட வாழ்க்கை. அதாவது, Intimate Life! அடுத்தது, குடும்பம். மூன்றாவது, தொழில் சம்பந்தமான வாழ்க்கை! நான்காவது, சமூக வாழ்க்கை! ஒருவர் இந்த நான்கு வாழ்க்கைகளையுமே வாழ்ந்தாக வேண்டும்.

வீட்டில் வரவேற்பறை, சமையலறை, படுக்கையறை என்று மூன்று அறைகளையும் அற்புதமாக அலங்கரித்துச் சுத்தமாக வைத்துவிட்டு, டாய்லெட் இருக்கும் அறையை மட்டும் சுத்தம் செய்யாமல் இருந்தால் என்ன ஆகும்....? டாய்லெட்டின் வாடை வீட்டின் மற்ற அறைகளுக்கும் பரவிவிடும் இல்லையா.....? அதேமாதிரி நான்கு வாழ்க்கைகளில் ஏதாவது ஒரு வாழ்க்கை பாழ்பட்டாலும் சரி..... மொத்த வாழ்க்கையுமே அருவருப்பாகி, அர்த்தமற்றதாகிவிடும்.

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.


குறுக்கெழுத்துப் போட்டி இல. 124க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

மு. மபாஸ், 174, முகாந்திரம் வீதி, ஏறாவூர் - 6A.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. த. யோகராசா, பொதுநூலகம், கொடிகாமம்.
2. பா. செல்வ ராணி, பொதுநூலகம், சங்கானை.
3. சி. இராஜேந்திரா, 33 5/1, 42ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06.
4. எஸ்.எம். பாருக், 180, மன்னார் வீதி, புத்தளம்.
5. கே. கணேஷன், வார்ட் 27, அரச பேதானா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
6. உ. றினாஸ், 187/A கிராம நீதிமன்ற வீதி, ஏறாவூர் - 06.
7. க. நிரஞ்சன், 22, பிரதிபிம்மராம வீதி, களுபோவில.
8. ஏ. சந்தியாகோ, அசோகா வித்தியாலயம். கண்டி.
9. ஹாலித் மீராமுகைதீன், இல. 21, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர் - 03ஏ.
10. நா. லுபோஜிதா, 209, மார்கண்டு வீதி, பாண்டிருப்பு - 01, கல்முனை.

### குறுக்கெழுத்துப் போட்டி 126



### இடமிருந்து வலம்

1. கமலஹாசன், ஸ்ரீப்பிரியா நடித்த சர்ப்பத் திரைப்படம்.
3. தோழி.
6. சிறுவன் என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது).
12. சிதம்பரம்
15. அம்பு (திரும்பியுள்ளது)
18. கலப்பு உலோகம் ஒன்று

### மேலிருந்து கீழ்

1. வர்ணங்களில் ஒன்று
3. அவை
4. பரசுராம், வின்னர் திரைப்படங்களின் நாயகி (குழம்பியுள்ளது).
6. மயக்கம்/மோகம் (குழம்பியுள்ளது).
12. ஓர் ஆயுதம் (குழம்பியுள்ளது).
15. பெண் மான் (தலைகீழ்).

### குறுக்கெழுத்துப் போட்டி 124 விடைகள்



### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 28.06.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-126
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# இந்தப் புன்னகை என்ன விலை?

அந்த பிரமாண்டமான மாளிகையின் தனியறையில் சின்னத்துரை ஒய்யாரமாகக் கால்மேல் கால் போட்டவாறு விலையுயர்ந்த நாற்காலியில் அமர்ந்திருக்க, அவர் எதிரே ஒன்றுமே பேசாமல் நின்றிருந்தான் வசந். சின்னத்துரை - வசந்தை ஏளனமாகப் பார்த்தார்.

"இங்கு பாரு தம்பி. வயசுல பெரியவன். வசதியில உயர்ந்தவன் சொல்லுறேன். சுவேகாவோட தொடர்பை இன்னையிலயிருந்து விட்டுடு. நான் உட்கார்ந்திருக்கிற நாற்காலியோட விலை கூட இருக்காது உன்னோட மாச சம்பளம். என்னோட மகளோட ஒரு நாள் பொக்கற் மணியே பல ஆயிரம் இருக்கும். தெரிஞ்சோ தெரியாமலோ என் மகள் உன்னோட பழக்கம் வச்சிட்டா. அதுக்காக எவ்வளவு பணம் வேணும்னு சொல்லு... கை நிறைய அள்ளித்தாரேன்! ஆனா நீ அவளை கை கழுவிடணும். சமாதான முறையிலத்தான் இப்போ பேசுறேன். சாத்தியப்படாட்டி சத்தியமா நான் மனுஷனா இருக்கமாட்டேன். என்ன சொல்லுறே...?"

வசந் பேசாமல் இருந்தான்.

"என்ன பேசமாட்டியா....?"

"சுவேகா என்ன சொல்லுறா?"

"அவ சின்னப் பொண்ணு. எது வேணும்னாலும் பேசுவா. அவளுக்கு அமெரிக்காவுல மாப்பிள்ளை பார்த்தாச்சி..... உன்னோட முடிவு என்ன?

அப்போது சுவேகா அந்த அறைக்குள் நுழையவே சின்னத்துரை சட்டென தன்னை சுதாகரித்துக் கொண்டார்.

"வாம்மா...இங்க பாரு, உன்னைப் பார்க்கத்தான் வசந் தம்பி வந்திருக்கு.... உட்காரச் சொன்னா மாட்டேன்னுது. ரொம்ப மரியாதை...."

"வாங்க வசந்...மண் குடிசையில இருக்கிற நான் மாளிகைப் பக்கமெல்லாம் வரமாட்டேன்னிங்க. இப்போ மட்டும் எதுக்கு வந்திங்களாம்....?"

"வந்து.... உங்க அப்பாதான்...."

"ஆமாம்மா.... நான்தான் வரச் சொன்னேன். உன்னோட தெரிவு எப்படின்னு பார்க்கணும். இல்லையா. தம்பி நீங்க இருந்து சாப்பிட்டுத்தான் போகணும். சரிதானா?"

சின்னத்துரை அந்த அறையை விட்டு வெளியேற இப்போது வசந்தும் சுவேகாவுமே அங்கே இருந்தார்கள். "வசந்..... முதன் முதலா எங்க வீட்டுக்கு வந்திருக் கீங்க" "வாங்க உட்காருங்க...."

வசந் - எந்தவிதமான சலனமுமில்லாமல் அவள் முகத்தை ஏறிட்டான்.

"சுவேகா...உன் அப்பா வரச்சொல்லித்தான் இங்கே நான் வந்தேன். நம்மோட காதலுக்கு அவர் விலை பேசினாரு...."

"என்ன சொல்லுறீங்க...அப்பாவா அப்படி பேசினாரு...ஆமா அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க...."

"நான் ஒண்ணும் சொல்லலை. ஆனா ஒரு விஷயம் புரிஞ்சிக்கிட்டேன். தண்ணியில இருக்கிற மீன் பளபளப்பா இருக்கேன்னுறதுக்காக தரைக்குப் போக ஆசைப்படக் கூடாது. நான் ஏழைதான். ஆனா கோழையில்ல. நான் யாருக்கும் பயப்படமாட்டேன். உங்களோட அந்தஸ்து, கௌரவமெல்லாம் என் கால் தூசிக்கு சமம். நான் உன் மேல வச்சது உண்மையான காதல். அதுக்கு விலை கிடையாது. ஆனா உனக்கு நான் இல்லாட்டியும் யாராவது அமெரிக்கா மாப்பிள்ளை கிடைப்பான். என்னை மாதிரி ஏழை எளியவங்களுக்கு விரலுக்கேற்ற வீக்கம்தான் இருக்கணும். எத்தனையோ பொண்ணுக கல்யாண வயசு வந்தும் வசதி வாய்ப்பில்லாம, கண்ணீரோட கலங்கி நிற்கிறாங்க. அவங்கள்ள யாராவது ஒருத்தருக்கு வாழ்வு குடுத்தா நிச்சயம் என் வாழ்வும் மலரும். ஆனா, பஞ்சு மெத்தையில் புரண்டு பாலும் பழமும் சாப்பிடுற உன்னை மணந்து



-பாலா.சங்குபிள்ளை, ஹட்டன்.

உன் அப்பாவோட கோபத்துக்கு நான் ஆளாகிறது ஒருபுறமிருக்க, ஏழை என்னால் உன்னை வச்சி வாழ்நாள் முழுதும் சோறு போட முடியாது. காரு பங்களான்னு இருக்கிற உனக்காக என் காதலை கூறு போட முடியாது. தயவு செஞ்சி என்னை மறந்துட்டு நீ உங்க அப்பா பார்த்திருக்கிற அமெரிக்க மாப்பிள்ளையையே கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா இரு. என்னை ஆளை விடு!"

வசந் - படபடவென பட்டாசு வெடித்ததைப் போல பேசிவிட்டு அந்த அறையை விட்டு வெளியே வந்தான்.

சின்னத்துரை வாசலில் ஒரு கனமான பெட்டியுடன் நின்றிருந்தார்.

"ரொம்ப சந்தோஷம் தம்பி. என்னோட வேலையை ரொம்ப சுலபமாக்கிட்டே. இந்தா இதுல இருபது இலட்சம் இருக்கு. இதை வச்சிக்கோ. நாளைக்கி காலையிலேயே நான் அமெரிக்கா போறேன். மாப்பிள்ளையை நிச்சயம் பண்ணிட்டு வரப் போறேன்.... உனக்கும் திருமண அழைப்பு வரும். சரிதானே! வசந் - அந்தப் பெட்டியை வாங்கிக்கொண்டு எதுவும் பேசாமல் மௌனமாக நடந்தான்.

அந்த இன்டர்சிட்டி பஸ் கொழும்பை நோக்கி வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. அதில் புன்னகையுடன் வசந் அமர்ந்திருக்க, புதுமணப் பெண்ணுக்கேயுரிய நாணத்துடன் முகம் செம்மையாகியிருக்க அவன் பக்கத்தில் அமர்ந்திருந்தவள் சுவேகாவேதான்!

"வசந் அன்னைக்கி நீங்க பேசினதைக் கேட்டு உண்மையிலேயே நான் அதிர்ச்சியாயிட்டேன். ஆனா எங்க அப்பாவை ஏமாற்ற நீங்க நடத்திய நாடகம்னு அப்புறமாத்தான் தெரிஞ்சிக்கிட்டேன்...."

"ஆமா, உங்க அப்பா மாதிரி பணக்காரங்களையெல்லாம் தனி ஆளா நின்னு எதிர்க்க முடியாது. அவரு குடுத்த இருபது லட்சத்துல பதினைஞ்சு லட்சத்தை வசதி வாய்ப்பு இல்லாம திருமணத்துக்காக ஏங்கி நிற்கிற ஏழைப் பொண்ணுங்க பத்துப் பேருக்கு பகிர்ந்து குடுத்துட்டேன். இதுல நாலு லட்சம் இருக்கு. ஒரு பெட்டிக் கடை போட்டு நாம பிழைக்க முடியும்னு நம்புறேன். எப்புடி என்னோட திட்டம்...?

"ஆக....என்னோட புன்னகைக்கு நீங்க எங்க அப்பாகிட்ட வாங்கின தொகை இருபது லட்சம் சரிதானா?"

வசந் கலகலவென சிரித்தவாறு அவள் கன்னத்தில் தட்ட அவள் வெட்கத்துடன் அவன் மடியில் சாய்ந்தாள்.

(யாவும் கற்பனை)

# பட்டுச் சேலை

பாலு வேலைக்குப் போவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். அழகிய மனைவி தேவி சாப்பாட்டுப் பார்சலை கணவனிடம் கொடுத்துவிட்டு "அக்கம் பக்கத்தவர்கள் எல்லோரும் பெருநாளுக்குப் புதுப்புது உடுப்பு வகைகள் எடுத்து விட்டார்கள்.



-இரா.கோணேஸ்வரன், நுவரெலியா

நானும் எடுக்க வேண்டும். உடனே பணத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள் டார்லிங்" என்று கூறியவாறு அன்புக் கணவனை வழி அனுப்பி வைத்தாள். அன்பு மனைவியின் ஆசையினை எப்படியும் நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று சிந்தித்தவாறு வேலைத் தலத்தை அடைந்தான் பாலு.

மாலை ஐந்து மணிக்கு வந்து சேரவேண்டிய கணவன் ஆறு மணி தாண்டியும் வராததையிட்டு கவலையுடன் அவன் வரும்வரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் தேவி. கதவு தட்டும் சத்தம் கேட்டது. அவள் சென்று கதவைத் திறந்தாள்.

அங்கே அவள் கணவனுடன் ஒன்றாக வேலை செய்யும் சசி நின்று கொண்டிருந்தான். "பாலு ஏன் இன்னும் வந்து சேரவில்லை" என்று பதற்றத்துடன் கேட்டாள் தேவி. அவசர வேலை ஒன்றின் காரணமாக பாலுவை மனேஜர் வெளியூருக்கு அனுப்பி இருக்கிறார் எனவும் நாளைக்குத் தான் வீட் டுக்கு வருவார் என பாலு தன்னிடம் சொல்லி அனுப்பியதாகவும் சசி சொன்னான். இதைக் கேட்ட தேவிக்கு கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

கணவனின் நண்பன் என்பதாலும் கணவனின் தகவல் சொல்ல வந்த காரணத்தினாலும் தேவி, சசியை வீட்டினுள் அழைத்து தேநீர் கொடுத்தாள். தேவியின் அழகில் மெய்மறந்தான் சசி. வீட்டில் வேறு யாரும் இல்லை என்பதையும் அறிந்து கொண்டு தேவியிடம் நெருக்கினான். தேவி இடம் கொடுக்கவில்லை. "பாலுவிடம் சொல்லுவேன் வெளியே போ" என்றாள். சசி தன் சட்டைப் பையிலிருந்து இரண்டாயிரம் ரூபா நோட்டுகளை எடுத்து தேவியிடம் கொடுத்தான். அவள் கண்களில் பட்டுச் சேலை மின்னியது. தாராளமாக சசிக்கு இடம் கொடுத்தாள்.

வெளியூர் சென்ற பாலு வேலைகளை முடித்துக்கொண்டு தன் இனிய மனைவிக்கு பொருட்களை வாங்கிக்கொண்டு வீடு திரும்பினான்.

"ஏன் என் அன்பே இரவு தனிமையில் தவிக்க விட்டுவிட்டேன் என்று என்னுடன் கோபமா" என்று செல்லமாக தேவியிடம் கேட்டான் பாலு. 'இல்லை' என்பது போல தலையாட்டினாள் தேவி. "அதுசரி, சசியிடம் நான் இரவைக்கு வரமாட்டேன் என்று சொல்லி அனுப்பியிருந்தேன். அத்துடன் ரூபா இரண்டாயிரம் அனுப்பியிருந்தேன். கொடுத்தானா? என்று பாலு கேட்ட போது, முள்ளில் விழுந்த பட்டுச் சேலையானது அவளின் இதயம்.

# கறுப்புக் கொடி

விடிந்தது, என்பதை ஒளி அறிவித்தது. எழுந்தேன்....எழுந்து பின் தூங்கி மீண்டும் எழுந்து....மரணிக்கும் வரை தொடர்கதைதான்....காலச்சுழலில் - கரங்களிலே பந்தாகச் சுழலும் வாழ்க்கைச் சுழலில் - சமூக ஏற்றத்தாழ்வுகளின் சாம்ராஜ்யம் வெற்றிக் களிப்போடு கொடிகட்டி வீற்றிருந்தது. அடிமை எனும் அலையில் சிக்கித் தத்தளிக்கும் சிறு துரும்புகளாய் எத்தனை காலம் வாழ்வார்கள் எனும் எண்ணத்தால் மனம் சமூகத்தைப் பார்த்தபடி மூசாப்பாய்.....கருமுகில்கள் முகிழ்ந்தபடி.. வழமைக்கு மாறாக உடல் ஜீவனிழந்திருந்தது என்றாலும் மனம் போராட்டம் நிகழ்த்தி



தனக்குத்தானே தர்க்கித்தபடி....ஓர் உண்மை மட்டும் புரிகிறது. ஞானம் என்கின்ற மரத்தின் வளர்ச்சிக்கு ஊற்றப்படும் நீர்தான் துயர் என்று.

தெளிவு தேவைப்பட்டது. அன்றோர் காலத்தில் வறண்டிருந்த என் சிந்தனை நிலத்தில் துளித்துளியாய் மழை நீராய் புதிய சிந்தனைத் தூவல்களைத் தூவி என்னை விளை நிலமாக்கிய அந்த மகாமேதை மகாகவி பாரதியின் கவிதைகளை மீண்டும் புரட்டுகிறேன். துயரம் ஓடிற்று.

புதிய மலர்ச்சியுடன் புறப்படுகிறேன்...அவசரமாய் நடந்த நான்...வீதி ஓரத்தே அசுத்தக் குழி ஒன்று நாற்றமெடுத்தபடி நடமாடுவதாய் உணர்கிறேன். சற்றே திரும்பிய என் கண்களும் இதயமும் அங்கேயே நிற்கின்றன. தினமும் இதே வழியில்தான் பயணிக்கிறேன். ஆம் தினமும் காணும் உருவம்தான். ஒரு சதத்திற்கும் உதவாத ஒன்றாய் நின்ற ஒன்று உள்சிந்தனையில் வீழ்ந்து ஜீவன் பெறுகிறது. ஆழமாய் மிக மிக ஆழமாய்...சிந்தனையுடன் பார்க்கிறேன். பத்தடி தூரத்தில் வந்தாலே இன்னும் பத்தடி தூரம் ஓடும் கூட்டத்தில் நானும் கூட....சீ....ச்....சி நினைத்ததில் வெட்கினேன். இன்று ஒரு முறை பார்த்த மனம் ஆறுதல் படவில்லை. இன்னும் ஓர் முறை பார்க்கிறேன். உலக அசுத்தத்திற்கான கின்னஸின் இடத்தைப் பிடிக்கலாம். மனம் மறுமுறை மீண்டும் பார்க்க வைத்தது.

இவனுக்கு ஊனமா? இல்லை, இல்லை. கை கால் எல்லாம் நன்றாக இருக்கிறதே....ஒரு வேளை மனதில் ஊனம்...பைத்தியமா? அப்படியும் தெரியவில்லை. பின் ஏன்? ஏன்? ஏன்? இப்படி? தன்னைச் சுத்தப்படுத்தவே சோம்பிப் போன அவனால் எங்கே எங்கே எங்கே அந்த உயரிய உழைப்பின் மகத்துவம் தெரியப் போகிறது? ஒன்றுமே உணராத அவனால் பசி....அதை மட்டுமே உணர முடிகிறதே. பிச்சை இறஞ்சல்களில் வளர்க்கப்பட்ட உடல். தலைமுடி கயிறு திரிக்கப்பட்டும் பற்கள் தார் பூசப்பட்டும் தோல் சாணி மெழுகப்பட்டும் உடை....உடை....ஒப்புவமை சொல்லத் தெரியவேயில்லை.

பிளாட்போர இரவுகளில் நாயை அணைத்தபடி ம்.....சமத்துவம் தெரிகிறது. ஆனால் சிந்தனை மட்டும் கழுமரத்தில் ஏறிவிட்டது போலும். அதுதான் இப்படி....இப்படியும் வாழலாம் என்று பகல் நேரம் அந்த நாயின் ஆட்சியில்...நாய் உயர்திணையாய் அவன் அ'.றிணையாய் ஆம்....ஆம்...நாயை விடக் கேவலமாய் மிகக் மிகக் கேவலமாய் அருவருக்கும் பார்வைகளும் கல்லடியும். நாயிற்கும் மனிதனுக்கும் பேதம் தெரியா அசிங்கங்கள்....பிறப்பவன் இறப்பான் அதுவரை ....அசிங்கப்பட்டு...அசிங்கப்பட்டு...அப்பப்பா? சிந்திப்பவனுக்குத்தானே அசிங்கங்கள் தெரிகின்றன. அதுவரையில் அவன் தப்பினான்; சந்தோசம்.

இவன் ஏன் இப்படி? விடை காணாவிடின் தலையே வெடித்து விடும் போல....உணர்கிறேன். அங்கங்கள் சீராய் உள்ளது. அங்கவீனனும் இல்லை. பார்வைக்கு பித்தனும் இல்லை. உழைத்து...சுத்தமாய் வாழலாமே? இவன் இறஞ்சி இறஞ்சியே பழகிவிட்டான். உழைத்து உழைத்தே பழகியது போல....பெண்கள் அடிமைப்பட்டு அடிமைப்பட்டே பழகியது போல முதலாளிகள் சுரண்டிச் சுரண்டியே பழகியது போல..... இவன் இறஞ்சி இறஞ்சியே

-ஜெ.பாலரஞ்ஜனி, ஹட்டன்

பழகிவிட்டான். காயகல்பங்களை உட்கொண்டு இளமை காக்கத் துடிக்கும் கூட்டத்திடையே இதோ இவன் மனத்தளவில் ஊனமாய்...நின்று அவன் காட்டும் கறுப்புக் கொடி. ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த இச் சமூக சாம்ராஜ்யத்தின் முன் தனது கோபத்தை நடமாடும் பிணமாய்க்காட்டும் ரூபம்...சமத்துவமற்ற இச்சமூகம் இயலாமையில் சிக்குப்பட்ட எவரைத்தான் விட்டு வைத்தது? அவனாவது பரவாயில்லை; அவனளவில் கறுப்புக் கொடி காட்டி இச் சமூகத்தின் மீதான கோபத்தைக் காட்டி விட்டான்...என்மட்டில் விடை கிடைத்தது. அவ்வளவுதான். நானும் மனது நசிய இந்த நீண்ட பயணத்தில்.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

## உண்மை உயர்வு தரும்!

**ஒரு** கர்வம் மிகுந்த மனிதன் வாழ்க்கையில் இனிமேலும் கற்றுக்கொள்ளுவதற்கு ஒன்றும் இல்லை என்று நினைப்பான். கண்மூடித்தனமான எண்ணங்களால் ஆபத்துக்களை ஏற்படுத்தும் ஒரு மனிதன், தன்னுள்ளே இருக்கும் தவறான அபிப்பிராயமுள்ள எண்ணங்களையும், தவறான தகவல்களையும் எவ்வளவு எளிதில் எடுக்கமுடியுமோ அவ்வளவு எளிதில் எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக உண்மையான நல்ல தகவல்களை தனக்குள் எடுத்துக் கொண்டால், அவைகள் அவனுடைய சொந்த வாழ்க்கையிலும், பொருத்தமான மாற்றங்கள் ஏற்பட உதவி புரியும். கற்றுக் கொள்வதற்கு பல வழிமுறைகள் உள்ளன. அவைகள் மூலம் ஒருவர் நன்கு கற்றுக்கொண்டும் அவற்றை பயன்படுத்திக் கொள்ளவும் முடியும். சுருக்கமாகக் கூறினால், இந்தக் கற்றல் முறையில் ஒரு ஆசிரியர் மற்றும் எந்த ஒரு பொருளைப் பற்றி கற்றுக் கொள்கிறோமோ அது தொடர்பான தகவல்கள் நிறைந்த புத்தகங்கள் ஆகியவைகள் உள்ளடங்கும். தனக்குள்ளே இருக்கும் தவறான தகவல்களைப் பிரித்தெடுக்கும்போது, இப்போதைய நிலையில் எவை எல்லாம் உங்களுக்கு உண்மை என்று தோன்றுகிறதோ அதன் அடிப்படையில் அவற்றுள் இருக்கும் சரியில்லாதவைகளை மாற்றிவிட வேண்டும். இந்த வழிமுறையின் விளைவாக உறுதியுடனான வளமுடன் கூடிய பிரகாசமான வெகுமானம் பெறும் வகையிலான ஒரு அனுபவம் உருவாகும். கடுமையான முட்புதர்கள் நிரம்பிய பாதைகள் மூலமாக கரடுமுரடான இடங்களைக் கொண்ட மலையினை ஏறுவது போல் அல்ல! ஆனால், அவற்றையெல்லாம் கடந்து, அம்மலையின் உச்சிக்குச் சென்று, பரந்து கிடக்கும் ஒரு புதிய உலகத்தைக் காண்பது போலாகும்.

**- 'மகிழ்ச்சி' எனும் நூலிலிருந்து.**

✉ **ஜே.வி.பி.யின் எதிர்காலம் இனி என்ன?**

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

பொதுக் கட்டமைப்பு அல்ல அவர்களது பிரச்சினை. ஒரு அரசாங்கத்தை நடத்த இன்னும் அவர்கள் பக்குவம் பெறவில்லை என்பதைத்தான் காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

✉ **தனுஷ் என்னவானார்?**

-எஸ்.ராஜு, கொழும்பு - 12.

அண்ணனின் 'புதுப்பேட்டை'யை நம்பியிருக்கிறார்.

✉ **நம்மால் ஏற்றுக்கொள்ளவே முடியாது என்று நினைத்திருந்த நிலைமைகளையும் சகித்துக்கொண்டு தொடரவேண்டியிருப்பதுதானா வாழ்க்கை?**

-மணிவேல் ருத்ரா, மாத்தளை.

ராஜசுந்தரராஜன் என்ற கவிஞரின் அருமையான கவிதை ஒன்று அதைத்தான் சொல்கிறது:

"அப்படி ஒரு நிலைமை வரும் என்றால்
அக்கணமே வாழோம் என்றிருந்தோம்
வந்தது.
அப்படியும் வாழ்கிறோம்.
நம்மோடு நாம் காண
இத் தென்னைகள்
தம் மேனி வடுக்கள் தாங்கி."



விக்ராந்த் – லக்ஷ்மிராய்
கற்க்கக் கசடற

✉ **தங்களுக்கு எதிரானவர்களாக இருக்கலாம் என்ற சிறு சந்தேகத்துக்குரியவர்களைக் கூட கொன்றழித்துச் சமூகத்தைச் சுத்தப்படுத்தி வருகிறார்கள்.....இது கண்டும் 'தமிழ் மனிதங்கள்' மௌனமாயிருக்கிறதே...எப்படி?**

-எம்.முருகநேசன், வவுனியா.

மனிதப் பண்பிலிருந்து விலகி ஓடச் செய்கிற பய உணர்வின் ஆற்றல்!

✉ **சில கொலைகள் மட்டுமே பிரபலப்படுத்தப்பட்டு நியாயம் கேட்கப்படுவதாகவும், பல கொலைகளை தமிழ்ச் சமூகம் கழுக்கமாக மறைத்துவிடுகிறது என்றும் கூறுகிறீர்கள். ஆனால், பத்திரிகையாளர் சிவராம் போல எல்லோருக்கும் தெரிந்த ஒருவர் கொல்லப்படும்போது, பலராலும் அது பேசப்படுவது இயல்புதானே?**

-வி.தனபால், மட்டக்களப்பு.

சரி, உங்கள் வழிக்கே வருகிறேன். திருகோணமலை மக்களால் நகரசபைத் தலைவராகத் தெரிவு செய்யப் பட்டவர்தானே சூரியமூர்த்தி? அவரது பல நடவடிக்கைகள் திருமலையில் தமிழ் மக்கள் நலன்கருதி மேற்கொள்ளப் பட்டிருந்தன என்பதும் உண்மைதானே? அவரது கொலையை ஏன் இந்த நியாயவான்களெல்லாம் அமுக்கி விட்டார்கள்? ஏன் பேசப் பயப்படுகிறார்கள்?

✉ **கற்க கசடற எப்படி?**

-எம்.எம்.எம்.மிஹ்லார், குருநாகல்.

ஜெய்சங்கர், ரவிச்சந்திரன் காலத்துப் படம்! ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டிய இயக்குனர்கள் பட்டியலில் ஆர்.வி.உதயகுமார் பெயர் விடுபட்டுப் போய்விட்டது. ஞாபகப்படுத்தியிருக்கிறார். சேர்த்துக்கொள்ள வேண்டும்.

✉ **வானொலியில் பேப்பர் செய்திகளை வாசிக்கிறார்களே! கேட்பதுண்டா?**

-பா.அமிர்தலிங்கம், கொழும்பு - 11.

எப்போதும் கேட்கக் கிடைப்பதில்லை. கடந்த போயா தினத்தன்று காலையில் கேட்டபோது, 'புளொட் உறுப்பினர் வவுனியாவில் சுட்டுக் கொலை', 'ஈ.பி.டி.பி உறுப்பினர் குத்திக் கொலை' போன்ற முன்பக்கச் செய்திகளைக் கவனமாகத் தவிர்த்துவிட்டு கலகலப்பாக வாசிக்கிறார்கள். கெட்டிக்காரர்கள்! (இன்று வாய் திறக்க முடிந்த தமிழன், மனிதக் குணங்களைத் தொலைத்தவனாயிருக்க வேண்டும் என்று நண்பரொருவர் சொன்னது சரியாய்த்தானிருக்கிறது!)

✉ **பொதுக் கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பி.யினர் செய்த துரோகம் பற்றி?**

-ஆர்.பிரியதர்ஷினி, கொழும்பு - 13.

எதற்கெடுத்தாலும் துரோகம் என்ற வார்த்தையைப் போட நாம் பழகி வைத்திருப்பது அவ்வளவு சரியில்லை. என்னைப் பொறுத்தவரை வெளிப்படையாகத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் அவர்கள் குறித்து அதிகம் கோபப்படத் தேவையில்லை. கமுக்கமாயிருந்து கொண்டே கட்டமைப்பைக் குழப்பிவிட எண்ணுபவர்களைத்தான் நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

ஏனென்றால் - பொய் சொல்வதென்பது வார்த்தைகள் மூலம் மட்டுமல்ல, மௌனங்களாலும் அது நடக்கிறது.

✉ **ஆங்கிலக் கல்வி அவசியமா?**

-இரா.குமரேசன், கினலன் எல்ல.

ஆங்கிலத்தை மேலதிக அறிவாகவும், ஆங்கிலத்தில் பேசுவது நம்பகத் தன்மைக்கு அதிகப்படியான ஒரு சான்றாகவும் நினைத்துக்கொள்ளப்படும் ஒரு சமூகத்திலேயே நாம் வாழ்கிறோம். நிலைமை இவ்வாறிருக்க, ஆங்கிலக் கல்வி வேண்டாம் என்று

### சிந்தியா பதில்கள்

முழங்குகிற எல்லோருமே ஆங்கிலம் நன்கு தெரிந்து, சமூகத்தின் உயர்நிலைக்கு வந்துவிட்டவர்களாக இருப்பதுதான் வேடிக்கையான முரண்! நம் மத்தியில், ஆங்கிலம் தெரியாமல் முன்னேறி உயர்நிலையில் உள்ள யாரேனும் ஒருவர் ஆங்கிலக் கல்வியை எதிர்த்து அபிப்பிராயம் சொல்லட்டும். நான் ஆங்கிலம் படிப்பதை நிறுத்தி விடுகிறேன்.

✉ **எப்போதும் வளராமலும் தேயாமலும் இருக்கும் நிலாவை சிந்தியாவுக்குத் தெரியுமா?**

-சு.தவக்குமார், கண்டி.

ஆமாம். தன்னிடம் ரகசியமாய் எதுவும் வைத்துக்கொள்ள விரும்பாத அந்தப் பேதைப் பெண்ணுக்கு ஓவியத்தில் பார்த்திருக்கிறேன்.

✉ **பிரேசில் உதைபந்தாட்டத்தில்தான் ஜாம்பவான்கள் என்று பார்த்தால், கரப்பந்தாட்டத்திலும் அவர்கள் கில்லாடிகள் போலிருக்கிறதே?**

-இ.பிரதீபன், தெஹிவளை.

அரங்கம் முழுவதும் மஞ்சள் வண்ணத்தில் நிறைந்திருந்த நச்சுடை வடிக்கண் நங்கையரைப் பார்த்தீர்களா! அவர்கள் உற்சாகமூட்டுவர் என்றால் வீரர்கள் எந்தப் போட்டியைத்தான் வெல்லமாட்டார்கள்!

✉ **கிழக்கின் படுகொலைகள் வவுனியாவுக்கும் வந்துவிட்டதாய்த் தெரிகிறதே?**

-ஆர்.புவனீந்திரன், வவுனியா.

வவுனியாவில் மட்டும் தமிழ்ச் சமூகம் 'சுத்தப்பட' வேண்டாமா!

✉ **மனிதர்களுக்கு காதல் எதற்காக?**

-கோபி பிரியா, கம்பளை.

காதல் அனுபவத்தில் ஈடுபட்டிருக்கும் வரை, காதல் எதற்கு என்று புரிவதில்லை. மனிதருக்கு காதல் எதற்கு என்று தெரிந்த பின்னே காதல் அனுபவமாவதில்லை!

✉ **சிரிச்சு சிரிச்சு வந்த சீனா தானா வடக்கிலிருந்து வந்தவரா?**

-எம்.எப்.எம்.முஸம்மில், கொழும்பு - 10.

ஆமாம். தன்னிடம் ரகசியமாய் எதுவும் வைத்துக்கொள்ள விரும்பாத அந்தப் பேதைப் பெண்ணுக்கு ரகசியா என்று பெயர் சூட்டிய தமிழ்க் கனவானைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன்.

✉ **விடாக் கண்டர்களை என்ன செய்வது?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

பதிலுக்கு நாம் கொடாக்கண்டர்களாக நடந்து கொள்ள வேண்டியதுதான். ஒரு முல்லா கதை :

முல்லாவும் அவர் நண்பரும் தனி வழியே பயணம் செய்துகொண்டிருந்தனர். இருவருக்கும் தண்ணீர் தாகம் எடுத்தது. ஓரிடத்தில் அமர்ந்தனர். தங்கள் பயணப் பொதியைத் திறந்து பார்த்தனர். ஒரே ஒரு போத்தலில் பால் இருந்தது.

"போத்தலில் உள்ள பாலில் பாதியை அருந்திவிட்டுத் தாருங்கள். மீதியை நான் என்னிடமுள்ள சீனியைக் கலந்து சாப்பிட வேண்டும்" என்று முல்லாவிடம் கூறினார் நண்பர்.

அதற்கு முல்லா, "தங்களிடமுள்ள சீனியைப் போத்தலினுள் போடுங்கள். கலக்கி பாதிப் பாலை நான் குடித்துவிட்டு மீதியை உங்களுக்குத் தருகிறேன்" என்றார்.

அதற்கு அந்த நண்பரோ, "நான் வைத்திருக்கும் சீனி என் பங்குப் பாலுக்கு மட்டும்தான் போதுமானதாக இருக்கிறது. நீங்கள் உங்கள் பங்குப் பாலை அருந்திவிட்டுத் தாருங்கள்" என்றார்.

நண்பர் விடமாட்டார் என்று தெரிந்துகொண்ட முல்லா, தன் பையிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்தார்.

"என்ன அது?" என்றார் நண்பர்.

"இது உப்பு. இதை நான் என்னுடைய பங்குப் பாலில் கலந்து சாப்பிடப்போகிறேன்" என்றபடி உப்பை போத்தலினுள் போட்டார்.

நண்பர் பதறிப்போய், "என்ன செய்கிறீர்கள்?" என்று கத்துவதற்குள் முல்லா மடமடவென போத்தலிலிருந்த பாதிப் பாலைக் குடித்துவிட்டு, மீதிப் பாலை நண்பரிடம் கொடுத்தார்.

உப்புக் கலந்துவிட்ட பாலைத் தன் கையில் வைத்துக்கொண்டு தவறுக்கு வருந்தினார் நண்பர்.

---

## இலக்கிய நயம்

# அன்பும் அருளும் இல்லை! இதனால் என்றும் தொல்லை!!

**தருவது முழுடில்யன்**

"என்னடா எப்போதும் ஓரடி முன்னே நகர்ந்தால் இரண்டடி பின்னால் சறுக்கிக் கொண்டே இருக்கிறதே....." என்றான் சங்கரன்.

என்னவோ குனிந்து எழுதிக் கொண்டிருந்த சாகித்தியன் நிமிர்ந்து இவனைப் பார்த்துச் சிரித்தபடி வரவேற்றுவிட்டு, "ஏன் ஏதாவது வழுக்கு மரத்தில் ஏறிப் பார்த்துவிட்டு வருகிறாயா?" என்று கேட்டபடியே பேனாவை மூடி வைத்தான்.



சிரிக்காமல் அவனருகே வந்தமர்ந்து கொண்ட சங்கரன், முதுகைக் குனிந்து முழங்கால்களில் முழங்கைகளை ஊன்றியவாறு அமர்ந்தான்.

"நம் நாட்டு அரசியலைச் சொல்கிறேன்" என்றான் குனிந்த தலை நிமிராமல்.

"அடடா.... அதுவும் ஒரு வழுக்கு மரம்தானே?" என்று மேலும் சிரித்தான் சாகித்தியன்.

"ஜே.வி.பி. தான் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக இருந்துகொண்டு பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்த விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது என்று பார்த்தால், அது விலகிப் போன பிறகும் புதிது புதிதாய் வேறு தடைகள் வந்து கொண்டுதானே இருக்கின்றன....!"

"பாராளுமன்றத்தில் வைத்துவிட்டுக் கையெழுத்து வைப்பதா.... கையெழுத்து வைத்துவிட்டுப் பாராளுமன்றத்தில் வைப்பதா என்று முட்டையா கோழியா விவாதம் தொடங்கியிருப்பதைத்தானே சொல்கிறாய்?"

"பின்னே என்னடா, நம் தமிழ்க் கூட்டமைப்பினர் கூட நம் பிரச்சினை தீரவேண்டும் என்பதைவிட, பச்சையா, நீலமா என்பதில்தானே கொடுக்கிழுத்துப் பாய்ச்சுகினம்!"

"பாவம் அவையை விடு! பிரச்சினை இருந்து கொண்டேஇருக்கிற நாட்டில் எப்படி எம்.பிக்களாயும் இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தவிர, வேறொரு துரும்பும் தங்களால் அசையாது என்பதும் நன்றாக வளைந்து நிமிரத் தெரிந்திருக்க வேண்டியது தங்களுக்குத்தான் என்பதையும் தெரிந்து வைத்திருப்பவர்கள் அவர்கள்! அவை எப்படி பிரச்சினை தீருவது பற்றிப் பேச முடியும்?"

"அதில்லையடா, ஜே.வி.பி.யையும் பிக்குகளையும் தவிர மற்ற எல்லாப் பெரும்பான்மையுடனும் பொதுக் கட்டமைப்பைக் கொண்டுவருவதை விட்டு, ஒருத்தர் மட்டும் முதலில் கையெழுத்து வைக்கட்டும் என்று இவையும் ஏன் நாண்டு கொண்டு நிற்க வேண்டும்?"

"எனக்குத் தோன்றுகின்றபடி, இந்த நாட்டிலுள்ள பெரிய பிரச்சினை இனப்பிரச்சினை இல்லை; பச்சை - நீலம் பிரச்சினைதான். அதுதான் இனப் பிரச்சினையையும் தொடர்ந்து வைச்சிருக்கு என்றுதான் சொல்வேன்" என்றான் சாகித்தியன்.

"நீ விஷயத்தை ஒரே தடாலடியாகப் பார்க்காதே. இன்றுள்ள சூழ்நிலையில் கட்சி சாராமல் என்ன செய்தால் பிரச்சினை தீரும் என்ற விவாதம் தானே பெரிதாகப் பிரசாரப்படுத்தப்பட வேணும் என்று சொல்ல வருகிறாய்?"

"ம்.... அதுக்கு நம்மவர்களும் தயாரில்லையே.....! மக்களின் தலைமை என்கிற மகத்தான பதவிகளை எல்லோருமே எவ்வளவு கேவலமாக, மக்களைத் தொடர்ந்து கஷ்டப்படுத்துவதற்கென்றே பயன்படுத்தி வருகிறார்கள்!"

"இன்று பொதுவாகவே எவரிடமும் அன்பும் இல்லை, அருளும் இல்லை. ஒருவர் மீது ஒருவர் பாயும் வெறிதான். வன்முறை விருப்பத்துடன்தான் எல்லோருமாக நாட்டைக் குட்டிச் சுவராக்கிக் கொண்டிருக்கிறோம்!"

"புறநானூற்றுப் புலவன் சொன்னது போல தீமையும் நன்மையும் நமக்கு வேறு யாரும் தர வேண்டியதில்லை. தீமையை நமக்கு நாமே தாராளமாய் தந்து கொண்டி ருக்கிறோம்."

"ம்... குழந்தையைக் காப்பாற்றும் தாயைப் போல தலைவர்களும் நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்பது அந்தக் காலப் பண்பாடு. இன்றுள்ள நம் தலைவர்கள் எவர்க்கும் அந்தக் கருணை மனம் எள்ளளவும் வாய்க்காமலிருப்பதுதான் எங்கள் துரதிர்ஷ்டம்!"

"கருணையா? புதுமைப் பித்தன் சொன்னதுபோல, அதெல்லாம் இன்று ஒரு கிழங்கு வர்க்கத்தில்தான் காணக் கிடைக்கின்றது! அதைவிடு, நீ அந்தப் பாட்டைச் சொல்லு."

"நீ பெரியவன் உனக்கு ஒன்று சொல்வேன் தப்பாக எடுத்துக் கொள்ளாதே! என்று வினயமாக வேண்டிக் கொண்டுதான் தன் கருத்தைச் சொல்ல ஆரம்பிக்கிறார் புலவர்."

"அந்தக் காலத்திலும் தலைவர்களுக்கு, பிடிக்காவிட்டால் கொலை செய்துவிடலாம் என்கிற உரிமை இருந்ததுதானே.... பயமில்லாமல் இருக்குமா? நீ மேலே சொல்லு!"


"சுருக்கமாகத்தான் சொல்கிறார். அருளும் அன்பும் இல்லாதவர் நரகத்துக்குத்தான் செல்வர். அவர்களோடு நீ சேராதே. குழந்தையைக் காப்பாற்றும் தாயைப் போல நாட்டைக் காப்பாற்று. அரச பதவி கிடைப்பது அத்தனை எளிதல்ல, என்பது அவரது அறிவுரை."

***எருமை அன்ன கருங்கல் இடைதோறு***
***ஆனின் பரக்கும் யானைய, முன்பின்***
***கானக நாடனை! நீயோ பெரும!***
***நீ ஓர் ஆகலின், நின் ஒன்று மொழிவல்***
***அருளும் அன்பும் நீக்கி நீங்கா***
***நிரயம் கொள்பவரோ டொன்றாது***
***காவல், குழவி கொள்பவரின்***
***ஓம்புமதி! அளிதோ தானே***
***அது பெறல் அருங்குரைத்தே.***

*(புறம்: 5)*

# கனடாவிலிருந்து யாழ்.வரை ஒரு அனுபவம்

**காலை** 4.30 மணி. ஓமந்தையில் நீண்ட வரிசையில் நின்றிருந்த வாகனங்களுடன் எமது வாகனமும் இணைந்து கொண்டது. ஒரு காலத்தில் உலகெங்கும் அடிபட்ட பெயரான தாண்டிக்குளத்தைத் தாண்டி வந்து


ஏ.9 வீதி

விட்டது புரிந்தது. கனடாவில் இருந்து புறப்படும்போது தாண்டிக்குளத்தில் ஒரு போட்டோ எடுக்க வேண்டும் எனத் திட்டமிட்டிருந்தேன். அது நிறைவேறாததில் சிறிது வருத்தம் மனதில் இருந்தது. என்னி வெயில் சூடு உலகமறிந்த ஒன்று. ஆனால் விடியற்காலை பனிப்புகார் என்பது நான் ஓமந்தையில் கண்ட எதிர்பாராத ஒன்று. 7.30க்குத்தான் பாதை திறப்பார்கள் எனப் பேசிக் கொண்டார்கள். இருபுறமும் இருக்கும் இரண்டொரு கடைகளில் சுடச்சுட டீ, கோப்பி குடிப்பதிலும் போதிய வசதிகள் இல்லாவிட்டாலும் காலைக்கடன் கழிப்பதில் அநேகர் பரபரப்பாக இருந்தனர். ஜெயசிக்குறு நடந்தபோது குண்டுகளினால் கிடுகிடுத்த பூமியில் நிற்கின்றேன் எனும்போதே என்னவோ செய்தது.

7.30 மணியானபோது வாகனங்களின் நகர்வு ஆரம்பமானது. வாகனத்தை விட்டு எமது உடைமைகளுடன் சென்றோம். எமது வாகனம் இராணுவத்தினராலும் எமது பொதிகள் பொலிஸாரினாலும் சோதனையிடப்பட்டன. அதன்பின் பெண் பொலிஸாரினால் அடையாள அட்டை பதிவுசெய்யப்பட்டபின் மீண்டும் வாகனம் ஏறி எமது பயணம் ஆரம்பமானது. படையினரின் கெடுபிடி என்பது அறவே இல்லாமல் சோதனை என்பது மிகவும் எளிமையாக இருந்தது கூட வியப்பைத் தரவில்லை. 'இங்கு எவ்வித வீரியோ, கட்டணமோ அறவிடப்படமாட்டாது' எனும் படையினர் மாட்டி வைத்திருந்த அறிவித்தல் பலகை ஆயிரம் விடயங்களை, சொல்லாமல் சொன்னது. இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உடனான பிரசன்னத்தின் பின்னர் குறுகிய தூரமே உடைய யுத்த சூனிய பிரதேசத்தைக் கடந்து புலிகளின் சோதனைச் சாவடியை வந்தடைந்தோம்.

புலிகளின் பாஸ் அலுவலகம் எனக் கூறப்பட்ட அப்பகுதி கொட்டகைகள் மயமாக நீண்டு நெடிந்து கிடந்தது. யுத்த சூனிய பகுதியைத் தாண்டி வந்த வாகனங்களில் பெரும்பான்மையானவை பொருட்களை ஏற்றி வரும் லொறிகளாகவே காணப்பட்டன. சிலவேளை அப்பகுதியில் 2, 3 நாட்கள்கூட சோதனைக்காக அங்கு நிறுத்திச் செல்லப்படுவது வழக்கம் என்று சொல்லிக் கொண்டார்கள். "விமானம் மூலம் வணிகப பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டு செல்லத் தடை செய்யப்பட் டுள்ளது" எனும் புலிகளின் அறிவித்தல் பலகை, அவர்கள் அரச கட்டுப்பாட்டு யாழ்ப்பாணத்தை எவ்வளவு தூரம் கட்டுப்படுத்த வெளிக்கிடுகின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டியது.

பொதுமக்களுக்கான பாஸ் அலுவலகமும் கூட யாழ்ப்பாணத்திற்கு வேறாகவும் வன்னிக்கு வேறாகவும் காணப்பட்டது. சிவிலுடையில் அப்பகுதியில் நிறைந்திருந்தோர் பலர் புலிகளின் புலனாய்வு உறுப்பினர்கள் என்பதை இலகுவாக அறியக்கூடியதாக இருந்தது. பதிவிற்காகக் காத்திருந்தபோது "அண்ணை உங்களை 6ஆம் நம்பருக்குப் போட்டா"



முருகண்டி

என ஒருவர் கூறினார். வட்டவடிவமான அந்தக் கொட்டிலில் வந்து அமர்ந்த புலிப் பொறுப்பாளர் ஒருவர் சாதாரணமாகக் கதைப்பது போல துருவித்துருவி விசாரணை நடத்தினார். விசாரணை முடிவில் வெளிநாட்டுப் பிரஜை என்றபடியால் 4.500 கட்டும்படி வேண்டிக் கொண்டார். இது பாஸ் டிக்கட்டில் போகும் 350 ரூபாவை விட வேறானதாகும்.

என்னுடன் வாகனத்தில் வந்திருந்த அனைவருமே தத்தம் பொருட்களுக்கு ஏதோ ஒரு வகையில் வரி கட்டவேண்டியிருந்தது. வரி கட்டத்தேவையில்லாத பொருட்கள் என் நியாயம் கதைத்தவர்களுக்கு "பொறுப்பாளரைப் பாருங்கோ" என்பதே அங்கு கிடைத்த மறுமொழியாகும். பொறுப்பாளரைப் பார்த்தால் என்ன பார்க்காவிட்டால் என்ன, கட்ட வேண்டிய வரி கட்ட வேண்டியதுதான் என்பதை பின்னர் தெரிந்து கொண்டேன்.

அக்கு வேறு ஆணி வேறாக சிதைப்பட்ட பொதிகளுடனும் புலிகளினால் வழங்கப்பட்ட பாஸ் துண்டுடனும் எமது பயணம் ஆரம்பமானது. அனைவருமே ஏதோ ஒரு வகையில் புலிகளுக்கு வரி கட்டி அந்தத் துண்டுகளையும் வைத்திருந்தனர். படையினரின் சாவடியில் 10 நிமிடத்தில் முடித்த சோதனை புலிகளின் சாவடியில் 3 1/2 மணித்தியாலங்கள் காக்க வைத்துவிட்டது மனதை நெருடத்தான் செய்தது.

நீண்ட நெடிய ஏ9 பாதை. இரு பக்க காடுகளும் தார் றோட்டும் 30, 40 வருடங்கள் அப்பகுதியை பின்தள்ளி வைத்திருந்ததையே காணமுடிந்தது. இந்தப் பூமிக்காகத்தானே யுத்தம் வருடக்கணக்கில் நடந்தது. கிரிக்கெட் ஸ்கோர் சொல்லுவது போல இருபகுதியும் எண்ணிக்கை சொல்லி யுத்தம் புரிந்த பூமி. இதே சிந்தனையுடன் இருக்கும் போது முறிகண்டி வந்து தேநீர் குடிக்க இறங்கினோம். ஆச்சரியம் என்னவெனில் அதே முறிகண்டி கோயில் கடைகள் 20 வருடங்களுக்கு முன்பிருந்ததைப்போலவே இருந்ததுதான்.

ஆனால் பயணத்தின்போது என்னைப் பாதித்த விடயம் கிளிநொச்சி. அப் பிரதேசம் அபிவிருத்தி அடைந்து காணப்பட்டது என்பதைவிட புலிகள் தமது அதிகாரத்தைக் காட்ட நிர்மாணிக்கப்பட்டதாகவே எனக்குப் பட்டது. எத்தனை பேருடைய நிவாரணப் பணம் இங்கு கொட்டப்பட்டதோ தெரியாது என அருகிலிருந்தவர் முணுமுணுத்தது எனக்கு கேட்காமல் இல்லை. பயணிக்கும் தனியார் வானங்கள் ஆனையி றவில் நின்று போட்டோ எடுப்பது ஒரு கடமை போலவே மாறிவிட்டது போலும். நாமும் போட்டோ எடுத்துக்கொண்டோம்.

முகமாலை சோதனைச்சாவடி, எமது பாஸ் அடையாள அட்டை, பாஸ்போட் ஒன்றிற்கு இரண்டு தடவை புலிகளினால் உற்றுப்பார்க்கப்பட்டபின்பே பயணம் தொடர அனுமதிக்கப்பட்டோம். தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருபவர்களை மட்டுமல்ல, செல்பவர்


ஆனையிறவு

களையும் கண்கொத்திப் பாம்பாக புலிகள் நோட்டமிடுகின்றனர். ஆனால் இவை பற்றிய எந்தக் கட்டுப்பாடுமின்றி முகமாலை படையினர் வழமையான சோதனையின்பின் எம்மை யாழ் பயணம் தொடர அனுமதித்தனர்.

20 வருடங்களுக்கு முன் இங்கிருந்து புறப்பட்டவன், 30 வருடங்கள் பின்தள்ளப்பட்ட உணர்வுடன் நகரை அடைந்து தாய் மண்ணில் கால் பதித்தேன்.

**கனடாவிலிருந்து**
**பிரகாஷ்**

*(பயணங்கள் தொடரும்......)*

## அரசியல் வேட்டுக்களுக்கு மத்தியில்

*04ஆம் பக்கத் தொடர்ச்சி.....*

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்த நாட்டில் முன்வைக்கப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஆகியவற்றுக்கெல்லாம் வேட்டு வைக்க முனைந்த சிங்களத் தேசியவாத கடும் போக்காளர்களுக்குத் தலைமை கொடுத்தவர்கள் பௌத்த துறவிகள்தான் என்பது வேதனைக்குரிய விடயம். சாது, சாது என்று தாம் போதிப்பதைக் கடைப்பிடிக்க வேண்டியவர்கள், மோது, மோது என்று யுத்த வெறியர்களுக்கு ஓதுவது நியாயமா?

ஆனால், எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் ஆட்சி கவிழ்ந்தாலும், தன்னுயிரே போனாலும் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சகல முயற்சிகளையும் எடுப்பேனென்று திடசங்கற்பம் பூண்டிருக்கும் ஜனாதிபதி, இமயத்தைப் போல் உயர்ந்து எழுந்து நிற்கிறார். ஏற்கனவே பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைத்த அதே சக்திகளே, ஜனாதிபதியின் தந்தையான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவைச் சுட்டுக் கொன்றார்கள். பண்டாரநாயக்கா கொலை வழக்கில் வணக்கத்துக்குரிய சோமராம தேரருக்கு மரண தண்டனையும், வணக்கத்துக்குரிய புத்தரகித்தர தேரருக்கு ஆயுள் தண்டனையும் வழங்கப்பட்டன. ஜனாதிபதியின் கணவரான விஜயகுமாரதுங்க இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் துணிந்து சென்று இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் புலிகளுடன் கூடப் பேசியவர். இனப் பிரச்சினைத் தீர்வுக்காக அதிகாரப் பகிர்வு என்ற வகையில் முன்வைக்கப்பட்ட மாகாண சபையை வலுவாக ஆதரித்த விஜயகுமாரதுங்க, மாகாணசபை முறையை எதிர்த்து வேட்டுக்கள் தீர்த்த ஜே.வி.பி.யினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தந்தையையும், கணவரையும் கடும் போக்காளர்களின் துப்பாக்கிகளுக்கு இரை கொடுத்த போதும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பேனென்று துணிந்து நிற்கும் ஜனாதிபதி பாராட்டப்படக் கூடியவர் என்பது மட்டுமல்ல, அவருக்கு வலுவான ஆதரவும் வழங்கப்பட வேண்டும். தமிழ் பேசும் மக்கள் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு ஜனாதிபதியெடுக்கும் முயற்சிகளுக்கு தமது ஆதரவுக் கரங்களை நீட்ட வேண்டும்.

இதே வேளை கடந்த 19ஆம் திகதி தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு தமிழ்ச் செல்வன் அளித்த பேட்டியில், "சிங்கள அரசுகள் என்றுமே தமிழ் மக்களை ஏமாற்றி வந்ததாகவும், இந்த சுனாமி நிவாரண சபையும்கூட அரசாங்கம் தன்னைத் தக்க வைத்துக் கொள்வதற்கான முயற்சியே" என்றும் கூறியுள்ளார். அதே நேரத்தில் அப்பேட்டி நிகழ்வில் கலந்துகொண்ட சிலர், யுத்தத்தைப் புலிகள் மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென்று கூறியபோது, "உரிய நேரத்தில் தலைமை உரிய நடவடிக்கையை எடுக்கும்" என்று பதிலளித்துள்ளார். இவையெல்லாம் புலிகளின் நோக்கம் குறித்து பலத்த சந்தேகங்களை எழுப்புகின்றன. உத்தேசப் பொதுக் கட்டமைப்பு ஆயுத முனையில் மக்களை மிரட்டி வைத்திருக்கும் ஒரு குழுவுக்கு சட்டபூர்வ அந்தஸ்தை வழங்குகிறது என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி தெரிவித்திருக்கும் கூற்றை உறுதிப்படுத்துவது போல் தெரிகிறது.

சுனாமி நிவாரண சபையைப் பயன்படுத்தி ஆட்சியைக் கவிழ்க்க மாட்டோம் என்று ஐ.தே.க.யின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கும் அதே வேளையில், ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்ற பாணியில் வேறு சில ஐ.தே.க. முக்கியஸ்தர்கள் பேசி வருகிறார்கள். ஆட்சியைக் கவிழ்த்து ஐ.தே. கட்சியை பதவிக்குக் கொண்டுவர மாட்டோமென்று ஜே.வி.பி. தலைவர் கூறியிருக்கிறார். ஒரு பிரேரணையாகப் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் நிவாரண சபை யோசனை ஆட்சியைக் கவிழ்க்கப் பயன்படப் போவதில்லை. நிதி மசோதாக்களில் அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டால் மட்டுமே ஆட்சி கவிழும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் சுனாமி நிவாரண சபை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளனர். இந் நிலையில் ஐ.தே. கட்சியை ஆட்சியில் அமர்த்த ஜே.வி.பி. கூறுவது உண்மையானால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு அனுசரணையாகச் செயற்படுமா? அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முயற்சிப்பதாகக் கூறும் மற்றைய கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகவே செயற்படுகின்றன என்பது உண்மையே. எதனையும் பொறுத்திருந்து பார்ப்போம்.

## எந்த கிழமையில் பிறந்தீர்கள்?

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலாபலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

### ஆதிக்கம் 9 : பிறந்த கிழமை வியாழன்

**எண்** ஒன்பது யோகத்தின் சின்னமாகும். பிறந்த கிழமையாகிய வியாழக்கிழமை நல்ல முன்னேற்றத்தின் அச்சாணியாகும். இப்படியான ஆதிக்கத்தில் பிறந்துள்ள நீங்கள் நல்லமனம் உடையவராக இருப்பீர்கள். இதயமுள்ள நல்ல குணமும் நல்ல பண்பாடுகளும் உள்ளவராகத் திகழ்வீர்கள். யாருடைய மனதையும் புண்படுத்த மாட்டீர்கள். தீயகாரியங்களைக் கனவில் கூடச் செய்ய மாட்டீர்கள். வார்த்தைகளை முட்களாகவோ, கற்களாகவோ பாவிக்க மாட்டீர்கள்.

அன்பு என்பதையும் அதன் ஆழம் என்ன என்பதையும் உங்களிடம்தான் காணலாம். இரக்கமான மனம் உடையவர்கள் நீங்கள். ஒன்றைச் சொன்னால் அதனை எப்படியாவது செய்வீர்கள். சொன்ன சொல் தவறாத நாணயமிக்க நற்பண்புள்ளவர்தான் நீங்கள். மேதைகள், மகான்கள் ஆகியோரிடம் காணப்படுகின்ற அம்சங்கள் உங்களிடம் காணப்படும். பெரிய செல்வாக்குள்ளவர்களின் அன்புக்கு ஆளாகக் கூடியவர்கள் தான் நீங்கள். இதனால் பெரிய இடத்து அல்லது பெரிய புள்ளிகளின் நட்பு உங்களுக்கு இருக்கும். எந்த ஒரு காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் எடுத்த எடுப்பிலேயே உடனடியாகச் செய்ய மாட்டீர்கள். தீர ஆராய்ந்து அதிலுள்ள சிக்கல்கள், சிரமங்கள், நன்மைகள் பற்றித் தெரிந்த பின்னர்தான் செய்வீர்கள். வீண் காரியங்களில் ஒரு போதும் ஈடுபட்டு நேரத்தையும் பணத்தையும் வீண் விரயம் செய்யமாட்டீர்கள். புகழ் பெற்றவர்களைப் பார்ப்பதற்கும், பேசுவதற்கும், பழகுவதற்கும் பிறர் விரும்புவது போல, உங்களுடன் பேசப்பழக விரும்புவார்கள். இதற்குக் காரணம் உங்களுடைய முன்மாதிரியான நடத்தைதான். நடை, உடை, பாவனை, உங்கள் பேச்சு, உங்களுடைய அறிவு, உங்களுடைய அழகு இவைதான்.

உங்கள் பிறந்த ஊரில் வசிக்கும் பேறு உங்களுக்கு இல்லை. வேறு வேறு ஊர்களில் தான் வசிப்பீர்கள். அதிகம் படித்திருக்க மாட்டீர்கள். என்றாலும் உங்கள் பேச்சும் உங்கள் தோற்றமும் உங்கள் ஆளுமையும் படித்தவர்கள் போல் காட்டும். உங்களுடைய இளமைக் காலத்தில் சிலருடன் சேர்ந்து கூட்டு வியாபாரம் செய்து சம்பாதிப்பீர்கள். கடினமான தொழில் செய்து வருமானம் தேடக்கூடிய நிலையில் நீங்கள் இல்லை. எளிதான முறையில் அதிக வருமானம் உங்களுக்குக் கிடைத்த வண்ணம் இருக்கும். உங்களிடம் அதிகமானவர்கள் வேலை செய்வார்கள். நீங்கள் என்ன தொழில் செய்தபோதிலும் உங்களின் 32ஆவது வயதிற்குப் பின்னர்தான் முன்னேற்றம் ஏற்படும்.

35, 38, 41, 44, 47 ஆகிய வயதுகளில் நிறைவான வருமானம் உங்களுக்குக் கிடைக்கும். இடையிடையே பணக்கஷ்டங்கள் ஏற்படும். இருந்தாலும் சிரமத்தைத் கொடுக்காது. உங்களது 48ஆவது வயதில் அதிக பெறுமதியுள்ள பணத்தொகை உங்களுக்குக் கிடைக்கும். இதனைக் கொண்டு கட்டிடப் பொருட்கள், மினசாரப் பொருட்கள் சம்பந்தமான வியாபாரத்தைத் தொடங்குவீர்கள். இதனால் நிறைவான குறைவில்லாத வருமானம் பெற்று ஆயுள்வரை சுகமாக வாழ்வீர்கள். 7ஆவது வயது, 42ஆவது வயதுகளில் கண்டம் ஏற்பட்டு நீங்கும். உயிருக்குத் தீங்கு நிகழாது.

தலைவலி, வயிற்றுவலி, கிறுகிறுப்பு, லேசான மயக்கம் போன்றவை உங்களுக்கு அடிக்கடி ஏற்படும். இதற்குக் காரணம் உங்களுக்கு மலச்சிக்கல் இருப்பதுதான். இதனைத் தடுப்பதற்கான உணவு வகைகளை நீங்கள் அதிகம் சாப்பிட வேண்டும். அகத்திக்கீரை, ஏலக்காய், கத்தரிக்காய், கொய்யாப்பழம், பசளைக்கீரை, வாழைப்பழம், பசுநெய், வெங்காயம், பருப்பு, நெல்லிக்காய் என்பன.

உங்களுடைய அதிர்ஷ்ட எண் என்ன தெரியுமா? அது எண் மூன்று. 3, 12, 21, 30ஆம் திகதிகளில் நல்ல காரியங்களைச் செய்யுங்கள். வெற்றி கிடைக்கும். இந்தத் திகதிகள் நீங்கள் பிறந்த கிழமையாகிய வியாழக்கிழமையில் அமைந்தால் இதன் பலன் இரட்டிப்பாகும். வெள்ளை நிறத்துணியில் பச்சை, சிவப்பு, நீலம் ஆகிய நிறத்தில் கோடுபோட்ட சேர்ட் அணிந்து வந்தால் அதிக யோகத்தை அது உண்டு பண்ணும்.

மோதிரம் அணிவதற்கு ஆசை இருந்தால் நீலநிற வட்டமான நீலக்கல் பதித்த தங்க மோதிரம் அணியுங்கள். வெற்றியும் சிறப்பும் உங்களைத் தேடிவரும்.

ஆகவே ஆதிக்க எண் 9ஐயும் பிறந்த கிழமையாகிய வியாழக்கிழமையினையும் கொண்டுள்ள நீங்கள் வாழ்க்கையில் அதிக மகிழ்ச்சி பெற்று வாழ என் நல்லாசிகள்.

**பண்பும் பாசமும் நற்குணமும் - உங்கள் எண்ணுக்கும் வியாழனுக்கும் உண்டு. உண்மையும் நேர்மையும் - உங்கள் மனதுக்குண்டு. அதனால் வாழ்வில் யோகமுண்டு.**

அடுத்த வாரம் ஆதிக்கம் 9 வெள்ளிக்கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

# முதலாம் எலிசபெத் அரசி (1533 - 1603)

## உலகை வியக்க வைத்தவர்கள்

சென்ற வாரத் தொடர்ச்சி.....

எலிசபெத்தின் முக்கிய சாதனைகளைக் கீழ்க்கண்டவாறு சுருக்கமாகக் கூறலாம்:

முதலாவது, மதச் சீர்திருத்தக் காலத்தின் இரண்டாம் பருவம் முழுவதும் அவர் இங்கிலாந்தை இரத்தக் களரியிலிருந்து காத்தார். (இதற்கு மாறாக ஜெர்மனியில் 20 ஆண்டுப் போர்களின் போது (1618-1638) 25 சதவீத மக்கள் உயிரிழந்தனர்). ஆங்கிலேயக் கத்தோலிக்கர்களுக்கும் ஆங்கிலேய மறுப்புச் சமயத்தாருக்குமிடையே (புரோட்டஸ்டன்ட்) நிலவிய சமயப் பகையை ஓரளவு தணித்து, நாட்டை ஒற்றுமைப் படுத்துவதில் வெற்றி கண்டார். இரண்டாவது, எலிசபெத்தின் காலம் எனப்படும் அவருடைய 40 ஆண்டு ஆட்சி உலகின் பெரிய நாடுகளில் ஒன்றாகிய இங்கிலாந்தின் பொற்காலம் எனப்படுகிறது. மூன்றாவது, அவருடைய காலத்தில்தான் இங்கிலாந்து ஒரு முக்கிய அரசாக உருவாகி, நூற்றாண்டுகளாகப் பேரரசாகத் திகழ்ந்தது.

எலிசபெத் இப்பட்டியலில் இடம்பெறப் பொருத்தமானவர் அல்லர். ஏனெனில் இந்நூலில் புதியவற்றைக் கண்டுபிடித்தோர், புதிய கருத்துக்களை அல்லது புதிய கொள்கைகளைப் புகுத்தியோரே இடம் பெறுகின்றனர். எலிசபெத் புதிது புனையவில்லை. அவருடைய கொள்கைகள் பிற்போக்குடையவை. ஆயினும், முற்போக்குள்ள அரசர்களின் ஆட்சியை விட எலிசபெத்தின் ஆட்சியிலேயே மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டது.

பாராளுமன்றமா, அரசரா, யார் அதிக அதிகாரமுள்ளவர் எனும் வீண் பிரச்சினையில் எலிசபெத் நேராக ஈடுபடவில்லை. அவர் கொடுங்கோலராக இருப்பதைத் தவிர்த்தார். இதனால், அவர் ஆங்கிலேய மக்களாட்சியின் வளர்ச்சிக்கு உதவினார். ஒரு குடியாட்சி அரசியலமைப்பை வழங்குவதை விட இதன் மூலம் அவர் ஆங்கிலேய மக்களாட்சிக்கு வழி வகுத்தார் எனலாம். எலிசபெத் படைத்துறை புகழ் பெற விழையவில்லை. பெரும் பேரரசை நிறுவவும் விரும்பவில்லை. (எலிசபெத்தின் ஆட்சியில் இங்கிலாந்து பேரரசாக இருக்கவுமில்லை). ஆயினும் அவரது ஆட்சியில் இங்கிலாந்து உலகிலேயே வலிமை மிக்க கப்பற் படையைப் பெற்றிருந்தது. அவரே மாபெரும் பிரிட்டிஷ் பேரரசுக்கு அடிகோலினார் எனலாம்.

எலிசபெத் காலத்திற்குப் பிறகுதான் பிரிட்டன் பல வெளிநாடுகளைக் கைப்பற்றியது. பிரிட்டிஷ் பேரரசு உருவாவதற்கு வேறு பலர் முக்கிய காரணமாக இருந்தனர். அப்பேரரசை ஐரோப்பிய ஆதிக்கம், இங்கிலாந்தின் இட அமைவு ஆகியவற்றின் இயற்கையான விளைவு எனலாம்.



அட்லாண்டிக் கரையிலுள்ள (பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுக்கல் ஆகிய) முக்கிய ஐரோப்பிய அரசுகளும் கடல் கடந்த பேரரசுகளை நிறுவின என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

இதுபோலவே, எலிசபெத் இங்கிலாந்தை ஸ்பெயின் தாக்குதலிலிருந்து காத்ததையும் பெரிது படுத்தவேண்டியதில்லை. இங்கிலாந்தின் சுதந்திரத்தை அப்போது ஸ்பெயினால் அழித்திருக்க முடியாது. இங்கிலாந்தின் கப்பற் படைக்கும் ஸ்பெயின் ஆர்மெடாவுக்குமிடையே நிகழ்ந்த போர் கடுஞ்சிக்கலான போரென்று கூறமுடியாது. (இங்கிலாந்து, அப்போரில் ஒரு கப்பலைக் கூட இழக்கவில்லை). மேலும், ஸ்பெயின் இங்கிலாந்தில் தன் படைகளை இறக்கியிருந்தால்கூட, இங்கிலாந்தை வென்றிருக்க முடியாது. ஐரோப்பாவில் வேறு எங்கும் ஸ்பெயினின் படைகள் பெரும் வெற்றிகளைப் பெற்றதில்லை. சிறிய நாடான ஹாலந்தில் ஒரு கிளர்ச்சியை ஸ்பெயினால் அடக்க முடியவில்லையெனில், இங்கிலாந்தை அதனால் வெல்ல முடியாதென்பது தெளிவு. 16ஆம் நூற்றாண்டில், இங்கிலாந்தில் நாட்டுணர்ச்சி எவ்வளவு வலிமை பெற்றிருந்ததென்றால், ஸ்பெயினால் இங்கிலாந்தை அப்போது வென்றிருக்க முடியாது.

ஆகவே, எலிசபெத்திற்கு இங்கு எந்த இடத்தை அளிப்பது? அவர் ரஷ்ய மன்னர் மகா பீட்டரைப் போல் ஒரு தனி நாட்டுக்குரியவர். பீட்டர், எலிசபெத்தைவிட புதியவற்றைப் புகுத்தியதாலும், ரஷ்யாவை ஒரு புதிய பாதையில் திருப்பியதாலும், பீட்டரைவிட எலிசபெத்திற்கு உயரிடம் அளிக்கமுடியாதென்பதை நடுநிலை நோக்குடைய ரஷ்யர் எவரும் ஏற்றுக்கொள்வர். ஆயினும், எலிசபெத் காலத்திலிருந்த இங்கிலாந்தும், ஆங்கிலேயரும் உலக வரலாற்றில் நூற்றாண்டுகளாகப் பெரும் பங்கு பெற்றுள்ளமையால் எலிசபெத்தை, பீட்டரைவிட மிகக் கீழாக மதிப்பிடுவது தவறு. எனினும் உலக வரலாற்றில் அவர்கள் இருவரையும் போல ஒரு சில மன்னர்களே சாதனைகள் புரிந்துள்ளனர் என்பது தெளிவு.

**அடுத்த வாரம் கிரிகோர் மெண்டல் வியக்க வைப்பார்.**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



**நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை**
*-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ.... வணக்கமுங்கோ....

என்ன ஒரு கல்நெஞ்சுக்கார சனங்களப்பா நீங்கள். உங்களுக்கு நிவாரணம் கிடைக்கவேணுமெண்டதுக்காக பல்லில பச்சைத்தண்ணி படாம உண்ணா விரதமிருந்தனான். ஒரு போமாலிட்டிக்காவது ஒருக்கா எட்டிப் பார்க்கக்கூடாதா..... நீங்கள் உப்பிடி ஏனோ தானோவெண்டு இருக்கிறதாலதான் ஒருவனும் அகிம்சையாக வீதியில இறங்கமாட்டன் எண்டு இருக்கிறான். நான் என்ன எண்ட வீட்டுக்கு வெள்ளையடியுங்கோ எண்டே விரதமிருந்தனான். உந்தப் பொதுக் கட்டமைப்பை அமைக்காதேங்கோ எண்டு அவை சாகும் வரை உண்ணா விரதமிருந்திச்சினம். நாங்கள் மட்டும் என்ன ஏப்ப சாப்பையோ எண்டுதான் நானும் களத்தில குதிச்சனான். காவி உடைக்காரரின்ர கழுத்து நெரிப்புக்கு ஜனாதிபதி அசைஞ்சு கொடுத்துப் போடுவாரோ எண்ட பயமும் எனக்கு இருக்கத்தான் செய்தது. ஒருவேளை மெடம் என்னைப் பலி பீடத்துக்கு அனுப்பிப் போடுவாரோ எண்டு நினைக்கேக்க.... சத்தியமாச் சொல்லுறேனுங்கோ, தண்ணிபடாத தொண்டையில இருந்த ஈரமும் வறண்டு போட்டுது. என்ர நம்பிக்கையை அடிக்கடி கேள்விக்குள்ளாக்கியது உந்த ஜே.வி.பி.க் காரர் தானுங்கோ. அங்கையொரு ஆர்ப்பாட்டம், இங்கையொரு ஆர்ப்பாட்டம் எண்டு கொஞ்ச நாளாய்ப் படுத்தின பாடு பெரும் பாடாப் போட்டுது. என்னதான் சொல்லுங்கோ, ஜனாதிபதி எங்கட நாட்டு அரசியலிலை வலு தெளிவாவும், துணிவாவும் இருக்கிறா எண்டதை நிரூபிச்சுப் போட்டா. அவாவின்ர துணிச்சலில கொஞ்சம் கடன் வாங்கி உடம்பில பூசிக்கொள்ளுங்கோ எண்டு சொல்லுறவிதமாவும் சில பேர் அரசியல்வாதியளா இருக்கினம். என்ன செய்வம், உந்தக் கலியுகத்தில ஆம்பிளையள் பொம்பிளையள் மாதிரியும், பொம்பிளையள் ஆம்பிளையள் மாதிரியும் செயற்படுகினம். எவர் எப்புடிப் போனாலும் எங்கட நாட்டில அமைதி நிலவுதெண்டால் அது போதும்.

ஜனாதிபதி அண்மைக்காலமாக தெரிவிச்சுவருகிற கருத்துக்களையும், நியாயங்களையும் பார்த்தால், மெடம் ஏதோ ஒரு தீர்மானத்தில இருக்குமாப் போலத்தான் தெரியுது. இவ்வளவு வருசமும் எங்கட நாட்டு அரசியல் எண்டாலே எட்டடி தள்ளி ஓடின சனத்தை இப்ப நெருங்கிவரச் செய்து போட்டா. அது மட்டுமே, தன்ர இமேஜையுமெல்லோ கூட்டிக்கொண்டா. எங்க கடைசிக் காலத்தில கதையே இல்லாம கதிரையைக் காலி பண்ணுவாவோ எண்டு பகல் கனவு கண்டவைக்கு நல்லா கரண்டியை காயவைச்சு கையிலை கொடுத்துப் போட்டா.

இப்பதான் இலங்கையின்ர முதல் பிரஜையாக ஜனாதிபதி இருக்கிறா எண்டதைக் காட்டிப்போட்டா. நடக்கிற குழப்பமெல்லாம் நடக்கட்டும், நமக்குத் தேவை நாற்காலி எண்டு, ஜனாதிபதிப் பதவி எண்ட பட்டு வேட்டிக்கு ஆசைப் படுறவை, இருக்கிற கோவணத்தையும் இழக்காமல் இருந்தால் சரிதான். ஏன் சொல்லிறன் எண்டால், கூட இருந்து கொண்டே கூட்டாளியின்ர கோவணத்தை குறி வச்சவை, இப்ப தங்கட கோவணத்தையும் இழந்து இனி கூச்சல் போடப் போகினம்.

அரசியல் குழப்பம் ஒரு பெரும் குழப்பமாக இருந்தாலும் ஜனாதிபதியினுடைய பக்கம் சனத்துக்கு ஒரு அனுதாபமும், ஆதரவும் அதிகரிச்சிருக்கு எண்டதுதான் சில அரசியல் குள்ள நரிகளுக்கு குலை நடுக்கத்தோடை காய்ச்சலும் வந்திருக்கு. மிச்சமிருக்கிற ஒரு வருஷத்துக்குள்ளாக மெடம் என்ன செய்யப்போறாவோ தெரியல்லை..... அடடடா.... ஆரம்பிச்ச சப்ஜெக்டை விட்டு ரெக் மாறிப் போயிட்டன். ஆயுதத்தோடை வந்து விரட்டிறவனுக்கு குடுக்கிற மரியாதையையும், பக்தியையும் அகிம்சை வழியில போராடுறவனுக்குக் குடுக்கமாட்டேன் எண்டுறியளே. உப்பிடி நீங்கள் மீனுக்கு வாலையும், பாம்புக்குத் தலையையும் காட்டிக் கொண்டு இருப்பியள் எண்டால், உங்களுக்காக உண்ணா விரதமிருக்கவும் தயாரா இருக்கிற என்னைப் போல போராளிகள் எந்த முடிவுக்கு வாறதெண்டதிலை கன்பியூஸ் ஆகிப்போடுவம்.

பரவாயில்லை, நடந்தது நடந்திட்டுது. நானும் ஏதோ தெய்வாதீனமாத் தப்பிட்டன். இனியாவது உப்பிடி இருந்து போடாதேங்கோ. ஆயுதத்துக்குப் பின்னாலையும் போகாம, அகிம்சைக்குப் பின்னாலையும் போகாம இருப்பியள் எண்டால், ஏதோ வில்லங்கத்துக்குத்தான் போராட்டம் நடத்தினம் எண்டதை உண்மையாக்கிப் போடுவியள் போல. என்னதான் உங்களுக்கு போராட்டத்தின்ர போக்கு பிடிக்காட்டிலும் ஒரேயடியா ஒதுங்கிராமல் ஒரு ஓரக்கண்ணாலையாவது ஒருக்காப் பாருங்கோ. பிளீஸ்....

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(23.06.2005 தொடங்கி 29.06.2005 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

மிதுனம் - சூரியன், புதன், வெள்ளி, கர்க்கடகம் - சனி, கன்னி - வியாழன், கேது, மீனம் - இராகு, செவ்வாய்.
சந்திரன் தனு, மகரம், கும்பம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், பண வரவு, மனக்குறை நீங்கும், உயர்ந்த எண்ணம், குடும்ப மகிழ்ச்சி, சுபகாரிய சித்தி, உத்தியோகச் சிறப்பு, பதவிகளில் உயர்ச்சி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் அலைச்சல், செலவு மிகுதி, பெரியோர் சகாயம், பணக் கஷ்டம், குடும்பக் கலகம், உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் மந்தம், பணவரவு தடை, புதிய செலவு, வெளியார் தலையீடு, மனக்கஷ்டம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் நன்மை, காரிய சித்தி, அன்னியரால் தொல்லை, பெரியோர் பகை, உயர்ந்த நிலை, குடும்பப் பொறுப்பு, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.) தொழில் பகை, மனக்கலக்கம், வெளியிடப் பயணம், இனசன நன்மை, குடும்ப மகிழ்ச்சி, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் பலிதம், மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை, கௌரவம், வெளியிட வாழ்க்கை, குடும்ப நன்மை, உத்தியோகச் சிறப்பு, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் மேன்மை, பலவிதப் பேறு, மனக்குறை நீங்கும், பண வரவு, குடும்ப உயர்ச்சி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**விருச்சிகம்:** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.) தொழில் மாற்றம், புதிய தொழிற் முயற்சி, பிரயாண மிகுதி, பணக்கஷ்டம், முயற்சி பலிதம், குடும்ப மேன்மை, பிள்ளைகளால் தொல்லை, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 07.**

**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.) தொழில் கஷ்டம், வீண் தொல்லை, பண விரயம், மனக் கலக்கம், அன்னியர் உதவி, குடும்பக் கலகம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் பலிதம், பணவரவு, மனமகிழ்ச்சி, தூர இடப் பயணம், தேகசுகம் பாதிப்பு, குடும்பக் கலகம், உத்தியோகச் சிரமம், கூடுதல் வேலை, மாணவர் கல்விக் குழப்பம், புதிய கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் மேன்மை, பொருள் வரவு, உயர்ந்த நிலை, பெரியோர் நட்பு, குடும்பச் சுமை, உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் கஷ்டம், பண விரயம், அன்னியர் உதவி, தேகசுகக் குறைவு, பிரயாண மிகுதி, குடும்பக் கஷ்டம், உத்தியோகச் சிக்கல், வீண் குறை கேட்டல், மாணவர் கல்வி நன்மை, புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


# இதய வீணை

தினமும்
மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை
கிழக்கு மாகாணம் 107.9, 104.6
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6


அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்... செய்திகளாய்... நமது காதுகளில்

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Localization : | 13° East |
| Frequency : | 11013 MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |

## சதக் சதம்


இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சனத் ஜயசூரிய அண்மைக்காலமாக தனது விளையாட்டுத் திறனை வெளிப்படுத்தவில்லை என்பது இரசிகர்களது குற்றச்சாட்டு. இக் குற்றச்சாட்டை பொய்ப்பிக்கும் விதமாக, ஜயசூரிய அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இடம்பெறும் அனைத்து நாடுகளையும் கொண்ட கிரிக்கெட் போட்டித் தொடரில், 79 பந்துகளை எதிர்கொண்டு 101 ஓட்டங்களைக் குவித்தது பெருமைதான். நீண்ட நாட்கள் இடைவெளியின் பின்னர் ஜயசூரிய கொடுத்துள்ள ஒரு அதிரடி சதம் இது. புலி பதுங்குவது பாய்வதற்கே.

---

கையில் தாஜ்மஹாலைத் தூக்கிக் கொண்டு தனது காதலிக்காக கட்டித்தருபவன் வேறு யாருமல்ல, அக்கரைப்பற்றைச் சேர்ந்த [illegible] தான். இவர் தாஜ்மஹாலை [illegible] உருவாக்கி சாதனை ஒன்றைப் படைத்துள்ளார். மேலும் மேலும் இவர் பல சாதனைகளைப் படைக்க எமது வாசகர்களினதும் ஊக்கமும் பாராட்டுக்களும் என்றும் இருக்கும். எம்மவன் தாஜ்மஹாலையே கையில் தூக்கி வைத்திருக்கிறார் பாருங்களேன்.

## நம்மவர்





## விடுதலை... விடுதலை...

அமெரிக்கப் பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜக்சன் அண்மைக்காலமாக சிறுவர் துஷ்பிரயோக வழக்கில் சிக்கி இருந்தது தெரிந்ததே. கடந்த வாரம் இவருக்கு அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள நீதிமன்றம் ஒன்றின் ஜூரி சபையானது இவர் குற்றமற்றவர் என்று கூறி, இவரின் வழக்குகளைத் தள்ளுபடி செய்தது குறிப்பிடத்தக்கது. வழக்கு விசாரணையில் விடுதலை பெற்ற சந்தோஷத்தில் மைக்கல் ஜக்சன் கொடுக்கும் போஸ் இது. இனி சிறுவர்கள் ஜாக்கிரதை.






## என்ன விலை அழகே?

உலக அழகிப் போட்டிகள் உலகளாவிய ரீதியில் பல இடங்களில் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் இங்குள்ள அழகியும் பாங்கொக் நகரில் நடைபெற்ற உலக அழகிப் போட்டியில் முடி சூடிக் கொண்ட ராணி ஆவார். நட்டாலியா லீபோவா எனும் இவர், கனடாவைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும் தனது 12ஆவது வயதிலேயே ரஷ்ய நாட்டுக்கு முற்றாகக் குடிபெயர்ந்தவர். நாடு விட்டு நாடு வந்தாலும் அழகி அழகிதான்.

## மியாவ்...



## மீண்டும் நான்



இற்றைக்கு 450 மில்லியன் வருடங்களுக்கு முன் இருந்த யுராசிக் யுகத்தில் காணப்பட்ட மிகப் பெரிய நகருயிரான டைனோசரே இது. என்ன நம்புவதற்கு கடினமாக உள்ளதா? இந்த டைனோசரானது பல வருடங்களுக்கு முன் அழிந்திருந்தாலும் இவற்றின் எலும்புக் கூட்டினை தேடிக் கண்டுபிடிப்பதை ஆராய்ச்சியாளர்கள் இன்னும் கைவிட்டபாடில்லை. இதன் பயனாகவே இது முழுமையாகத் தோன்றியுள்ளது. பல வருடங்களுக்கு முன் அழிந்த டைனோசர் ரெக்ஸ் எனப்படும் டைனோசர் இனத்தின் முழுமையான முக எலும்புக்கூடே இது. இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட டைனோசர் எலும்புக் கூட்டில் பூரணமானதும், உயரமானதுமான எலும்புக்கூடு என்ற பெருமையை இது பெற்றுள்ளது. இதன் நீளம் 4 மீற்றர் (13 அடி) உயரம் 12.5 மீற்றர் (41 அடி) எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தென்அமெரிக்காவின் டெக்கோட்டா எனும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த எலும்புக்கூடானது இன்றும் கூட சிக்காக்கோவில் உள்ள பீல்ட் தொல்பொருள் காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

எப்படி இருந்த டைனோசர் இப்படி ஆகிவிட்டதே!

## இந்தப் பார்வை என்ன பார்வை?



கண்ணழகு கண்ணழகு என்பார்களே அது இதுதானா? பார்த்தாலே இரவில் நித்திரை வராது. முலையூட்டி விலங்குகளில் பெரிய கண்ணைக் கொண்டது தேவாங்கு என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் கண்கள் 16 மில்லிமீற்றர் விட்டம் உடையது. இதன் கண்கள் இருட்டில் கூட தெளிவாகப் பார்க்கக் கூடிய பார்வை நரம்புகளை அதிகம் கொண்டுள்ளது. இதனால் இவ் விலங்கானது இராக் காலத்துக்குரிய போசனை விலங்கு எனவும் அழைக்கப்படுகிறது. இன்னொரு விடயம் இதன் தலையை இது 180 பாகையில் சுழற்றக்கூடியதாகும். இவ்வளவு செய்யும் இத் தேவாங்கு வெறும் 1.6 மீற்றர் நீளமுடையதே. இத் தேவாங்கானது சுமத்ரா மற்றும் பிலிப்பைன்ஸ் தீவுகளின் காட்டுப் பகுதியில் அதிகமாக உள்ளது.